438

APPROVED BY THE TEXT BOOK COMMITTEE.

# MANU NITHI KANDA CHOZHEN
## AND
# OTHER STORIES.

OF THE REGISTRAR OF BOOKS
18 JAN 1928
MADRAS

(THIRD EDITION)

BY
R. VISVANATHAIYAR,
*Tamil Assistant, Teachers' College, Saidapet.*

WITH
A FOREWORD BY
M.R.RY. K. S. RAMASWAMI SASTRIAL, AVL., B.A., B.L.,
*Sub-Judge, Tanjore.*

C. COOMARASWAMI NAIDU & SONS,
MADRAS.
1927

TS
O 31(8)
N28
86260

[Annas 8.

# மனுநீதிகண்ட சோழன்

அல்லது

'அருமந்த அரசாட்சி அரிதோ மற்றெளிதோ ?'

(முசுகுந்த விஜயம், சுந்தரமூர்த்திஸ்வாமிகள் சரித்ரம்,

இவை அடங்கியுள்ளன.)

(மூன்றும் பதிப்பு.)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1[illegible] JAN 1928
MADRAS

---

இஃது

சைதாப்பேட்டை டீசர்ஸ் காலேஜ் உதவித் தமிழ்ப் போதகர்

R. விசுவநாதய்யரால்

இயற்றப்பெற்று

தஞ்சை சப்ஜட்ஜ்

மகா-ள-ள-ஸ்ரீ

K. S. இராமஸ்வாமிசாஸ்திரிகள் B. A. B. L., அவர்களின்

சிறந்த முகவுரையும் பெற்றது.

---

வி. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ்;

நெ. 35, சின்னத்தம்பித் தெரு, மதராஸ்.

---

விலை அணா 8.

Thompson & Co., Madras.

TB
031(8)
N28

86260

## FOREWORD

I have much pleasure in writing a brief foreword to this excellent brochure of Mr. R. Viswanatha Iyer which aims at presenting three of the most famous and holy facts connected with the sacred town of *Tiruvalur*. The stirring of local patriotism is the porch leading to the outer court of love of country which itself leads or ought to lead into the innermost shrine of love of humanity. I have long felt that it is because our boys do not imbibe this heavenly milk (like Tirujnana Sambandhar at his local shrine) of local patriotism that they do not grow up as adepts in lovc of country and as lovers of humanity.

The first portion of the book deals with the coming of *Sri Tyagaraja's* image to Tiruvalur. Quite naturally the second portion deals with Sri Tyagaraja's supreme devotee *Saint Sundarar-the bondslave of God and the prince of all lovers of God* - a prince to whom all lovers of holiness become bondslaves of their own freewill owing to the magical attractive Power of the Grace of God which he enjoyed and com-

municated to a sorrow-laden world bowed beneath the yoke of inauspicious stars. The third section deals with the life of *Manu Neethi Kanda Chozhen* who held aloft the banner of justice–justice which must be vindicated even though the heavens fall. What a wonder-trinity - *Divintty and Divinity and Duty!.*

... ... ... ...

May God crown his endeavour with success and fruition and public support.

TANJORE,
12*th Decr*. 1925. } K. S. RAMASWAMI SASTRI.

# முதற்பதிப்பின் நூன்முகம்.

இப்பொழுது எவ்விடங்களிலும் மதவிஷயமான கல்வி அவசியமென்றும் அதை உத்தேசித்து ஸநாதன தர்மம் முதலிய புத்தகங்களைப் பாடங்களாக வைத்து நடத்துவதைவிடப் பல மதாசாரியர்களாகிய அப்பர், மாணிக்கவாசகர், திருமங்கையாழ்வார் முதலிய பெரியோர் சரிதங்களை வாசிப்பதும், வாலிபர்கட்கு நற்குண நற்செய்கைகள் படியும்பொருட்டு பாரதம், இராமாயணம், அரிச்சந்திர புராணம் முதலிய பழைய நூல்களைப் படிப்பதுமே விசேஷமெனப் பற்பல கனவான்கள் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். ஆகையால் நமது விசுவநாதய்யரவர்கள் அச்சிடுகிற மனுநீதி கண்ட சோழன் முதலிய கதைகள் இப்பொழுது நமது கலாசாலைகளில் கற்கும், மாணவர்கட்கு அரிய பயனைத் தருமென்பதில் எனக்குச் சற்றேனும் ஐயமில்லை. மேலும் இப்புத்தகப் பிரதிகளை நான் பார்த்ததில் அவைகள் எழுதப்பட்டிருக்கும் நடை பன்னிரண்டு பதின்மூன்று வயதுள்ள மாணவர்கட்கு நன்கு விளங்கும்படியாகவே இருக்கிறது. ஆகையால் இப்புத்தகங்களை அனைவரும் ஆவலோடு அங்கீகரித்துப் பல வகுப்புகளிலும் பாடமாக வைப்பார்களென்று நம்புகிறேன்.

N. பஞ்சாபகேசன்,
Lecturer in Mathematies,
FINDLAY COLLEGE,
**MANNARGUDI.**

# முன்னுரை.

திருவாரூர் என்னும் புண்ணியக்ஷேத்திரத்தின் பெருமைகள் அளவற்றன. ஆங்குள்ள பெருங்கோயிலைச் சுற்றி நடந்துள்ள சம்பவங்கள் பல. அவைகளின் காலங்களும் தொகைகளும் இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லை. ஆயினும் அச்சம்பவங்களுள் பல உண்மையாகவே நடந்துள்ளனவென்பதற்குப் பல அத்தாக்ஷிகள் உண்டு. அவைகளுள் மிகச்சிரேஷ்டமான மூன்று ஒருங்கு சேர்க்கப்பெற்று, இச்சிறு நூலில் அமைக்கப் பட்டுள்ளன.

இதன் முதற்பதிப்பு சீக்கிரத்தில் செலவாகிவிட்டதாலும் பல பாடசாலைத்தலைவர்கள் அதனை விரித்தும் சேர்த்தும் ஒரு பாடபுத்தகமாக வைக்கத்தக்கவண்ணம் எழுதவேண்டுமென விரும்பியதாலும் 'முசுகுந்த விஜயம்,' 'ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் சரித்ரம்' இவைகளையும் சேர்த்து மூலத்தையும் விரித்து இஃது எழுதப்பெற்றுள்ளது.

இவைகளுள் 'முசுகுந்த விஜயம், என்பது சற்றேறக்குறைய முந்நூறு வருஷங்களுக்கு முன்னே பாண்டிநாட்டிலே அளகாபுரி என்னும் பதியிலே அவதரித்த வைசியரான சம்பந்த முனிவர் என்பவரால் வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுச் செய்யுள் ரூபமாக எழுதப்பெற்ற 'திருவாரூர்ப் புராணம்' என்ற

நூலை முதனூலாகக்கொண்டது. முசுகுந்தன் இக்ஷ்வாகு வம்சத்தில் மாந்தாதாவுக்குக் கனிஷ்ட குமாரனாய் அவதரித்தான். ஷட்சக்ரவர்த்திகளுள் அவன் ஒருவன். அவனுடைய காலம் இராமாயணத்திற்கும் முந்தியது என்பது ஸ்ரீ தியாகராஜர் பிரதிஷ்டை செய்யப்பட்ட காலகுறிப்பிலிருந்து காணப்படுகின்றது.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் சமயகுரவர் நால்வருள் ஒருவர். அவருடைய சரித்ரம் சேக்கிழாரால் இயற்றப்பட்ட பெரிய புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. தமிழ் வேதமாகிய திருமுறைகளில் சுந்தரரின் பாடல்கள் ஏழாம் திருமுறையாக வகுப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குத் திருப்பாட்டென்றொரு பெயருமுண்டு. அவர் பாடியவை மொத்தம் 37,000 எனினும் அவைகளுள் நூறு பதிகங்களே இப்பொழுதுள்ளவை. அவருடைய காலம் சுமார் 1200 வருஷங்களுக்கு முன்னென்று சொல்லப்படுகின்றது. 'இப்புவியில் சுந்தரருக்கு மூவாறு வயதென்றும், அவரது திருநக்ஷத்திரம் 'ஆடியிற் சோதி' என்றும் நூல்கள் கூறுகின்றன. அவர் கடவுளோடு தோழமை பூண்டு சமமாகவிருந்து பக்தி செய்தவர்.

'மனுச்சோழன்' 4500 வருஷங்களுக்குமுன் திருவாரூரில் அரசாண்ட ஒரு மன்னன். அவனது சரிதை சிலப்பதிகாரத்திலும், கலிங்கத்துப் பரணியிலும் காணப்பெற்றிருக்கின்றது. இப்பொழுது மருதன் பட்டணம், என்றழைக்கப்படும் கிராமம் 'மனுவின் பட்டணம் என்று இருந்திருக்கலாமென்றும், ஆரூரில் 'கருவாட்டுமூலை' என்றவிடம் கருவையாட்டிய மூலை யாயி

ருக்கலா மென்றும் ஊகிக்கப்படுகின்றது. சிங்கள தேசத்து மகாவம்சம் என்னும் நூலில் இவனது சரித்ரம் ஏலேலன் என்னும் மன்னனின் பெயரால் கூறப்பட்டிருக்கின்றது. பல நீதிகள் நிறைந்த இவனது புராணம் அனைவற்றினும்,

"இறைகாக்கும் வையகமெல்லா மவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்"


என்னும் திருக்குறள் வசனத்தை நன்கு மெய்ப்பிக்கின்றது.

இச்சிறு புஸ்தகத்தில் எளிய இனிமையான பாடல்கள் சில சமயோசிதமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் முன்னேற்றத்துக்குரிய யோசனைகள் எவையும் மிக்க வந்தனங்களுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

நமது ஜில்லாவின் தவப்புதல்வர்களுளொருவரும், தமது கல்விப்பெருக்கினலும் கவிசாதுர்யத்தாலும் நமது நாடெங்குமே தமது கியாதியை நிலைநாட்டியவரும், ஸநாதன தர்மத்திற்கே பூஷணமாய் விளங்குபவரும் தற்போது தஞ்சை ஸ்ப்ஜட்ஜ் ஸ்தானத்தை வகித்து வருபவருமான ஸ்ரீமான் K. S. இராமஸ்வாமி சாஸ்திரிகளவர்கள் B. A., B. L., இச்சிறு நூலுக்குத் தமது முகவுரை யென்னும் மேலான அனுக்கிரகத்தைச் செய்தருளிய பான்மை யென்றேனும் மறக்கத்தக்கதோ! அவர்பால் இவ்வாசிரியர் உணரும் நன்றி அளவற்றது.

தஞ்சை,
13—11—25.

R. விசுவநாதன்.



ஸ்ரீதியாகராஜர்.

ஸ்ரீ

# முசுகுந்த விஜயம்

அல்லது

## ஸ்ரீதியாகராஜரின்கருணைத்திறம்.

தேமலி பொழிலாரூரிற் செம்பொற்சிங் காதனத்திற்
கோமள வல்லியோடுங் கோதைவேற் குமரனோடு
நாமநீ நுலகமுய்ய நண்ணிவீற் றிருக்கும்வேதக்
காமர்பூங் கிண்கிணிக்காற் கடவுடன் காதைசொல்வாம்.

### கைலையின் சிறப்பு.

புண்ணிய பூமியாகிய நமது பரதகண்டத்தின் வடபக்கம் முழுமையிலும் மிக்க உயர்ந்த மலைகள் சூழ்ந்திருக்கின்றன. அவைகளின் உயரமும், அகலமும், நீளமும் அளவிடமுடியாதபடி அவ்வளவு பெரியனவாயும் கவிகளின் கற்பனைக்கும் அடங்காதனவாயுமிருக்கின்றன. அம்மலைகளின் சிகரங்களின்மேல் சதாகாலமும் வெண்ணிறமான பனி நிறைந்திருக்கும், ஆதலால் அவைகளுக்கு ஹிமாசலமென்று ஒரு பெயருண்டு. சூரியோதய காலத்தில் ஸ்படிகம் போன்ற

அம்மலைகளின் ஒளி பார்ப்பவர்களின் கண்களை மயக்கும். அடர்த்தியான மரங்கள் நிறைந்த அவைகளின் சாரல்களிலும் பள்ளத்தாக்குகளிலும் பசுமையான தளிர்கள் நிறைந்த மரக்கூட்டங்கள் ஆகாயத்தை அளாவிச் சூரிய கிரணங்களை உள்ளே புகவிடாமல்பரவி நிற்கின்றன. ஆங்குள்ள நீரோடைகளின் அழகையும், அவைகளின் ஓரங்களில் அச்சமின்றி அலைந்துதிரியும் மிருகக்கூட்டங்களின் தொகையையும், சதாகாலமும் இன்னிசையோடு கானகத்தில் பாடிப் பறக்கும் பக்ஷி ஜாதிகளின் பெருக்கத்தையும், வெள்ளிக்கம்பிகள் போன்று மலைச்சரிவுகளில் வழிந்தோடிவரும் அருவிகளின் அரவத்தையும் வருணிப்பது சுலபமான காரியமன்று. இவைகளேயன்றி ஆங்காங்கு வெகு இரமணியமான இடங்களில் உலகப்பற்றைத் துறந்த முனிவர்க் கூட்டங்கள் தம் ஐம்புலன்களையடக்கி ஒரே நிலையாய்த் தவத்தில் நிற்கும் காட்சி எவர் மனத்தையும் ஒரு நொடியில் உருக்கிவிடும். சிலவிடங்களில் மிக்கக் கற்றுத் தேர்ந்த இருடிகள் தங்கள் மனைவி மக்களுடனும் சீடர்களின் கூட்டங்களுடனும் ஆற்றோரங்களில் அமைக்கப்பெற்ற அழகிய பர்ணசாலைகளில் தங்கள் கர்மானுஷ்டானங்களையும் தவவொழுக்கங்களையும் செய்து நிற்பதைக் காண்போமானால் வேறு எக் காட்சியைக் காணவும் நாம் விரும்போம்.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த இமாசலமலையின் வடகிழக்குப் பாகத்தில் வெள்ளியங்கிரி என்றொரு சிகரமுள்ளது. அதன் உயரத்தையும் பருமனையும் இதுகாறும் எவரும் அளவிட்டதில்லை. உலகத்திலுள்ள எந்தச் சிகரமும் தனக்கொப்பில்லை என்பதைக்

குறிப்பாகக் காட்டுவதுபோல அது தலைநிமிர்ந்து பார்ப்பவர்கள் கண்கள் கூசும்படி உயர்ந்திருக்கிறது. அதன் சாரலில் கோடிக்கணக்கான முனிவர்கள் தம் சரீரங்களையே மறந்து ஒரே தியானத்திலிருக்கின்றனர். அதன் மத்தியில் ஸ்வர்ணமயமான மதில்களாலும் கோபுரங்களாலும் அலங்கரிக்கப்பெற்ற வெகு அழகிய ஒரு திருக்கோயிலில் உலகத்துக்கெல்லாம் இறைவனான சர்வேசுவரர் தமது பரிவாரங்களுடன் வசித்துவருகின்றனர். கணக்கற்ற பூதகணங்கள் அவ்வாலயத்தைக் காத்துவருகின்றன. பலகோடி சிவ கணங்கள் சதாகாலமும் ஈசுவரனுக்குத் தொண்டு செய்வதில் ஒன்றையொன்று நிகர்த்து நிற்கின்றன, எல்லாத்தேவர்களும், ரிஷிகளும் எப்பொழுதும் ஆங்கே கடவுளை ஸ்தோத்தரித்த வண்ணம் நிற்கின்றனர். பலவிதமான மங்கல வாத்யங்களும் ஓய்வின்றி அங்கு ஒலிக்கின்றன. இரவு பகலென்ற வித்தியாசம் யாதுமின்றி ஜோதிமயமாய் விளங்கும் அத்திருக்கோயிலைச் சுற்றிலுமுள்ள பூந்தோட்டங்களினின்று எழும் நறுமணம் ஆகாயம் முழுமையும் பரவி நிற்கின்றது.

## முசுகுந்தன் மன்னனுதல்.

இவ்விதம் தனக்குத்தானே ஒப்பாய் நிற்கும் இக்கைலாசகிரியின் தோட்டங்களுளொன்றில் ஒரு நாள் சர்வதயாபரனை பரமேசுவரன் தம்மரும் பிராட்டியுடன் உலவிக்கொண்டிருந்தனர். எல்லா உலகங்களையும் தம்முள் அடக்கிக்கொண்டிருப்பவரும், தாமே சகல ஜீவன்களிடமும் பிரகாசிப்பவரும், சர்வவல்லவருமான பரமேசுவரன் உலகங்களையீன்ற தம் பிராட்

டியான பார்வதியம்மையுடன் உலாவப் புறப்பட்டன ரென்றால் அவ்வழகையும் பெருமையையும் வருணிக்க எவராலேனும் இயலுமோ? அதற்கிணையாக வேறு எதனையும் கூறுதலுமியலுமோ? அத்தகைய வைபவத்தைக் கண்ணாரக் காணும் பாக்யத்தைப் பெற்றவரின் பெருமையை எவர்தான் அளவிடுவார்?

அத்தருணத்தில் அச்சோலையின் மரங்களினிடையில் ஒரு குரங்கு விளையாடிக்கொண்டிருந்தது. அது இத்தெய்வத் தம்பதிகளைக்கண்டு பரமானந்தமடைந்து தன் மெய்ம்மறந்து அவர்களிருக்குமிடத்தை அணுகிற்று. அது ஆங்கு மரங்களிலும் கொடிகளிலும் செறிந்திருந்த புஷ்பங்களைக் கொய்து, ஆநந்தபரவசத்தால் ஐயன் மீதும் பிராட்டிமீதும் தூவிற்று. அதனைக் கண்ட தேவி, 'இக்குரங்கு நம்மை ஏளனம் பண்ணிற்று, எனவெண்ணிச் சினந்து அதனையும் நோக்கி ஈசனையும் நோக்கினாள். அதனையறிந்த கருணைவள்ளல் தேவியை நோக்கி, "நம்மீது அன்பினால் அருச்சித்த இம் முசுவை நீ முனிவு செய்யலாமோ? வேண்டாம்." எனக்கூறி அவ்வானரத்தை யழைத்து, "அன்பனே! உன்னன்பினை நாம் மெச்சினோம். உனக்கு உண்மையான அறிவு உண்டாகட்டும்." என அருளினார். அக்கணமே அம்மிருகத்தின் முகத்தில் புதியதோர் ஒளி வீசிற்று; அதன் கண்களினின்று ஆநந்தபாஷ்பம் சொரிந்தது. உடனே அது மரத்தினின்றும் கீழே இறங்கி வந்து ஈசனையும் ஈசுவரியையும் வலம் வந்து நமஸ்கரித்துக் கைகூப்பிப் பலமுறையும் ஸ்தோத்தரித்தது.

அம்மொழிகளைக்கேட்டு இறைவர் மகிழ்ந்து அதனை நோக்கி, 'அன்பு மிகுந்த முசுவே! இன்று எம்மிருவரையும் மனமுவந்து பூசித்தமையால் நீ பூலோகத்திற்சென்று ஒரு மன்னனாய்ப் பிறந்து நீண்ட காலம் வாழ்வாய்.' எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

அதனைக் கேட்டதும் அவ்வறிவு மிகுந்த வானரம் நடுநடுங்கி, 'ஐயனே! துன்பமென்பது இன்னதென்றும் அழிவு என்பது இன்னதென்றுமே அறியாத இக்கைலாசத்தில் வாழ்ந்துகொண்டு எக்காலமும் தங்கள் தரிசனமாகிய அமுதையுண்டுகொண்டிருக்கும் எனக்கேன் இத்தண்டனை? உலகத்திற் பிறந்து அஞ்ஞானத்தால் மூடப்பெற்று உண்மையறிவையே பெறுமல் நான் தவிப்பேனே! என்னசெய்வேன்?" என வருந்திற்று. அதனைக்கண்டு கருணாநிதியான கடவுள் மனமிரங்கி, "நீ பயப்படவேண்டுவதில்லை. உலகத்தில் நீ ஒரு நிகரற்ற சக்கரவர்த்தியாவாய். நீ அஞ்ஞானத்தில் மூழ்கிப் போகாமல் நாமே வந்து உன்னைத் தடுத்தாட்கொள்வோம்.' என்றருளி மறைந்தனர்.

## முசுகுந்தனின் பெருமை.

இவ்விதம் இறைவனால் விடப்பட்ட முசுவே பூலோகத்தில் முசுகுந்தன் என்ற பெயருடன் ஒரு சக்ரவர்த்தியாய்ப் பிறந்தது. அவனுடைய கொடைக்கீழ் உலகம் முழுமையும் அடங்கிற்று. கல்விப் பெருக்கில் அவன் பணியிறையாகிய ஆதிசேடனைப் பணியச்செய்தான்; அவனது தோள்வலிமையைக்கண்டு மலைகள் மலைந்தன; அவனுடைய வீரத்தைக் கண்ணுற்று

மடங்கலும் மடங்கலுற்றது; அவனது சேனையின் கூட்டத்தின்முன் அலைகளும் அலைந்தன; கொடுக்குந் தன்மையில் அவன் கமல அலரினுக்கு அலரினை அளித் தான்; அம்மன்னன் தன்னுடைய செங்கோல் முறை யினால் தலையினைத் தொலைத்தான; அத்தகையமேன் மைதங்கிய மன்னனது கீர்த்தி ஏழு உலகங்களிலும் பர விற்று. தேவர்களும் அவனுடைய உதவியை நாடினார் கள். அரக்கர்கள் அவன் பெயரைக் கேட்டு நடுங்கினர். இவ்விதம் தனக்கு எவரும் நிகரில்லாமல் இப்பூமியை முசுகுந்தன் வெகுகாலம் அரசாண்டு வந்தான்.

## தேவாசுர யுத்தம்.

இவ்வண்ணம் பூவுலகில் முசுகுந்தன் அரசாண்டு வந்த காலத்தில் தேவலோகத்தில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் ஒரு பெரிய சண்டை மூண்டது. நன்மைக்கும் தீமைக்கும், உண்மைக்கும் பொய்ம்மைக்கும், வளர்ச்சிக்கும் அழிவுக்கும், வாழ்வுக்கும் தாழ்வுக்கும் சதாபோராட்டமுண் டா மென்பது இயற்கையன்றோ? அப்பொழுது ஒவ் வொன்று ஒவ்வொருசமயம் ஓங்குவதும், மற்றது தாழ் வதும் இயல்பேயாம். முடிவில் நற்குணங்களே ஓங்கி நிற்கு மெனினும் சாதாரணமாகிய உலகத்தில் தீக் குணங்களும் ஒவ்வோர் சமயம் மேலோங்குவதுண்டு. அஃதே போல் சத்குண ரூபிகளாகிய தேவதைகளும் பாபிகளாகிய அரக்கர்களும் போர்புரியுங் காலங்களில் ஒவ்வொரு சமயத்தில் அரக்கர்கள் வெற்றியடைந்து தேவர்களை நசுக்குவதுமுண்டு. அவ்வண்ணமே இச் சண்டையில் அசுரர்களுக்கு அதிபனான வேல்வலனேன்

னும் அரக்கன் கோடிக்கணக்கான தன்னுடைய படைகளுடன் சென்று தேவர்களை எதிர்த்து வெற்றி பெற்றான். மிக்கப் பலம் பொருந்திய இந்திரன் தன் கர்ம விதியால் தோற்று நாட்டையிழந்து ஓடினான்.

அந்நிலைமையில் வாசவன் மனத்தில் முசுகுந்தனைப் பற்றின எண்ணம் தோன்ற, அவன் மகிழ்ச்சியும் தைரியமும் அடைந்து, தன் தூதர்களை அழைத்து, 'நண்பர்களே! நீங்கள் விரைவில் பூலோகம் அடையவேண்டும். ஆங்கு பரதநாட்டில் நிகரற்று விளங்கும் முசுகுந்த சக்கரவர்த்தியிடம் சென்று வணங்கி நமக்கேற்பட்ட துன்பத்தை எடுத்துரைத்து, அவரது உதவியையே நான் நம்பியிருப்பதாகக்கூறி, அவரை அழைத்துவரவேண்டும், என்று கூறினான். அவர்கள் அங்ஙனமே சென்று முசுகுந்த மன்னன் கொலுவிலிருக்கும் வைபவத்தைக் கண்டு ஆச்சரியத்தால் மயங்கினர்.

பலசிற்றரசர்கள் அவன் பாதங்களில் விழுந்தெழுந்து ஒதுங்கிநின்றனர்; அமைச்சர்கள் ஒரு புறமும் சேனைவீரர்கள் மறுபுறமும் வரிசையாய் இருந்தனர்; நாட்டியப்பெண்கள் நர்த்தனம் செய்தனர். பலவித மங்கல வாத்தியங்கள் முழங்கின. கற்றபெரியோர்கள் பலகவிகளால் மன்னனை வாழ்த்தினர். கட்டியக்காரர்கள் அரசனின் கீர்த்திகளை எடுத்துரைத்தனர்; அச்சபையில் இராஜலக்ஷ்மீவிலாசம் நிறைந்திருந்தது. ஆங்கு தேவதூதர்கள் சென்று வெகுமரியாதையுடன் அரசருக்கு வணங்கித் தாம்வந்த காரியத்தைத் தெரிவித்தார்கள்.

## போருக்கு ஆயத்தம்.

அதைக் கேட்டதும் மன்னவன் பெருமகிழ்வடைந்து தேவர்களுக்கு அபயம் அளித்தான். அக்கணமே அவனது ஆஞ்ஞையால் அவனது படைக்கூட்டங்கள் ஒன்று சேர்ந்தன. எண்ணிக்கையற்ற கரிகளும் பரிகளும் வரிசையாய் நின்றன; பொன்மயமான இரதங்கள் வானத்தை முட்டி எழுந்தன; வாத்யங்களின் ஒலி எங்கும் பரந்து கொடிகளின் தொகை கணக்கற்றதாயிருந்தது; குடைகள் ஒன்றோடொன்று நெருங்கிச் சூரியனின் ஒளியை மறைத்தன; அப்படியுண்டான இருளை ஈட்டிகளின் ஒளி விலக்கிற்று.

இவ்விதம் முசுகுந்தனின் சேனை ஆகாயத்தில் கிளம்பிற்று. தேவேந்திரன் அவனை எதிர்கொண்டழைத்துத் தன்னிருப்பிடம் சென்று சிங்காதனத்தில் வீற்றிருக்கச்செய்து, தன் வரலாற்றை விளம்பினான். பூலோகவரசனுக்குப் பலவித உபசாரங்கள் செய்யப்பட்டன. முசுகுந்தன் தேவசேனாபதி என்ற பெயர் தரித்து மனிதர்களாலும் தேவர்களாலும் சூழப்பெற்றுக் குமரக்கடவுள் சூரபத்மன்மேல் படைக்கெழுந்ததுபோல் அவுணர்கள்மீது போருக்குக் கிளம்பினான்.

## யுத்தம்.

ஒரு நொடியில் அசுரர்கள் கூட்டமும் ஒன்று சேர்ந்து நின்றது. இவ்விருபடைகளும் பகலும் இரவும் ஒன்றையொன்று எதிர்த்ததை ஒத்துப் போர் புரிந்தன. இவ்விதம் நிகழ்ந்த போரின் அமளியால் உலகங்களெல்லாம் நடுங்கின. அன்றெழுந்த பேரிரைச்

சலால் நாகங்கள் நடுங்கிப் 'பூமிதான் உடைந்ததோ?' என்று அச்சமுற்றன. படகங்களின் ஆர்ப்பும், பம்பைகளின் ஒலியும், சங்கக்கடல்களின் சப்தமும், கறங்கின் முழக்கமும், துடிகளின் தொனியும், முழவின் ஆரவாரமும் இடியோசையை நிகர்த்தன. கரிகளும் பரிகளும், தேர்களும், பதாதிகளும் செய்த முழக்கம் கடலோசையை விஞ்சிற்று.

இருபக்கங்களிலும் போர் விசையுடன் நடந்தது. வீசப்படும் ஆயுதங்களும் அம்புகளும் ஆகாயத்தில் ஜ்வலித்தன. மேகங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்வனபோல் யானைகள் யானைகள்மேல் தாக்கின. பூமியினின்று எழுந்த புழுதி மேகம் போல் வானத்தை வளைத்தது. ஈட்டிகளின் ஒளி அம் மேகத்தினிடையே தோன்றும் மின்னற்கொடியை ஒத்தது. வாத்தியங்களின் முழக்கம் இடிபோற் கேட்டது. பூமியில் இரத்தம் ஆறாக ஓடிற்று. இருபுறங்களிலும் இறந்துபட்ட வீரர்களின் தொகை கணக்கிடப்பட முடியாது.

தன் சேனை வரவரத் தொகையிற் குறைந்து கொண்டு வருவதைக் கண்ட வேல்வலன் மிக்கச்சினங் கொண்டு தன் தேரை முன்னே செலுத்தித் தான் ஒருவனாக நின்று முசுகுந்தனோடு போர்புரியத்துணிந்தான். ஒரு கணத்தில் அவன் எவின நூறாயிரக்கணக்கான அம்புகள் மனிதர்களையும் தேவர்களையும் வீழ்த்தின. சீக்கிரத்தில் முசுகுந்தன் சேனை அவுணனின் பாணங்களுக்கு முன் நிற்க முடியாமல் பின்னடைந்தது; தேவமாதர்கள் நடுங்கினர்; இந்திரன் கலங்கினான்.

அதனையறிந்த முசுகுந்தன் முன்னிலும் அதிக உக்கிரத்துடன் போர்புரியத் தொடங்கினன். அவன் ஒரு பெரிய சிம்மம் போல் கர்ச்சித்தான். அவன் கண்களினின்று நெருப்புப் பொறிகள் பறந்தன. இப்போர் எவ்விதம் முடியுமோவென்று இருதிறத்தாரும் ஏங்கி நின்றனர். முசுகுந்தன் காலகாலனைப்போல் சினந்து நூற்றுக்கணக்காக அம்புகளை எதிரியின் தேர்மேல் விடுத்தனன். தேர்க்குதிரைகள் கழுத்தரிந்து விழுந்தன. தேர்த் தட்டுக்கள் முறிந்தன. அவுணன் கீழே நின்று போர்புரிந்தான். அவனுடைய வேலாயுதங்கள் முசுகுந்தனின் மார்பைத்தாக்கின. மன்னர் மன்னன் அதனைப் பொருட்படுத்தாமல் இன்னும் அதிகக் கொடூரமாகப் போர்புரிந்தான். அரக்கனின் கிரீடம் ஒரு நொடியில் உடைந்தது. முசுகுந்தன் வேங்கைப் புலிபோல் பாய்ந்து தேரினின்று கீழேயிறங்கி வெகு நேரம் போர்புரிந்து அரக்கனைக் களைக்கச் செய்தான். அச்சமயம் பார்த்து இந்திரன் பழிதீர்த்துக் கொள்ளும் பொருட்டு அவன்மேல் தன் வச்சிராயுதத்தை வீச அசுரன் வீழ்ந்தான்.

## முசுகுந்தனின் வெற்றிக்கோலம்.

உடனே தேவர்கள் பக்கத்திலிருந்து பேரரவம் உண்டாயிற்று. மங்கல வாத்தியங்கள் ஒலித்தன. பூமாரி பொழிந்தது. முசுகுந்தன் சரீரம் முழுமையும் மலர் மாலைகளால் மறைக்கப்பட்டது. 'ஜெய்!' என்ற சப்தம் ஆகாயத்தை நிரப்பியது. இந்திரன் மிக்க மரியாதைகளுடன் முசுகுந்தனைத் தன் யானைமேல் ஏற்றித் தானும் ஒரு விமானத்தில் ஏறிக்கொண்டான். சேனை

களெல்லாம் ஆரவாரத்துடன் முன்னே செல்ல இந்திரனும் முசுகுந்தனும் பின்னே மிக்க வைபவத்துடன் சென்றார்கள். கந்தர்வர்கள் ஆகாயத்தினின்று மலர் மாரியைச் சொரிந்தனர். பலவகை வாத்யங்கள் முழங்கின. வீதிகளின் இருபுறங்களிலுமுள்ள மெத்தை வீடுகளினின்று தேவஸ்திரீகள் மங்கலம் பாடினர். அரம்பைமுதலிய தேவமாதர்கள் நிற்க இடமில்லாமல் கோபுரங்கள் மேலும் சாளரங்கள் மேலும் நின்றனர். முன்காலத்தில் சூரபத்மனைக் கொன்று ஊர்வலம்வந்த முருகவேளைக் காண்பதற்கு எவ்விதம் ஆவலுடன் ஜனங்கள் கூடினார்களோ அதைப்போலவே முசுகுந்தனைக் காண கோடிகணக்காகத் தேவர்கள் அங்கே கூடினர். புரந்தரன் தோழனைத் தானுங் காணக் கதிரவன தன் கிரணங்களை நன்றாய்ப் பரப்பினான். கதிரவனைக் கண்ட அம்புஜங்களைப்போன்ற அரம்பையரின் முகங்கள் பூவுலக மன்னனைக் கண்டதும் மலர்ந்தன.

அவர்கள் குங்குமத்தையும் சந்தனத்தையும் வாரி வீசினார்கள். கற்பக மலர்களைக் கூடை கூடையாய்ச் சொரிந்தனர். சிலர் பனிநீரை வீசினர்; சிலர் ஆரங்களை எறிந்தனர்; சிலர் வாசனைப் புகைகளை விடுத்தனர்; சிலர் மங்கல நீரெடுத்து வந்து சுற்றினர்; சிலர் மாடங்களினின்று காசுகளை இறைத்தனர்; எங்கும் "வாழி! வாழி!" என்ற சப்தம் முழங்கிற்று.

"இன்று விண்ணுலகம் பெருமையடையும்படி ஈங்கு எழுந்தருளிய பெருமானைப் பெறப் பூவுலகம் என்னதவம் செய்ததோ?" என்றும், 'இத்தகைய மன்னனைத் தம் அரசராகப்பெற்ற மனுக்குலம் செய்த

தவம் யாதோ?' என்றும், 'அசுரர்களை ஒழித்துத் தேவவுலகத்தைக் காத்த கடலசூழ்ந்த புவனேசுவரனைக் காண நாம் முன்னம் செய்த நல்வினை யாதோ?' என்றும், 'நமது ஐராவதத்தின்மேல் ஏறும் மன்னனைப் பெறும் மனிதர்களின் பாக்கியந்தானென்ன?' என்றும் பலர் பலவாறு ஸ்தோத்திரம் பண்ணினார்கள். "உலகத்தை மூடவந்த இருளைப்போக்கும் 'சூரியன் இவனே! பாவ இருளாகிய அசுரர்களை ஒழிக்கவந்த கதிரவன் இவனே!" என்று சிலர் கூவினார்கள். "நீண்ட கோடைக்குப் பின்வந்த குளிர்ந்த மேகமோ இம்மன்னவன்? இவனே இந்திரன்! இவனே விஷ்ணுவைப் போன்றிருக்கிறான்; ஆனால் திகிரி, சங்கு இவைகளைக் காணோம்! அழகிற் சிறந்த மன்மதனைப் போன்றிருக்கிறான். ஆனால் கருப்பு வில்லைக் காணோம்! சூரர்களை வதைத்த சுப்பிரமணியக் கடவுளை ஒத்திருக்கின்றான். ஆனால் அவனுக்குள்ள ஆறுமுகங்களைக் காணோம்!" என்று இவ்வாறு ஒவ்வொருவரும் தம்மனதிற் பட்டவாறு முசுகுந்தனைக் கொண்டாடினார்கள்.

இவ்விதம் நகர்வலம் வந்து, கடைசியாக அனைவரும் இந்திரனின் பொன்மாளிகையை யணுகினர். உடனே தேவர்கோன் இரதத்தினின்றும் இறங்கி முசுகுந்தனுக்குக் கைகொடுத்து அழைத்து அரண்மனையுள் நுழைந்தான். ஆங்கு பொன்மயமான மண்டபத்தினடுவில் கண்களைப்பறிக்கும்படி வைரக் கறகளாலிழைத்த பொற்சிங்காதனத்தின்மீது இருவரும் அமர்ந்தனர். உடனே பகவான் ஏவலால் நூற்றுக்கணக்கான அரம்பையர்கள் பொற்றட்டங்களில் ஹாரத்தி சுற்றினர்.

சிங்காதனத்தின் முப்பக்கங்களிலும் நின்று கொண்டு வெண்சாமரைகளைப் பல தேவகன்னிகைகள் வீசினர்.

அச்சமயத்தில் இந்திரன் முசுகுந்தனை நோக்கி, "மன்னவரேறே! உம்முடைய உதவியாலன்றோ இன்றைத்தினம் நான் இவ்வாசனத்தில் வீற்றிருக்கப் பெற்றேன்? இவ்வுதவிக்குக் கைம்மாறாகத் தங்களுக்குச் செய்யக்கூடியது இம்மூவலங்களிலுமில்லை. இவ்வெற்றியை எனக்கு முடித்துத் தரவல்லவர் தங்களையல்லாமல் வேறு எவரும் இல்லை" என்று பலவாறு புகழ்ந்து அவனுடன் சென்று புனிதமான கங்கையில் நீராடி, அஞ்செழுத்தை யுச்சரித்துக்கொண்டே திருநீறணிந்து ஈசனைப் பூஜைசெய்யத் திருக்கோயிலுள் நுழைந்தான்.

## ஸ்ரீ தியாகராஜப் பெருமானின் வரலாறு.

ஆங்கு, சகல ஜீவன்களிடத்திலும் வியாபித்திருப்பவரான ஸ்ரீ தியாகேசன், அரையில் கட்டிய வெண்பட்டும், மார்பிலணிந்த மதாணியும் பொலிய, இருகைகள் மானும் மழுவுமேந்த, மற்றிரு கரங்கள் அபயவரத அஸ்தங்களாக அமைய, கனக சிங்காதனத்தின் மீது உமை மாதினோடும் குமரனோடும் பிரகாசித்துக் கொண்டிருந்தனர். அவ்வரிய மூர்த்தி இந்திரனிடம் வந்த வரலாற்றை இவ்விடம் சற்று விவரிப்போம்.

ஒருகாலத்தில் திருமால் தமக்கோர் மைந்தன் வேண்டுமென விரும்பிப் பரமேசுவரனைக் குறித்துக் கடுந்தவம்புரிந்தனர். அவரது வேண்டுகோளுக்கிரங்கி ஈசன் உமையாளுடன் விடைமேலேறி நேரில் வர முகுந்தன் மிக்கவாநந்தங்கொண்டு எழுந்து பணிந்து,

"ஐயனே! இன்றே நான் பாக்கியவானுனேன். என் மேல் தங்களுக்கு இவ்வளவு கிருபைவந்ததே!" என்று கொண்டாடினர். சர்வேசுரன், "உம்முடைய தவத்தால் நாம் மிக்க மகிழ்வடைந்தோம். நீர் விரும்பியதைக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறோம்." எனக் கூறத் திருமால் மகிழ்ந்து கைகளைக் கூப்பிக்கொண்டு 'என் தந்தையே! தங்கள் கிருபையால் எல்லையில்லாத செல்வங்களை நான் பெற்றிருக்கின்றேன். புவனங்களையெல்லாம் ஆளுந்தன்மையும் எவர்க்கும் எட்டவல்லாத பதவியையும் தாங்களளித்திருக்கின்றீர்கள். ஆனல்,

"சிறுவ னில்லதோர் சிறுமை யன்றியே
சிறுமை வேறிலை செங்கை வேலுடைச்
சிறிய பேரெழிற் சேயை நல்கிய
சிறிய வெண்பிறைத் திங்கள் வேணியாய்!"

"குழந்தையில்லாக் குறையொன்றே எனக்குள்ளது. வேலனைப் பெற்றதாமே இக்குறையை எனக்குத் தீர்த்துத்தரல் வேண்டும்" எனப் பிரார்த்தித்தனர். ஆனல் அச்சமயத்தில் திருமால் ஈசனுடன் கூடிவந்த பிராட்டியைக் கவனிக்கவுமில்லை. அவரை வணங்கவுமில்லை; விதியின் வழியே மதிசெல்லுமன்றோ?

தயாபரரான தியாகேசன் திருமால் விரும்பியபடியே வரமளித்தனர். ஆனல் அப்பொழுது தாம் அவமதிக்கப்பட்டதாக எண்ணின அம்மை வெகுண்டு, "முகுந்தனே! என்னை அவமதித்த தன்மையால் உன் மைந்தன் அற்ப ஆயுளையுடையவனுவான்." எனச் சபித்துத் தம் கணவருடன் கைலைக்கேகினர்.

பிறவிக் குருடன் கண்களைப் பெற்று அப்பொழு

தே அவற்றை இழந்த தன்மைபோல் அரிதில் வரம் பெற்ற அக்கணமே சாபத்தையும் பெற்ற நாராயணன் மனம் வருந்தி, "இவ்வினையை விலக்க வல்லார் அப் பெருமான் பெருமாட்டியாரைத் தவிர வேறு யாருள் ளார்? அவர்களே நமக்கு அடைக்கலம்." எனத் தேறி, ஆங்கே உயர்ந்த செம்பொன்னால் ஒரு சிங்காதனம் செய்து அதில் சர்வேசுவரனையும் உமையையும் கந்தனை யும் ஸ்தாபித்து அந்த ஸோமாஸ்கந்தமூர்த்தியை வெகு காலம் பூஜைசெய்து வந்தார். இவ்விதம் பலவாண்டு கள் கழிந்தன. அதன்மேல் ஈசுவரன் ஒரு நாள் விஷ்ணுவின்முன் விருஷபாரூடராய் அம்மையுடனும் கந்தனுடனும் தோன்ற, ஸ்ரீதரன் ஆநந்தங்கொண்டு எழுந்து, முதலில் அம்மையையும், பின்பு கந்தரையும் நந்தியையும் கடைசியாகக் கடவுளையும் வணங்கித்துதித் தனர்.

இவ்விதம் பத்மநாபன் முதலில் தேவியையும் கந்தனையும் வணங்கிப் பின்பு கடவுளை வணங்கினர். பின்பு அவர்தேவியை நோக்கி, "அன்னாய்! உலகேழும் ஈன்ற பெருமாட்டீ! தங்களை நான் அவமதித்தலும் இயலுமோ? சூரியனினின்று அவன் ஒளியைப் பிரித் தல் முடியுமோ? மலரினின்று மணத்தை வேறுக்கச் சாத்தியமாமோ? அதைப்போலவே சர்வேசுவரனி னின்று தங்களைத் தனிமையாக நான் எவ்விதம் பாவிப் பேன்? ஆதலால் தங்களிருவரையும் ஒரு பொருளா கக் கருதித் தம்மைத் தனித்து வணங்கத் தவறின என்னை க்ஷமிக்க வேண்டும். தாங்கள் எனக்கிட்ட சாபத்தை மாற்றியருளவேண்டும்'' எனப் பிரார்த் தித்தனர்.

அதைக்கேட்டு உமையாள், "அன்பரே! என் சாபத்தை முற்றிலும் ஒழிக்கமுடியாது. எனினும் உம் தவத்திற்கிரங்கி அதனை மாற்றுவேன். உம் மைந்தன் எம்பெருமானின் நெற்றிக் கண்ணினின்று எழும் தீயினுற்பட்டொழியினும் அவன் உயிருடனிருப்பான்; இதுவே நான் செய்யத்தக்கது." எனமொழிந்தனர்.

அதனைக் கேட்டுச் சற்று மனந்தேறிய வாசுதேவன் பின்னும் அவர்களைப் போற்றப் பரமேசன் அன்பு கொண்டு, "மதுசூதனரே! இன்னும் நீர் வேண்டும் வரம் ஏதேனுமுளதோ"? என அவர்,

" எந்தை யர்ச்சனை நாளு மிழைத்தியா
னுய்ந்திடத் திரு வுள்ள முகந்துமை
கந்தன் மற்றிவ ரோடு கலந்து நீ
யிந்த முப்படி வத்தி லிருத்தியால்,"

"என் தந்தையே! நான் தங்களைச் சதாகாலமும் பூஜை செய்து கொண்டிருக்கும் வண்ணம் உமையாளோடும் கந்தனோடும் இம்மூன்று வடிவங்களிலும் இருந்துவரல்வேண்டும்" என வேண்டினர். 'அவ்விதமே ஆகுக.' எனக் கடவுள் மொழிந்து அக்கணமே அம்மூன்று விக்ரகங்களுள்ளும் புகுந்து மறைந்தனர். அவைகளின் தேஜஸையும் அருள் நிறைவையுங்கண்டு மதுசூதனன் மகிழ்ந்து அப்படியே அந்த ஸோமாஸ்கந்த மூர்த்தியைச் சிங்காதனத்தோடு எடுத்துத் திருப்பாற் கடலையடைந்து, தம் மார்பாகிய கோயிலில் வைத்துப் பூஜை செய்து வரலாயினர்.

கரியதோர் மேகம் வெள்ளிமலைமேல் தங்கியது போலப் பெரிய சரீரத்தையுடைய ஆதிசேடன் மீது பள்ளிகொண்ட பத்மநாபன் பெருமூச்சு விடுதலால் மேலுங்கீழும் அசைக்கப் பெற்றவராய் ஸ்ரீ தியாகேசர் நடனம் புரிந்துவந்தனர். அருள் கொண்டு அவர் அசைந்தாடிய கருணையினால் பன்னகசயனன் தாம் விரும்பிய எவ்வகைப் பேற்றையும் பெற்று முன்னிலும் பன்மடங்கு பெருமையுடன் விளங்கினர்.

இப்படியிருக்குங் காலத்தில் ஒருமுறை கஷ்டகாலம் தேவர்களைப் பாதிக்க அவர்கள் ஒரு பெரிய அரக்கர் கூட்டத்தால் தோல்வியடைந்து துரத்தப்பட்டனர். தேவேந்திரன் தன் பெருமையெல்லாமிழந்து நாட்டை விட்டோடித் தன் பரிவாரங்களுடன் திருப்பாற்கடலை யடைந்து, ஆங்கு பள்ளிகொண்டிருந்த அனந்தசயனனைக்கண்டு, தன் குறையைச் சொல்லி இரந்தனன். அம்மொழிகளைக் கேட்ட ஸ்ரீ தரன் மனமிரங்கி, இந்திரனையும் தேவர்களையும் நோக்கித் "தேவர்களே! உமையுடனும் முருகனுடனும் கூடியவரும், என் உயிரானவரும், என்னாற் பூசிக்கப் பெற்றவருமான இப்பெருமானை எவரேனும் பூசித்து வருவாரானால் அவர் பெறத்தகாததொன்றுமுண்டோ? ஆதலால் நீங்கள் உய்ய வேறொரு மார்க்கமுமில்லை. இம்மூர்த்திதனைக்கொண்டு சென்று முறையுடன் பூஜைசெய்து வருவீரானால் உங்கள் பகையை எளிதில் வெல்வீர்!" எனத் திருவாய் மலர்ந்தருளினர். அவ்விதமே வெகு மரியாதையுடன் அச்சிம்மாசனத்தோடு இந்திரன் எம்பெருமானை எடுத்துவந்து பூசிக்க அவன் மிக்க வலிவடைந்து, அவுணர்களைக் கொன்று இழந்த நாட்டைத் திரும்பவும் பெற்றான்.

# இந்திரன் பூஜை.

அத்தகைய அரியதோர் மூர்த்தியைப் பூஜைசெய்யவே வேல்வலனை யழித்தபின்பு இந்திரன் முசுகுந்தனுடன் சென்றான். அவன் சுத்தமான நீரில் ஸ்நானம் செய்து, குற்றமற்ற திருநீறணிந்து, பரிசுத்தமான ஐந்தெழுத்தை ஜெபித்துக் கொண்டே கோயிலுள் நுழைந்தான். ஆங்கு காமதேனுவின்பால், அமுதம், முக்கனி, தேன், வாசனைபொருந்தியசந்தனம், கங்காஜலம் இவைகளைக்கொண்டு விதிப்படி அபிஷேகங்கள் செய்தான். பின்பு செங்கழுநீர்மாலை, செவ்வந்திமாலை, கற்பகப்பூமாலை முதலிய மாலைகளைச் சூட்டி, வாசனையுள்ள சாந்துபூசி, தூபதீப நைவேத்யங்களெல்லாம்செய்து இருகைகளையும் தலைமேற்றூக்கி ஸ்தோத்திரம் செய்யவாரம்பித்தான்.

அப்பொழுது ஐயனிருந்த அழகை எவரே வருணிப்பார்? இடையிலணியப்பெற்ற பட்டாடையின்ன, மார்பில் தரித்த பூணூல் ஒலிய, மானும் மழுவும் ஏந்தின இரு கைகளும வரத அபய ஹஸ்தங்களாகிய இரு கைகளும் கண்டோர் மனதைக்கவர, மேருமலையையடைந்த இரு சூரியர்கள் போல இரண்டு காதுகளினின்று தோள்களிடம் தொங்கும் குண்டலங்கள் ஒளிவீச, அவ்விரு பரிதிகளின் முன் மலரும் தாமரைப் புஷ்பம் போல் முகம் மலர்ச்சிகொள்ள, அம்முகத்தினிடையே உலகத்துள் தோன்றியுள்ள இருளையகற்றவே அமைந்துள்ளனபோன்ற முக்கண்கள் ஜொலிக்க, பவளத்தை நிகர்த்த உதடுகளினின்று எழும் புன்னகையென்னும் நிலவு முடியினின்று வீசும் சந்திரன் ஒளி

யை வெல்ல, அரிய மணிகளாலாக்கப்பட்ட மாலைகள் மார்பினிற் புரள, பிரமன் முதல் சகல ஜீவராசிகளையும் பெற்றருளிய பெருமாட்டியும், அசுரர்களை வென்ற கந்தனும் பக்கத்தில் உறைய, இனிது வீற்றிருந்தனன்.

## முசுகுந்தனின் மனப்பான்மை.

அப்பொழுது முசுகுந்தன் அவ்வரிய காட்சியைக் கண்டு மனம் உருகித் தன்னை மறந்து அப்பெருமானிடமே மனஞ்செலுத்தி நின்றான். அவரும் இந்திரன் அறியாத வண்ணம் முசுகுந்தனுக்குக் காட்சி கொடுத்து அருள்செய்ய, அவன் தன் அஞ்ஞானமெல்லாம் ஒழிந்து தன்னுடைய பிறப்புவரலாற்றை முழுமையு முணர்ந்தான். தன்னிலைமையை யறிந்தவுடன் அந்நிருபன் மனம் உருகினான்; வீழ்ந்தெழுந்தான்; ஆநந்தமான சாகரத்தில் மூழ்கினான்; உடலெல்லாம் பொடித்தான்; பழைய கொடிய வினைகளெல்லாம் அவனை விட்டொழிந்தன; அவன் தன்னை மறந்தான்; உணர்வழிந்தான்; அவன் கண்களினின்று ஆநந்த பாஷ்பம் ஆறாகப் பெருகிற்று.

> உரைதளர்ந்தனன் உபயதா மரைவிழி முத்த
> நீரைசோர்ந்தன னாடினன் பாடினன் வீங்கி
> யருகணைந்தநற் றயைநேர் குழவிபோ லானன்
> புரவலன்றனி யன்பின தியல்பையார் புகல்வார்?

அவன் வாய் பேசமாட்டாமல் குழறிற்று. இரு கண்களினின்றும் பெருகும் நீர் வெள்ளமாய் ஓடிற்று. அவன் ஆடினான்; பாடினான்; விட்டுப்பிரிந்த தாயைக் கண்ட குழந்தைபோலானான். அவனது தன்மையை

எவரே விவரிப்பர்? இவ்விதம் தன்னை மறந்து துதித்து நிற்கும் மன்னனை நோக்கி ஐயன் இந்திரனறியாமல், "அன்பனே! நிறைசெல்வத் திருவாரூருக்கு எம்மை எடுத்துச் சென்று ஆங்கு ஸ்தாபித்துப் பூசனை புரிவாய்." என இத்திருநகர் செய்தபாக்கியத்தால் அருள் புரிந்தனர்.

"கண்ணகன் புவனங்காக்கும் கடவுளுங் கடவுளோர்த
மண்ணலும் பூசைசெய்த வமலனீ யெம்மைப்பூசை
பண்ணுதி கொடுபோயென்று பகர்ந்தன னென்னிலந்தப்
புண்ணிய வேந்தன்செய்த புண்ணியம் புகலற்பாற்றே?"

இடமகன்ற பூமியைக்காக்கும் திருமாலாலும் தேவேந்திரனாலும் பூசை செய்யப்பட்ட இப்புனித மூர்த்தி தாமாகவே, 'நீ கொண்டுபோய் என்னைப் பூசிப்பாய்' என்று கூறுவாரேயானால் அவ்வரசனின் பாக்கியத்தை யாரே விவரிக்க வியலும்?

இவ்விதம் முசுகுந்தனுக்கு அருள் செய்து முன்போல மூர்த்திகாரமாய் அமர்ந்து விட்டார். இந்திரனுக்கு இச்செய்தியொன்றும் தெரியாது. அவன் வழக்கம்போலப் பூசைகளைச்செய்து முடித்துக் கடவுளிடம் விடைபெற்றுத் தனது அரண்மனைக்கேகினன். ஆங்கு காமதேனுவை வரவழைத்து வெகு ஆடம்பரத்துடன் முசுகுந்தனுக்கு விருந்தளித்தான். செய்வற்கரிய விருந்தளித்துப் புதிய பட்டாடைகள் அணுவித்துத் தமது கையினாலேயே பல வாசனைப் பொருள்கள் கலந்த சந்தனம் பூசினன். பின்னும் அம்மன்னனுக்கு விசேஷமான பொற்குவியல்களும், உயர்ந்த ஆபரணங்களும், வஸ்திரங்களும், கணக்கில்லாமல்

வழங்கப்பட்டன. அவ்விதமே முசுகுந்தனைப் பின்பற்றிவந்த சேனாவீரர்கள் ஒவ்வொருவருக்கும் மனத்திருப்தி யடையும்படி பரிசுகள் கொடுக்கப்பட்டன. கற்பகமும், சிந்தாமணியும், காமதேனுவுமுடையவருக்கு எதுதான் அரிது?

## இந்திரனின் ஏமாற்றம்.

இவ்விதம் மரியாதைகள் யாவையும் செய்தபின்னர் தேவவரசன் முசுகுந்தனுக்குப் பல உபசாரவார்த்தைகள் சொல்லிப் பின்பு அவனை இறுகத் தழுவிக்கொண்டு, "நண்பரே! நீர் எனக்குச்செய்த நன்றிக்கு நான் செய்தனவெல்லாம் சற்றும் போதா; இன்னும் நீர் விரும்புவது ஏதேனுமுண்டோ? உண்டானால் சற்றும் தாமதியாமல் கேளும். நான் அவைகளைக் கொடுப்பேன்." என்றான்.

சமயம் எப்பொழுது வாய்க்குமெனக் காத்திருந்த சக்ரவர்த்தி உடனே, "ஐய! நீ பூசையாற்றும் அமலனைத் தருதி" என்றனன். அம்மொழிகளைக்கேட்டவுடன் இந்திரன் மனங்கலங்கினான். "இத்தகைய கேள்வியைக் கேட்பாரென்று சிறுதும் ஆலோசியாமல் வாக்களித்துவிட்டேனே! தேவலோகத்துக்கே ஆபரணமாயிருக்கும் இம்மூர்த்தியைக்கொடுத்து நான் எவ்வித மிருப்பேன்? பூலோகம் இவ்வளவு பாக்கியமும் செய்யத்தக்கதோ? இனி வார்த்தையிற்பிறழ்தல் ஒழுங்கில்லை." என்று பலவாறு யோசித்து மன்னனைநோக்கி, 'நண்பரே! அவரைக் கொடுக்க எனக்குச் சுதந்தரமில்லை. நான் ஒரு அவசரநிமித்தம் மகா விஷ்ணுவிட

மிருந்து இம்மூர்த்திகளைப் பெற்று வந்தேன். ஆதலால் அவருடைய அனுமதி பெற்று வந்தால் நான் அவைகளை கொடுக்கத் தடைசொல்லேன். என்று கூறினன்.

உடனே முசுகுந்தன் திருப்பாற்கடலுக்குச் சென்று திருமாலைப்பிரார்த்திக்க அவர் அவன் வேண்டுகோளுக்கு இணங்கினர். அதனை அவன் இந்திரனிடம் தெரிவித்தலும் அவன் ஏக்கங்கொண்டு மற்றொரு சூழ்ச்சி செய்தான். தெய்வத்தச்சனை விசுவகர்மாவைக்கொண்டு உண்மையான தியாகேசமூர்த்தியைப் போல ஆறு அழகிய உருவங்கள் செய்வித்து அவைகளை ஒவ்வொன்றாக முசுகுந்தனிடம் காட்டி எடுத்துப் போகச் சொன்னன். ஈசனருளினல் இந்திரனின் சூழ்ச்சியை யறிந்த மன்னவன் போலியான ஒவ்வொன்றையும் புறக்கணித்து, 'காரணன் மார்பில் இனிதமைந்தாடி வீற்றிருந்த உவமை தீர்ச் சுருதி அரவக்கிண்கிணிக்கால் ஒரு திருமூர்த்தியைக்', காட்ட, அவரும்,"நீ விருப்புற்ற மூர்த்தி யாமே" என்று இந்திரனறியாமற் கூறினர். உடனே முசுகுந்தன் பேருவகை பூத்து, "நண்பரே! இதுவே நான் விரும்பும் மூர்த்தி; இதனைத் தருக". என வேண்டினன். இந்திரனும் தனக்குப் பிராப்தம் அவ்வளவுதானென்று உணர்ந்து, அப்புனித மூர்த்தியையும் மற்ற ஆறு மூர்த்திகளையும் முசுகுந்தனிடம் கொடுத்து, அவைகளைப் பூசிக்கும் விதத்தையுங் கூறி, அவைகளுக்கெனவே ஏற்பட்ட வாத்தியங்கள் பூஜைக்குரிய உபகரணங்கள் முதலியவற்றையும் ஈந்தனன்.

## தியாகராஜ ஸ்தாபனம்

அவைகளைப் பெற்றுக் கொண்டு முசுகுந்தன் புறப்பட்டான். இந்திரன் தன் பரிவாரங்களுடன் அவனை பின்தொடர்ந்து பூவுலகிற்கு வந்து, புண்ய நகரமாகிய ஆரூரைச் செவ்வனே அலங்கரித்துக், "கனகவீராசனத்தொரு பெருங் கடவுள்' இருக்கத்தக்க ஒரு அழகிய கோயிலைக் கட்டும்படி விசுவகர்மாவுக்குக் கட்டளையிட்டான். அவ்விதமே நகரும் கோவிலும் அமைக்கப்பெற்றன. விசாலமான தேரோடும் வீதிகளும் தெருக்களும் உண்டாயின. தேவலோகத்திலுள்ளன போன்ற பெரிய தேர்களும் அக்கணமே அலங்கரிக்கப்பெற்றன. தியாகேசப்பெருமான் சகல வைபவங்களுடனும் எழுலகங்களிலுள்ள பல்லோரும் புடைசூழ, வாத்தியங்கள் ஒலிப்ப, மாலின் மார்பிலாட்டங் கொண்டது போன்ற ஆட்டங்களையுடையவராய் ஊரில் உலாவந்து விசுவகர்மாவினால் நிருமிக்கப் பெற்ற பொன்மயமான கோயிலில் புற்றிடங் கொண்டானுக்குத் தென்புறத்தில, உலகங்களெல்லாம் உய்யும்பொருட்டு, வைவசுதமனுகல்பத்தில் இரண்டாமாண்டில் மாசிமாதம் அஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் தேவர்கள், யக்ஷர்கள், கந்தர்வர்கள், கின்னரர்கள், கிம்புருஷர்கள், உரகர்கள், இருஷிகள், மனிதர்கள், முதலியோர் முன்னிலையில் முசுகுந்தனால் ஸ்தாபிக்கப்பெற்று, சகல ஜீவராசிகளும் உய்யும்பொருட்டு இராஜ்ஜியபரிபாலனம் செய்து வருகின்றார்.

மற்ற ஆறு மூர்த்திகளும் முறையே திருநள்ளாறு, திருக்காரவாயில், திருநாகை, திருக்குவளை, வேதாரணியம், திருவான்மியூர், ஆகிக ஸ்தலங்களில் ஸ்தாபிக்கப் பெற்றன.

II

## ஆரூரர் என்றும் வன்றொண்டர் என்றும் வழங்கும்

# ஸ்ரீசுந்தரமூர்த்திஸ்வாமிகள் சரித்திரம்.

---

### பூர்வ வரலாறு

---

திருக்கைலையங்கிரியிலே பரமசிவனுருக்கு மலர்கள் பறித்து மாலைகள் தொடுத்துச் சூட்டும் இயல்பினை யுடையவர் ஆலாலசுந்தரர். அவர் ஒருநாள் வழக்கம் போலஸ்நாநஞ்செய்து விபூதி ருத்ராக்ஷங்கள் தரித்துப் பரிசுத்த மனதுடன் நந்தவனம் புகுந்து முறைப்படி புஷ்பங்கள் கொய்து கொண்டிருந்தனர். அச்சமயம் உமாதேவியரின், சேடியரான அநிந்திதை, கமலினி, என்னும் இருதெய்வமாதர்கள் அத்தோட்டத்தினுட்புகுந்து பிராட்டியார்க்கு மலர் பறிக்கத் தொடங்கினர். தமிழுலகம் செய்த பாக்கியத்தால் அப்பொழுது சுந்தரர் மனம் அப்பெண்கள் மீதும், அவர்கள் மனம் அவர் மீதும் சென்றன. எனினும் ஐயனின் திருப்பூஜைக்கு மலர்கொய்யுங்கால் இத்தகைய அழுக்கெண்ணம் தம்முள் தோன்றினதைக்

கண்டு சுந்தரர் வருந்தித் தம்மனதைத் திருப்பிக்கொண்டு சுவாமி சந்நிதிக்கேகினர். அத்தோழிகளும் அம்மையை அணுகினர்.

சுந்தரரைக்கண்ட பரமேசுவரன், "அன்பனே! நீ அவ்விரு பெண்கள்மேல் காதல் கொண்டமையால் அவர்களுடன் பூமியிற் சென்று பிறந்து இன்பமடைந்து பின்பு இங்குவந்து சேர்வாய்." என வருளினர். அம்மொழிகளைக் கேட்ட சுந்தரர் இடியோசை கேட்ட நாகம்போல் நடுநடுங்கி, இருகைகளையும் தலைமேற் கூப்பிக் கண்களினின்று நீர் ததும்ப, "ஐயனே! பூமியிற் பிறந்து மாயைக்குட்பட்டுத் தயங்கும் யான் தங்களைப் பின்பு எவ்விதம் அடைவேன்? இப்பெரிய தண்டனையை யான் எவ்விதம் நிர்வகிப்பேன்? தாங்கள் என்னை க்ஷமித்துப் பூமியில் மயங்கித் திரியும் என்னை வலியவந்து தடுத்தாட்கொண்டருளவேண்டும்." எனப் பிரார்த்தித்தார். பரமசிவனும் அங்ஙனமே ஆகுக' என வருளினர்.

## சுந்தரரின் இளமைப் பருவம்.

அவ்விதமே திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரென்னும் பதியில் வாழும் சிவபக்தியிற் சிறந்த சடையனாரென்னும் ஆதிசைவருக்கும் அவர் மனைவி இசைஞானியாருக்கும் செல்வப் புதல்வராகச் சுந்தரர் தோன்றினர். அவருக்கு நம்பியாரூரர் என்ற திருநாமம் அளிக்கப்பட்டது. மிக்கவழகிய அக்குழந்தை ஒருநாள் நல்ல நகைகளணிந்து தெருவில் தேருருட்டிக் கொண்டிருந்த சமயத்தில் அந்நாட்டுக் கிறைவ

ரான நரசிங்கமுனையரென்னும் அரசர் அவ்வழியே போய்க்கொண்டிருந்தார். அவர் அக்குழந்தையின் முகப்பொலிவைக்கண்டு மிக்கக் காதலுற்றுச் சடையனாரின் அநுமதியின்பேரில் ஆரூரரைத் தம்மரண்மனைக்குத் தூக்கிச்சென்று தம் குழந்தையேபோல் வளர்த்துவந்தார். அப்படி வளர்ந்தும் அவர் பிராமணர்களுக்குரிய குலாசாரங்களில் குறையாமல் சகலகலைகளும் கற்பிக்கப்பட்டு வந்தார். அவருக்குத்தகுந்த பிராயத்தில் உபநயநம் செய்விக்கப்பட்டது; மணப்பருவமும் அன்னவருக்கு வந்து சேர்ந்தது.

### மணக்கோலம்.

சடையனார் தம் குலத்திற்குத் தக்கபடி கௌரவமுள்ள புத்தூர் சடங்கவி சிவசாரியாரின் அருமை மகளை தமது திருக்குமாரருக்கு மணம்பேசி முடித்தனர்; சிவாசாரியார் ஒரு சுபதினத்தைக் குறிப்பித்து மணவோலையும் விடுத்தனர். அதனைப் பெற்ற சடையனார் மிக்கவாநந்தங்கொண்டு தமது சுற்றத்தாருக்கெல்லாம் அறிவித்து, அதிகச் சந்தோஷத்துடன் மங்கலதினத்தை எதிர்பார்த்திருந்தார். அத்தினத்தில் சுந்தரருக்கு உயர்ந்த பட்டாடைகளுடுத்தி அரசருக்குரியனவும் அந்தணருக் குரியனவுமான அழகிய ஆபரணங்களை அணுவித்துத் தம்மூர் விட்டுப் புத்தூர் யாவரும் புகுந்தனர். ஆங்கு சுந்தரரைக்கண்டு மாந்தர்களெல்லாரும்,

**கண்களெண்ணிலாத வேண்டுங்காளையைக் காண வேன்பார்**
**பெண்களி லுயர நோற்றள் சடங்கவி பேதை யென்பார்**
**மண்களி கூர வந்த மணங்கண்டு வாழ்ந்தோ மென்பார்**
**பண்களி னிறைந்த கீதம் பாடுவா ராடுவார்கள்.**

"இக்காளையைக் காணக் கண்கள் எண்ணிலாதன வேண்டுமென்றும், பெண்களுள் மிக்கத் தவம்புரிந்தவள் சடங்கவியே யென்றும், இம்மங்கலக் காட்சியைக் காணப்பெற்ற நமது பாக்கியமே பாக்கியமென்றும், ஸ்திரீகள் பலவாறு பேசிப்பாடினார்கள்; ஆடினார்கள்.

இவ்விதம் பலர் பலவிதமாக எண்ண, மிக்க ஆடம்பரத்துடன் சுந்தரமூர்த்தி மணப்பந்தருள் நுழைந்து வேதியர் தொடுத்த மணச்சடங்குகளைச் செய்யத் தொடங்கினார். அந்தணர்கள் வேதமந்திரங்களைக் கோஷித்துக் கொண்டிருந்தனர். மங்கிலியப் பெண்கள் மங்கல கீதம் வழங்கினர்; வாத்தியங்கள் முழங்கின.

## சுந்தரர் தடுத்தாட்கொள்ளப்பட்டது.

அச்சமயம், அங்கே நடந்த ஒரு சிறு சம்பவத்தைக் கூறுவோம். வயதுசென்ற ஒரு வேதியர் ஊன்றுகோலுடன் தள்ளாடித் தள்ளாடிக் கொண்டு வந்தார். அவர் கண்கள் அடிக்கடி உள்ளே சொருகிக் கொண்டன. நெற்றியில் பூசப்பெற்ற வெண்ணீறு பூரண சந்திரனை நிகர்த்தது. அச்சந்திரனின் கலைகள் மலிந்து பரந்து கிடந்தன போல அவர் நரை மயிர் அலைந்தது. காதிலணிந்த ஸ்வர்ணமயமான குண்டலம் முன்னும் பின்னும் அசைந்தாடிற்று. கூனிநின்ற தோண்மேல் வெள்ளிய முப்புரிநூலும் பட்டுக்கறையுடன் கூடின அங்கவஸ்திரமும் துவண்டன; ஒரு கையில் குடையொன்று விளங்கிற்று.

இடுப்பிற் கட்டிய வெண்மையான வஸ்திரம் மிக்கப் பழமையாயிருப்பினும் வெகு அழகாயிருந்தது.

அவரைக்கண்டோரெவரும் 'இதென்ன? அழகே உருவெடுத்து வந்ததோ? அல்லது மூப்பின் வடிவமோ? அல்லது வைதிகநெறிக்கு முதற் காரணமான வஸ்துவோ? இத்தகைய வேடம் இன்னதென்று தெரிய வில்லையே!" என்று மயங்கினர்.

அவர் மெதுவாக மணவறைக்கு வந்து சபையோரை நோக்கி, 'அந்தணர்களே! இம்மொழியைக் கேட்பீர்களாக!" எனச் சொன்னர். அதைக்கேட்ட சபையோரும் சுந்திரரும், "நல்லது; உங்கள் வரவு நல் வரவு ஆகட்டும்; எங்கள் தவப்பயனே தாங்கள் இவ்விடம் வந்தது! தாங்கள் சொல்ல விரும்பியது என்ன?" என்று கேட்க, அவர் நாவலரை நோக்கி, "எனக்கு முனக்கும் ஒரு வழக்கு உண்டு. அதை முடித்த பின்பே நீ உன் மணவேள்வியைச் செய்யலாம்" என்ருர். சுந்தரர், 'ஐயனே! அத்தகைய வழக்கொன்றுண்டேல் அதனை முடித்தபிறகே வதுவைசெய்வேன். சங்கோச மின்றிச் சொல்லலாம்.' என்று சொல்ல, அம்முதியோர் மறையோரை நோக்கி, 'அந்தணர்களே! நம்பியாரூரன் என்னும் இவன் எனக்கு அடியான்.' என்றனர். அதைக் கேட்டு அங்கிருந்த எல்லோரும் ஓடி அவர் சமீபத்தில் வரச்சுந்தரர், 'இவன் யார்? என்ன பிதற்றுகின்ருன்? இம்மறைவன் மொழி நன்ருயிருக்கிறது! எனக்கூறி நகைத்தார். அப்பொழுது அப்பெரியோர் "நீ நகைப்பது நன்ருயிருக்கிறது! உன் தந்தையின் தந்தை எனக்கெழுதிக் கொடுத்த ஓலை இதோ இருக்கின்றதே! நீ நகைத்தால் விடப்படுமோ?. என்ருர். அதற்குச் சுந்தரர் நகைத்தலை நிறுத்திக்

கொண்டு, 'அந்தணருக்கு அந்தணர் அடிமையாதல் நீர் சொல்லவே கேட்டோம், நீர் பித்தனோ? யாதோ? தெரியவில்லை.' என்றார். அதற்கு மறையவர், 'பித்தனுகட்டும்; அல்லது பேயனுகட்டும்; இன்னும் நீ எவ்வளவு தூஷித்தாலும் நான் நாணவில்லை. நீ அடிமை செய்யவேண்டியவன்தான்.'' என மொழிந்தனர்.

அம்மொழிகளைக்கேட்ட சுந்தரரின் மனம்கலங்கி உருகிற்று. அவர் தன்னை யறியாமலே மயங்கினார்; "எங்கே உமது ஓலையைக்காண்பியும் பார்க்கலாம்?" என்று அவரைக் கேட்டார். அதற்கு அவர் அவ்வோலையை "நீ பார்க்கத் தகுந்தவனோ? நான் அதைச் சபையாருக்குக் காட்ட நீ எனக்குப் பணி செய்யக் கடமைப் பட்டவனே யொழிய வேறில்லை. ஆதலால் உன்னிடம் காட்டேன்.'' என்றார். அம்மொழிகளைக் கேட்டலும் நாவலருக்குக் கோபமுண்டாக அவர் அவ்வோலையைப் பறிக்கத் தொடங்கினார். மறையவரும் சபையின் நடுவே ஓடத்தலைப்படச் சுந்தரர் அவரைப் பின்பற்றி வலுவில் அவ்வோலையைப் பறித்துக் கிழித்தெறிந்தார். கிழவர், 'ஐயோ! அநியாயம் செய்து விட்டானே! இங்கொருவரும் கேட்பாரில்லையோ?'' எனக் கூக்குறலிடப் பக்கத்திலிருந்தவர்கள் அவரிடம் வந்து, "நீங்கள் யார்? உலகத்திலேயேயில்லாத ஒரு புதிய கதையைச் சொல்லிக்கொண்டு இங்கு வழக்குச் செய்கின்ற பெரியோரே! தங்கள் ஊர் எது?" எனக் கேட்டனர். அதற்கு ஐயர்', "எமது ஊர் சமீபத்திலேயே யுள்ளது. திருவெண்ணெய் நல்லூரே நான் இருப்பிடமாகும். இங்கு உங்கள் கண்களுக் கெதிரில் இவன் இந்த ஓலையைக் கிழித்தெறிந்தானே! இதனின்றே இவன்


எனதடிமை யென்பதை நிரூபித்து விட்டானன்றோ!" எனக் கேட்டார். அப்பொழுது ஆரூரன், 'இவர் பழைய மன்றாடி போலும்! ஐயரே! நீர் திருவெண்ணெய் நல்லூரராயிருப்பின் உமது வழக்கை அங்கேயே பேசிக்கொள்ளலாம்." என மேவதியரும், 'நல்லது, நீயும் நல்லூர் வருதல் வேண்டும். அவ்வூரிலுள்ள அந்தணர்கள் முன் என்னிடமுள்ள மூல வோலையைக் காட்டி என்வழக்கைச் சாதிப்பேன்." என்று தடியை யூன்றிக்கொண்டு முன்னே நடந்தார். காந்தத்தாலிழுக்கப்பட்ட இரும்பைப் போலச் சுந்தரரும் அவர் பின்னே சென்றார். அவர் சுற்றத்தார் யாவரும் பிரமித்து, 'இது என்னவாகுமோ?' என்று பின்தொடர்ந்தார்கள்.

பிராமணர் நல்லூருக்குச் சென்று அந்தணர்களை நோக்கி, "ஐயன்மீர்! இந்நாவலூர் ஆரூரன் எனக்கடிமையாவன். அதற்கத்தாக்ஷியாய் என்னிடமிருந்த ஓலையைக் கிழித்து வம்புபேசிக்கொண்டு இங்கே வந்திருக்கின்றான். இதுவே என் முறைப்பாடு." என்றியம்பினர். அதைக்கேட்ட அவர்கள், 'இது நல்ல வழக்காயிருக்கின்றது. அந்தணர் அந்தணருக்கு அடிமையாவதுமுண்டோ? இது எங்களுக்கு விளங்கவில்லையே!" என்ன, அவர், "அறிவுடையோர்களே! இவன் கிழித்த வோலை இவன் பாட்டனால் எழுதப்பெற்றது; என் கையிலுள்ள இவ்வோலையை இவன் ஏன் வலியப்பறித்துக் கிழித்தெறிந்தான்? இதனாலேயே இவன் பக்கம் குற்றமுள்ளது என்று விளங்கவில்லையா?" என்றார். அவர்கள் ஆரூரரைநோக்கி, "நீர் என்ன சொல்லுகின்றீர்" எனக்கேட்க, அவர், "அந்தணர்களே! சகல சாஸ்திரங்

களையும் நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். நான் ஆதி சைவனென்பதும் உங்களுக்குத் தெரியும். அப்படியிருக்க இப்பிராமணன் என்னைத் தனது அடிமையென்று சாதிப்பானானால் இதைவிட மாயை வேறென்னவிருக்கின்றது? எனக்கொன்றும் புலப்படவில்லை. நீங்கள் தீர்மானிக்கும் வண்ணம் நான் நடந்து கொள்வேன்" என்றார். அவர்கள் பெரியவரை நோக்கிப் பின்னும் 'உங்களுடைய வழக்கு நூதனமாயிருக்கிறது. நம்பும்படியாக அனுபவம், இலிகிதம், சாக்ஷி என்னும் அத்தாக்ஷிகளில் ஒன்றேனும் காட்டுவீரானால் எங்களால் ஏதேனும் ஒரு முடிவுக்கு வரவியலும்' என்றார்கள். அதற்கு அவ்வேதியர், "முன்னே இவன் கிழித்தவோலை நகல் ஓலை; சபைமுன் காட்டுவதற்காக மூலவோலை வைத்திருக்கிறேன். அதனையும் இவன் வாங்கிக் கிழித்தெறியாமலிருக்கும்படி நீங்கள் பார்த்துக்கொள்ளும்பக்ஷத்தில் நான் காட்டுகின்றேன்." என்றனர். சபையோர்கள், 'அதற்கு ஒரு தீங்கும வராமல் நாங்கள் பார்த்துக்கொள்வோம்'. என்று சொல்ல, அவர் மெதுவாகத் தன் துணிமூட்டையினின்று ஒரு ஓலைச் சுருளை எடுத்தார். சபையோரின் ஏவுதலின் பேரில் ஆங்கிருந்த கணக்கப் பிள்ளை அதனை வணங்கி வாங்கிப் பிரித்துச் சபையோர் கேட்கும்படி வாசிக்கலுற்றான். அதனில்,

"அருமறை நாவ லாதி சைவனா ரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக் கியானு [மென்பால்
வருமுறை மரபு ளோரும் வழித்தொண்டு செய்தற் [கோலை
யிருமையா லெழுதி நேர்ந்தே னிதற்கிவை யென்னெ [ழுத்து.'

"அருமறைகளை யறிந்த ஆதிசைவனான ஆரூரன் எழுதிக்கொடுத்தது ; வெண்ணெய் நல்லூரிலுள்ள பித்தனென்னும் பெருமுனிக்கு யானும் என் குலத்தில் உதிக்கும் யாவரும் அடிமைகளாவோம். இவ்விதம் ஒப்புக்கொண்டமைக்கு இருமையாலும் எழுதிக்கொடுத்த ஓலை; இதற்கு இவை என் எழுத்துக்கள்." என்று எழுதப்பெற்றிருந்தது. அதையும் சாட்சியிட்டவர்களின் பெயர்களையும் கேட்டு அவ்வூரார்களைவரும் ஆச்சரியப்பட்டுச் சுந்தரரைநோக்கி, "இந்த எழுத்து உமது பாட்டன் எழுத்துத்தானோ?" என வினவ, அவ்விருத்தர், 'அவனையேன் கேட்கவேண்டும்? அவன் பாட்டன் எழுதிய வேறுபத்திரங்கள் ஏதேனுமுண்டானால் வருவித்து ஒத்துப்பார்க்கலாம்;" என்றார். அங்ஙனமே அவர்கள் செய்ய, இரண்டும் ஒத்திருத்தலைக்கண்டு சபையோர்கள் ஆரூரரை நோக்கி, "நம்பியாரூரரே! நான்மறை முனிவருக்கு நீர் தோற்றுவிட்டீர். இவருக்கு நீர் ஏவல் செய்ய வேண்டியதுதான்" எனத் தீர்மானித்தார். ஆரூரரும், விதிமுறை இதுவானால் நான் எவ்விதம் மாறிநடப்பது?" என்று அதற்குச் சம்மதித்தார். சபையோர்கள் தம்முன்னின்ற பெரியோரை நோக்கி, "முனிவரே! நீர் காட்டிய ஓலையில் உமது ஊர் இவ்வூரேயென்று சொல்லப்பட்டிருக்கிறதே! உமது இல்லம் எங்கேயிருக்கிறது? அதைக் காட்டும்" என, அவர் 'என்னை நீங்கள் ஒருவரும் அறியீராகில் காட்டுவோம்; பின்னேவாருங்கள்" எனச்சொல்லி, அப்புண்ணிய பதியின் திருவருட்டுறையென்னும் ஆலயத்துள் நுழைந்து மறைந்தார்.



ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள்

## சுந்தரர் வன்றொண்டரானது.

சுந்தரர், "என்ன! பிராமணர் கோயிலில் நுழைந்தனரே!" என்று மனத்திகைப்புடன் அழைக்க, ஈசன் ஆகாயத்தில் உமையுடன் விருஷபாரூடராய்த் தோன்றி,

"முன்புநீ நமக்குத் தொண்டன்; முன்னியே வேட்கை [கூரப்
பின்பு நம் மேவ லாலே பிறந்தனை; மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வறத் தொ [டர்ந் துவந்து
நன்புல மறையோர் முன்னர் நாந்தடுத் தாண்டோ [மென்றார்"

"முன்பு நீ எமக்குத் தொண்டன்; ஒரு நாள் உனக்குக் காதல் மிக நமது ஏவலினால் நீ இவ்வுலகில் வந்து பிறந்தனை; உன்னைத் தடுத்தாட்கொள்ளும் பொருட்டு யாமே இப்பொழுது வலியவந்தோம்." என்றார். அம்மொழிகளைக்கேட்ட தொண்டர் தாயின்கனைப்பைக் கேட்ட கன்று போலக் கதறிச் சரீரமெங்கணும் ஆநந்தம் பொங்கக் கைகளைச்சிரமேல் தூக்கி, "மன்றுளீர்செயலோவந்துவலிய ஆட்கொண்டது!"என்றார். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தனர்; பூமியிலுள்ளோர் யாவரும், 'ஆச்சரியம்! ஆச்சரியம்!' எனக் கூறினர். அச்சமயத்தில் அன்பர்க்கெளியவனான ஈசன் மறுபடியும் சுந்தரரை நோக்கி, "நீ என்னுடன் வன்மைபேசினபடியால் இன்று முதல் உனக்கு 'வன்றொண்டன்' என்ற பெயர் அமையட்டும். நமக்கு அன்பினால் பாடப்பெறும் சிறப்பு மிகுந்த பாக்களே அருச்சனை

யாகும். ஆதலால் நம்மைப் பலவிடங்களிலும் பாடி வருவாய்." என்றருளினர். அம்மொழிகளைக் கேட்ட வன்றொண்டர், 'ஐயனே! அயனும் மாலும், ஐந்தெழுத்துக்களும், வேதமும் பாடிய பொருளே! வேதியனாகி என்னை வழக்கினால் வெல்ல வந்த பெருமானே! நன்மை யின்னதென்றறியாத என்னை வலிய வந்தாட்கொண்டு உணர்வுதந்து உய்யக் கொண்ட கோதிலா அமுதே! உன் குணப்பெருங்கடலை நாயேன் எவ்விதம் வகுத்துரைப்பேன்?" என இரங்கினர். அம்மொழிகளைக்கேட்ட ஐயன், மிக்கக் கருணையுடன் சுந்தரரை நோக்கி, 'என்னை முன்பு பித்தன் என்றழைத்ததனால் அதனை முதலாக வைத்தே என்னைப்பாட ஆரம்பிப்பாய்.'' எனத் திருவாய் மலர்ந்தருளினர். அப்பொழுதே சுந்தரர்,

"பித்தா! பிறை சூடி! பெருமானே! அருளாளா!
எத்தான்மற வாதே நினைக்கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் [நல்லூரருட்டுறையுள்
அத்தா! உனக் காளாயினி அல்லேனென லாமே?"

என்ற அரிய பதிகத்தைப் பாடினர். அதனைக்கேட்ட வெண்ணெய் நல்லூரன், 'இவ்விதமே தலந்தோறும் நம்மைப்பாடுக;" என்றருள் செய்து மறைந்தான்.

## க்ஷேத்ராடனம்.

இவ்விதம் நம்பியாரூரர் வன்றொண்டரானதால், அவரை மணக்க விருந்த சிவவேதியர் மகள் தாமும் ஒரேமனதாய் சிவத்யானத்திலிறங்கிச் சிவலோகம் எளிதாகும் வகையை யடைந்தாள். சிவதீக்ஷை

பெற்ற சுந்தரர் தம் ஜனன பூமியாகிய திருநாவலூரை யடைந்து பதிகமோதிப் பின்பு திருத்துறையூர் சென்று, "ஐயனே! என்னை அவநெறியிற் செல்லாமே தடுத் தாண்டாய். எனக்குத் தவநெறிதந்தருள்க" என்று பிரார்த்தித்து, அவ்விதமே பெற்றுச் சிதம்பரத்தைத் தரிசிக்க அவாக்கொண்டு அந்நகரை நோக்கிப் புறப் பட்டார். போகும்வழியில் திருவதிகைவீரட்டானத் தையடைய, ஆங்கு முன்பு திருநாவுக்கரசர் உழவாரம் திருத்தொண்டு செய்திருந்தமையால் அவ்வூரை மிதிக்க அஞ்சிப் புறத்திலேயிருக்கும் சித்தவடமடத்தி லே தங்கிச் சயனித்தார். அப்பொழுது வீரட்டானே சுவரார் ஒரு கிழப் பிராமணனைப்போல வந்து அவர் தலைப்புறத்தில் படுத்து அவர் சிரசின்மேல் தன் காலை வைத்து நித்திரை செய்பவர்போல அபிநயித்தார். சுந்தரர் விழித்து அப்பிராமணரை நோக்கி, 'என் இவ் விதம் செய்கிறீர்?' என்று கேட்கத், "திசைதெரியா மல் நான் காலை உன் தலையில் வைத்ததற்கு என் மூப் பே காரணம்." என்று அவர் சொல்லத் தமிழ் நாதர் வேறுபக்கம் தலைவைத்துப் படுத்தார். பின்பும் அக் கிழவர் அங்ஙனமே செய்ய, வன்றொண்டர் மறுபடியும் எழுந்து, "இங்கு என்னைப் பலகாலும் மிதித்த நீர் யார்?" என்று கோபித்து வினவ, 'என்னை நீ அறியா யோ?' என்று சொல்லி அக்கணமே அவர் மறைந்தார். உடனே சுந்தரர் எழுந்து நின்று, வந்தவர் வீரட்டானே சுவரரேயென வறிந்து, 'தம்மானை...... சாதியாருளரோ?' என்ற பதிகமோதினர். பின்பு சுந்தரர் பல தலங் களையும் தரிசித்துக்கொண்டு தில்லையையடைந்து நட ராசப்பெருமானைத் தரிசித்துப் பதிகமோதினார். முன்பு

வயோதிகராய் வந்து தடுத்தாண்ட பெருமான் தாண்டவம் புரிதலைத் தரிசனம் பண்ணிக் கொண்டிருந்த போது ஈசன் அசரீரியாய், 'ஆரூரில் நம்பால் வருக' என விளம்ப, ஆரூரர் கைகளைக்கூப்பி, "ஐயனே! அங்ஙனமே செய்வேன்." என மொழிந்து பணிந்தெழுந்து வெளியே வந்தார்.

வருகிற வழியில் கொள்ளிடத்தைக் கடந்து சீகாழிக் கருகில்வர, "இது அறம் பயந்தாள் திருமுலைப்பால் அமுதுண்ட பிள்ளையார் திருவவதாரம் செய்த பதியாகும்; இதனை மிதித்தல் தகாது." என்று ஊரை வலமாகவரும் போது சிவபெருமான் தரிசனங் கொடுத்தருளினார். ஆங்கே, "சமுத்ர அலைகளில் மிதந்து வந்த திருத்தோணிப் புரத்தாரைக் கண்டு கொண்டேன் கைலையனில் வீற்றிருந்தபடி" என்று பதிகம் பாடி வணங்கி அப்பால் சென்று, பல ஸ்தலங்களையும் தரிசித்துக் கொண்டு ஆரூரினருகில் வந்தார்.

அப்பொழுது ஈசன் ஆரூரிலுள்ள பக்தர்களுக்கெல்லாம் கனவில் தோன்றி, 'நம் ஆரூரன் நாமழைக்க வாராநின்றான். அவனை மகிழ்ந்து எதிர்கொள்வீர்.' எனவருளினார். அம்மொழிகளைக் கேட்ட ஆரூரனைவரும் மகிழ்ந்து ஊரை அலங்கரித்து,

மங்கலகீ தம்பாட மழைநிகர்தூ ரியமுழங்கச்
செங்கயற்கண் முற்றிழையார் தெற்றிதோறு நடம்பயில
நங்கள்பிரான் றிருவாருர் நகர்வாழ்வார் நம்பியைமுன்
பொங்கெயினீ டிருவாயிற் புறமுறவந் தெதிர்கொண்டார்.

அவர்களை வன்றொண்டர் வணங்கிக் கூப்பிய கைகளுடன் கோபுரத்துள் நுழைந்து, தேவாசிரிய மண்

டபத்தைத் தொழுது, அன்பினால் ஊனும் உயிரும் உருக, கண்களினின்று ஆனந்தக் கண்ணீர் வடிய, உச்சியின் மேல் குவித்த செங்கைகளோடும் கோயிலினுட் புகுந்து, புற்றிடங்கொண்ட புராதனனைக் கண்டார். கண்டவுடன் தரையின்மீது விழுந்து அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்கள் செய்து உலகத்தில் மானுட ஜன்மமெடுத்த பயனைப் பெற்றார். அச்சமயம்,'உனக்கு நம்மைத் தோழமையாகத் தந்தனம். முதலில் நாம் உன்னைக் கண்டு கொண்ட தினத்தில் எவ்வாறு கண்டனமோ அக்கோலத்தையே புனைந்து உன் வேட்கை தீர மண்மேல் விளையாடுவாய்.'' என ஒரு வாக்கெழுந்தது. அதுமுதல் அவருக்குத் தம்பிரான் தோழன் என்னும் திருநாமம் ஏற்பட்டது. அப்பொழுது அவர் "என்னை ஆட்கொள்ளவந்த மறையவனே! ஆரூர் அமர்ந்த அருமணியே! வாட்கயல்கொண்ட கண் மங்கை பங்கா! உன் அரிய கமலபாதத்தை என் சென்னியிற் சூட்டிய செல்வனே!" என்று பலவாறு ஸ்தோத்தரித்து வணங்கி அப்பால் சென்றார். அன்று முதல் ஈசனது கட்டளைப்படியே சைவர்க்குரிய விபூதி ருத்ராக்ஷங்கள் பூண்டு, சந்தனமும் மாலைகளுமணிந்து பெரிய தவவேந்தரென்று பலரும் சொல்லும்படி தினந்தோறும் கோயிலுக்கு வந்து புற்றிடங்கொண்டானைத் தரிசித்துச் செல்வராயினர்.

## பரவையை மணம்புரிதல்.

இஃது இவ்வாறாகக் கைலயங்கிரியில் உமாதேவியின் சேடியர்களிலொருத்தியான கமலினி யென்பாள் ஆரூரில் உருத்திரகணிகையரின் குலத்தில் பரவை

யென்னும் திருநாமத்தோடு அவதரித்து மணப் பருவமடைந்து மிக்க வழகுடையவராய்த் தினந் தோறும் புற்றிடங்கொண்டானைத் தரிசித்துக் கழங்கு, பந்து, அம்மானை, ஊசல் முதலிய இனிய பாடல்கள் பாடிச் சேவித்துச் சென்று வந்தார். ஆரூரர் ஒரு நாள் அவரைக் கண்டு மோகித்தனர். பண்டைவினையின் வலி கூட்டப் பரவையாரும் சுந்தரரைக் கண்டு தம்மை யறியாமலே மோஹித்து நின்றனர். பின்பு நாணத் தால் தலைகுனிந்து தம்மனத்தைத் திருப்பிக்கொண்டு பரவையார் கோயிலினுள் புகுந்தார். சுந்தரரும் ஆல யத்துள் நுழைந்து பரவை வேறுபக்கமாகச் சென்ற தைக் கண்டு வருந்தி, 'ஈசனது அருளை ஓர் உருவெ டுத்து வந்ததுபோன்ற அந்நங்கை யெங்கே?' என்று தேடியுங் காணமல் பலவாறு வருந்திக் கடவுளைப் பிரார்த்தித்தார். தம்மாளிகையையடைந்த பரவையும் காதல் மிகுந்து பரிதவித்து ஐயனைநோக்கித்,

தேருங் கொடியு மிடை மறுகிற் றிருவா ரூரர் நீரே யல் [லால்
ஆரேன் றுயர மறிவாரடியே னடியே னயரும் படியோ [விதுதான்
நீறும் பிறையும் பொறிவா ளரவின் னிரையு நிரைவெண் [டலையின் புடையே
ஊறுஞ் சடையீர் விடைமேல் வருவீ ருமதன் பிலாள்போல் [யானோ வுறுவேன்?

எனத்தன் துன்பத்தைக்கூறி வருந்தினர். தியாகேசன் தமது இருபக்தர்களின் வேண்டுகோள்களுக்கும் இணங்கி, அந்நகரவாசிகளுக்கும் அடியார்களுக்கும் சொப்பனத்தில் தோன்றி அவ்விருவருக்கும் விவாகம்

முடித்துவைக்கும்படி சொல்லியருள, அவர்களும் மறு நாள் மிகுந்த வைபவத்துடன் அவ்விவாகத்தை நிறை வேற்றி வைத்தார்கள். அது முதல் சுந்தரர் அங் கேயே தங்கித் தினந்தோறும் உயர்ந்த பட்டாடைகள் சாத்தி, வாசனைபொருந்திய சந்தனம் பூசி, மின்னலைப் பழிக்கும் பிரகாசம்பொருந்திய ஆபரணங்கள் பூண்டு,

கையினிற் புனை பேர்ற் செண்டுங் காதினி லிலங்கு தோடு
மெய்யினிற் றுவளு நூலு நெற்றியின் விளங்கு நீறு
மையனுக் கழகிதாமென் றயிழை மகளிற் போற்ற
சைவமெய்த் திருவின் கோலந் தழைப்ப வீதியினைச்
[சார்ந்தார்.

## திருத்தொண்டத்தொகை பாடப்பெற்றது.

இவ்விதக் கோலத்துடன் கோயிலினுள் சென்று பல பதிகங்கள் பாடி வரும் நாட்களில் ஓர் நாள், தேவாசிரிய மண்டபத்தையடைந்து எண்ணிலாத பக் தர்கள் ஒன்று கூடியிருந்த பேரழகைக்கண்டு, 'இவர் களுக்கு அடியவனாக என்னைப்பண்ணும் நாள் எந் நாள்?" என்று பரமனைப் பிரார்த்தித்தார். தம்மன்பர் வேண்டுவன யாவற்றையும் வேண்டியவாறே ஈயும் தன்மையுள்ள பிரான் கருணை கூர்ந்து, 'அடியார்களின் பெயர்களையும் அவர்களின் பெருமைகளையும் அருளிச் செய்து, பின்பு அவரின் வேண்டுகோளின்படித் 'தில்லை வாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்னும் முதலடியையும் எடுத்துக்கொடுத்தார்.

"தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்
திருநில கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கு மடியேன்
இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்

வெல்லுமா மிகவல்ல மெய்ப் பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன் மிண்டர்க்க
[டியேன்
அல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியே
னாரூ ரனாரூரி லம்மானுக் காளே."

என்று தனித்தனி அறுபத்துமூன்று நாயன்மார் களையும் துதித்துப் பணிய பக்தர்கள் யாவரும் மகிழ்ந்து அவரைத் தம் கூட்டத்தின் நடுவே வைத்துக்கொண்டார்கள்.

## குண்டையூரில் நெல் பெற்றது.

இவ்வண்ணம் திருவாரூரில் வன்றொண்டர் வசித்துவந்த காலையில் ஓர் நாள் குண்டையூர்க் கிழவரென்னும் வேளாளர் ஆரூர் வந்து அவருடன் நெருங்கிப் பழகலானார். அவர் தினந்தோறும் தவறாமல் பரவையின் மாளிகைக்கு நெல் முதலிய பல பொருள்கள் அனுப்பி வந்தனர். இப்படியிருக்க ஒருசமயம் பஞ்சத்தால் பூமி விளையாமற்போக தாமுண்பதற்கே தானியமகப்படாமல் குண்டையூர்க் கிழவர், 'ஆரூருக்கு நெல் அனுப்ப என்ன செய்வேன்?" எனத் தவித்தனர். அவர் அதே கவலையாய் வருந்தி ஒருநாள் முழுமையும் உண்ணாமல் அன்றிரவு அயர்ந்து நித்திரை போய்விட்டார். அச்சமயம் கங்காதரனான கடவுள் குபேரனை நோக்கி, 'ஆரூரனுக்கு நெல் அனுப்புவிக்க வேண்டும்." என்று ஏவ, குண்டையூர்க் கிழவனார் வீட்டுப்புறத்தில் ஆகாய மளவும்படியான நெற்போற்குவிந்தது. காலையில் எழுந்து அதனைக்கண்ட கிழவர் பேராச்சரியமுற்று பார்வதிநாதனையும், பரவைநாதனையும்

தொழுது, 'இவை யாவற்றையும் நாவலூராருக்கு எவ்விதம் அனுப்புவேன்?" என்று யோசித்து ஆரூரை நோக்கிப் புறப்பட்டார். அச்சமயம் தற்செயலாய் அவ்விடம் சுந்தரர் ஏகக் கிழவனுர் மிக்க வானந்தம் கொண்டு அவர் கால்களில் விழுந்து, "தம் பொருட்டு அண்டர் நாயகர் அளித்துள்ள நெற்போரைக் காணலாம்." என்று விண்ணப்பிக்க இருவரும் குண்டையூர் சென்றனர். அதனைக்கண்டு சுந்தரர் வியந்து, "மலையினை யொத்த இப்பெரும்போரை எவ்விதம் ஆரூருக்கு எடுத்துச் செல்வோம்! இதனையளித்த ஈசனே இக்காரியத்தையும் செய்யவேண்டும்" என்று ஈசுவர சந்நிதியில் நின்று,

"நீளநினைந் தடியேனும்மை நித்தலுங் கைதொழுவேன்
வாளனகண் மடவா ளவள் வாடி வருந்தாமே
கோளிலியெம் பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப் [பெற்றே
னாளிலையெம் பெருமா னவையட்டித் தரப் பணியே.

என்று ஒரு பதிகமோத அன்றிரவே பூதகணங்கள் அந்நெல் யாவற்றையும் பரவையின் மனையிலும் ஆரூர் முழுமையும் நிரப்பின. இவ்வற்புதத்தை ஆரூரிலுள்ள யாவரும் கண்டு அதிசயித்தனர். பரவையின் உத்திரவுப்படி அவரவர்கள் வீட்டுவாயிலில் கொட்டப்பட்டிருக்கும் நெல்லை அவரவர்கள் மாளிகையிற் சேமித்து வைத்துக் கொண்டனர்.

## திவ்விய தேச யாத்திரை.

இது நடந்த சில நாட்கள் கழித்துத் திருவாரூரை யடுத்த திருச்செங்காட்டாங்குடி யென்னும் பதியில் வசித்து வந்த சேனாதிபதியான சோட்புலி நாய

ஞர் என்னும் வேளாளர் தம்பிரான்றோழனான சுந்தரரைப் பலவாறுபசரித்துத் தம்மூருக்கு அழைத்துச் சென்று மிக்க மரியாதையுடன் விருந்தளித்தனர். பின்பு சிங்கடி, வனப்பகை, என்னும் தமது இரு புதல்வியரையும் அழைத்துவந்து; "அடியேன் பெற்ற மக்களிவர்; இவர்களை அடிமையாகக் கொண்டருளிக் கருணைசெய்யவேண்டும்" என்று ஐயரைப் பிரார்த்திக்க, அவர் "இவர்களை என் மக்களாகப் பாவிக்கின்றேன்." என்று கூறி அவர்களை ஆசிர்வதித்தனர். பின்பு தொண்டர் வலிவலம் வந்து கடவுளை ஸ்தோத்தரித்துத் திருவாரூர் வந்தார். அப்பொழுது பங்குனிஉத்திரத் திருநாள் சமீபித்ததால் சிவனடியார்களுக்கு அன்னமளிக்கச்செல்வம் வேண்டுமேயென்று பரவையார் கூறத் தம்பிரான்றோழர் திருப்புகலூரை யடைந்து அக்கினிபுரீசுவரரிடம் தம் விண்ணப்பத்தைக் கூறி, ஆங்கு ஒரு பக்கத்தில் ஒரு மண்கல்லையெடுத்துத் தலைமேல் வைத்துக்கொண்டு உறங்கினர். ஈசுவரனுடைய கருணையால் அக்கல் காலையில் பொன்னாக அதனைக்கண்டு சுந்தரர் ஆச்சரியங்கொண்டு,

"தம்மையே புகழ்ந்திச்சை பேசினுஞ் சார்பினுந் [தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாள ரைப்பசட்டேதே யெந்தை புகலூர்பாடு [மின்புலவீர்காள்!
இம்மையேதருஞ் சோறுங் கூறையு மேத்தலா மிடர்கெட [லுமாம்
அம்மையே சிவலோக மாள்வதற் கியாது மையுறவில் [லையே."

என்னும் பதிகத்தைப் பாடித் திருவாரூரை யடைந்தனர். பின்பு பல சிவஸ்தலங்களையும் தரிசித்துக் கொ

ண்டே திருவாலம்பொழிலுக்கு வந்து அங்கே இரவில் நித்திரை செய்து கொண்டிருந்தபொழுது, கனவில் 'மழபாடிவர மறந்தனையோ?' என்ற சொற்கேட்க, எழுந்து, ஐயனின் கருணையைக் கண்டு மகிழ்ந்து காலையில் மழபாடி சென்றார். ஆங்கு,

பொன்னார் மேனியனே! புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றையணிந்தவனே!
மன்னே! மாமணியே! மழபாடியுண் மாணிக்கமே?
அன்னே! நின்னை யல்லால் இனி யாரை நினைக்கேனே?

என்ற பதிகத்தைப் பாடினார். பின்பு அவர் பல ஸ்தலங்கள்தோறும் சென்று திருவானைக்காவிலடைந்து ஆங்கு உறையூர்ச் சோழன் மணியாரஞ் சாத்துவதைக் கண்டார். பின்பு அம்மன்னன் ஆரத்துடன் காவிரிநதியில் மூழ்கினபோது அது காணமற்போக அவன் மிகக் கலங்கினான். சுந்தரர் அதனை ஒரு நீர்க்குடத்திலிருக்கக் காட்டி அவனையும் ஆசிர்வதித்து அப்பால் நீங்கினார் பின்பு பலவிடங்களுக்குஞ் சென்று மங்கை பங்காளனை வழுத்திப் பதிகங்கள் பாடித் திருப்பாண்டிக்கொடுமுடியையணுகி, அன்பினால் உடம்பும் மனமும் உருக,

"மற்றுப்பற்றெனக் கின்றிநின்றிருப் பாதமே மனம்பாவித்
[தேன்
பெற்றலும் பிறந் தேனினிப்பிற வாததன்மை வந் தெய்தி
[னேன்
கற்றவர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொ
[டுமுடி
நற்றவா! உனை நான் மறக்கினுஞ் சொல்லு நாநமச்சிவா
[யவே

என்னும் நமச்சிவாயப் பதிகத்தையோதிப் பின்பு

கொங்கநாட்டையடைந்து காஞ்சிவாய்ப் பேரூர் என்னும் திருப்பதியை யடைந்தனர். ஆங்கு நடராஜப்பெருமானின் திருத்தாண்டவத்தைக் கண்டு கண்களினின்று ஆநந்தக்கண்ணீர்பொழியக்கைகளைச் சிரமேற் கூப்பிப் பலவாறு ஸ்தோத்திரங்கள் புரிந்தார். பின்பு மலைகள்வழியாயும், காடுகள்வழியாயும் சென்று பல பதிகளைக் கடந்து செல்லுகையில் ஆங்கு நின்று கொண்டிருந்த ஓர் அந்தணரை வணங்கி, 'முதுகுன்றம்' எய்த வழி யெமக்கு இயம்பும்,' எனவேண்ட, அவர், 'இது தான், என்று காட்டித்தானும் பின்னேடு வருபவர் போல் நடந்து கூடலையாற்றூரில் மறைந்தனர். பரம்பொருளின் உள்ளத்தை யுணர்ந்து ஆற்றூரில்சென்று ஐயனைப்பாடிப் பின்பு திருமுதுகுன்றம் எகினர். அங்கு விட மிடற்றனரைக் கண்டு பொன் வேண்டிப்பாட அவர் பன்னிரண்டாயிரம் பொன்னருளத் திருவுளங் கொண்டார். அப்பொழுது வன்றெண்டர் 'இப்பொன்னெல்லாம் எனக்காரூரிலேயே தந்தருள வேண்டும், எனப் பிரார்த்திக்க ஈசுவரன், "இப்பொருளினைச்செழு மணி முத்தாற்றிலிட்டுப்பின் ஆரூர்க் குளத்தில் போய்க் கொள்க." என்று அசரீரியாய் அருள, சுந்தரர் அதிசயித்து, " அன்று என்னை வலிந்தாட்கொண்ட அருளை இதில் அறிவேன்" என்று கூறி, அப்பொன்னெல்லாவற்றையும் மணிமுத்தாநதியிலிட்டார். பின்பு தில்லை வந்து அன்று பேரூரில் கண்ட திரு நடனத்தையுங் குறித்து நடனசபாபதியைப் புகழ்ந்து அகன்றூர். அடியார்கள் பலர் பின்றெடர வழி நடந்து பல புண்ணிய ஸ்தலங்களையுங் கடந்து ஆரூர் வந்தடைந்தார்.

## கமலாலயத்தில் பொன் பெற்றது.

ஆங்குறையும் 'மூவாத முதலாகி நடுவாகி முடியாத சேவாருங் கொடியாரைத் தரிசித்துப் பின்பு பரவையின் மாளிகையை யடைந்தார். பின்பொருநாள் பரவையை நோக்கி, 'முதுகுன்றத்தில் எமது இறைவர் அருளிய பன்னீராயிரம் பொன்னையும் மணிமுத்தா நதியில் புகவிட்டேன். இன்று இங்கு மேலக்கோபுரத்துக்கு மேற்புறத்திற் கமலாலயத்திற் சென்று அப் பொன்னை யெடுத்து வருவாயாக!" எனக் கூறினார். இதைக்கேட்டு அவர் நகைத்து, 'இதுவென்னவதிசயம்' என்றனர். அப்பொழுது, "என் நாதனருளால் நானே அவைகளை எடுத்துத் தருவேன்.' என்று பலர் சூழப் பரவையின் துணைவர் கோயிலினுட்புகுந்து கடவுளை வணங்கி வலம் வந்து கமலாலயத்தின் வடகீழ் மூலையில் வந்து எதையோ போட்டெடுப்பவர்போலத் தேடினார்; பொன்னகப்படவில்லை. 'ஆற்றிலிட்டுக் குளத்தில் தேடுவதுமுண்டோ?" என்று ஸ்திரீகள் பரிகசித்தனர். அப்பொழுது தொண்டர், "பரவையார் பரிகாசம் செய்யாமல் என் பொன்னை எனக்கீவீர்." என்று பலவிதம் பாடவும் பொன்னகப்படவில்லை. பின்பு மிக்க மனத்தாங்கலுடன், "எத்தாதே யிருந்தறியேன்." என்றும், 'கூத்தா தந்தருளாய் இக் கோமளத்தின் முன்." என்றும் மனமுருகிப்பாடப் பொன்னனைத்தையும் கைபிற்படக் கண்டார். அவைகளைக் கரையேற்ற ஆங்கிருந்தோர்யாவரும், 'இது என்ன அதிசயம்! என்ன அதிசயம்!' என்று ஆரவாரித்தனர். வன்றொண்டர் அரிதினிற்பெற்ற அப் பொன்னை உரைத்துப் பார்க்க அது சிறிது தாழ்மை

யைக் காட்டிற்று. பின்பும் அவர் கடவுளைப் போற்றிக் குறைகூற, விக்னேசுவரர் ஆங்கெழுந்தருளி ஒரு சிறிதும் மாற்றுக் குறையாமலிருக்கும்படி உரைத்துக் காட்டிப் போந்தனர். பிறகு கூட்டத்தாருடன் சுந்தரர் புற்றிடங்கொண்டானை வலம் வந்து தமது மாளிகைக்குப் போந்தனர்.

## கடவுளின் கருணைத்தோற்றம்.

ஆங்கு சிலநாள் தங்கிப் பின்புச் சுந்தரர் தேசயாத்திரை செய்யவேண்டுமென்ற அவா மீண்டும் மீள ஆரூர் விட்டுக் கிளம்பி நள்ளாறு, திருக்கடவூர், திருச்சாய்க்காடு, வெண்காடு, திருநின்றியூர், நீடூர், திருப்புன்கூர் முதலிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு திருக்குருகாவூருக்கருகே செல்லச் சிவபெருமான் சோலை, தடாகம், தண்ணீர்ப்பந்தல், கட்டமுது முதலியனவற்றை வைத்துக்கொண்டு ஒரு வேதியவுருவுடன் அங்கு வந்த சுந்தரரை உபசரிக்க, அவரும் அடியார்களும் உண்டு களைப்பாறி நித்திரைபோக அத்தருணம் அவை யாவும் மறைந்தன. திருநாவலூரர் எழுந்து அதிசயித்துக் கைலாசபதியின் கருணையை வியந்து,

> இத்தனை யாமாற்ற மறிந்திலே னெம்பெருமான்
> பித்தரே யென்றும்மைப் பேசுவர் பிறரெல்லாம்
> முத்தினை மணிதன்னை மாணிக்க மூளைத்தெழுந்த
> வித்தகனே! குருகாவூர் வெள்ளடை நீயன்றே"

என்னும் பதிகத்தைப் பாடினர்.

பின்பு அங்கு விட்டுக்கிளம்பி தில்லையையடைந்து நடராஜனைத் தரிசித்துப் பின் அங்கிருந்து புறப்பட்டு பலபதிகளையுந் தரிசித்துக்கொண்டு திருக்கழுக்குன்றம்

குறுகினர். ஆங்கு வேதநாயகனைப்பாடிப் பின்பு பசி மேலிட்டு அக்குன்றினடியில் வீற்றிருக்கச் சிவபெருமான் ஒரு வெற்றோட்டைக் கையிலேந்தி அவர் முன் ஒரு வேதியனாய் வந்து, 'பசியால் வருந்தவேண்டாம்; இதோ நான் சென்று பிச்சை வாங்கி ஒரு விநாடியில் வருவேன். அதுவரையில் இங்கேயேயிரும்.' என்று சொல்லி அகன்றார்.

'வேண்டிருநீற் றணிதிகழ விளங்குநூ லொளிதுலங்கக்
கண்டவர்கண் மனமுருகக் கடும்பகற்பேர் திரும்பலிக்குப்
புண்டரீகக் கழல்புவிமேற் பொருந்தமனை தோறும் [புக்குக்
கொண்டுதாம் விரும்பியாட் கொண்டவர்முன் கொடு [போந்தார்

கருணாநிதி தாம் விரும்பி யாட்கொண்ட சுந்தரருக்காக வீடு தோறும் புகுந்து பிச்சையெடுத்து அதனைக்கொண்டு தன்னன்பன் முன் வந்தார். அதனையன்புடன் வாங்கித் தாமும் அடியார்களும் வயிறார உண்டு மகிழ்ந்திருக்குங் காலத்தில் ஈசனார் மறைந்தருள, அக்கருணையைக் கண்டுக் கண்களில் நீரரும்பக் கைகளைக் கூப்பித்தொழுது அப்பாலகன்று, காஞ்சிபுரம், பனங்காட்டூர், திருக்காளத்தி, முதலிய க்ஷேத்ரங்களைக் கடந்து கடற்கரையோரத்தில் புவியுட் சிவலோகம்போல விளங்கும் திருவொற்றியூரையடைந்தார். அங்கு பக்தகோடிகள் அவர்களை எதிர்கொண்டழைக்க அனைவரும் திருக்கோயிலை யடைந்தனர். தம்பிரான்றோழர் தம்நாயகன் நாயகியோடும் அங்கு வீற்றிருக்கக்கண்டு மிக்கக்காதல் பொங்கப் பதிகப்பாடிப் பணிந்தார்.

## சங்கிலி நாச்சியார் வரலாறு.

இது இங்ஙனமாகக் கயிலைமலையை நீங்கின அநிந்திதையார் என்னும் அணங்கு ஞாயிறு என்னுமூரிலுள்ள வேளாளர் குலத்தில் ஞாயிறு கிழாருக்குப் புதல்வியாகச் சங்கிலியார் என்ற பெயருடன் பிறந்து மணப்பருவமடைந்தனர். அவரது ஈடில்லா வனப்பைக்கண்டு அவரது பெற்றோர்கள் 'இவளுக்குத் தக்க மணாளனை எங்குத்தேடுவோம்?' என்று யோசித்திருந்தனர். அதையறிந்த சங்கிலியார் மனங்கலங்கி அவர்களைநோக்கிப் "பெற்றோர்களே! யான் சாதாரணமான மானிடர்க்குரியேனல்லேன். ஈசுவரனது அருளுக்குப் பாத்திரமான ஒருவர்க்கே நான் உரியவளாவேன். இனித் திருவொற்றியூர் அடைந்து சிவனின் அருளைப் பெறவேண்டும்;" எனப் பிரார்த்திக்க அவர்களும் இணங்கி ஒற்றியூரில் ஒரு கன்னிமாடமொன்று ஸ்தாபித்து அதனில் அவரை இருக்கச்செய்தார். சங்கிலியார் அங்கிருந்து தவம் செய்துகொண்டு காலந்தவறாமல் ஒற்றியாரூரரையும் வடிவுடையம்மையையும் வணங்கிப் பூமண்டபத்திலிருந்துக்கொண்டு முன்பு கைலாசத்தில் செய்து வந்ததுபோல் பூமாலை தொடுத்து ஈசனுக்கு அர்ப்பணம் செய்து வந்தனர்.

வன்றொண்டர் ஓர்நாள் சங்கிலியாரைப் படம்பக்கநாதரின் சந்நதியில் காண்டலும் அவரிடம் அடங்காத காதலுண்டாயிற்று. 'இவ்விதம் என்மனதைக்கொள்ளகொண்ட இம்மாது கைலாயத்தில் அன்று கண்ட அநிந்திதையோ?' வென ஐயமுற்று மனதைத்திருப்ப வகை தெரியாமல் தியாகேசன் முன்னிலையிற் சென்று,

"ஐயனே! ஒரு புறத்தில் உமாதேவி யிருப்பத் தலைமேற் கங்கையைக் கொண்ட தயாபரனே! என்னை வலியத் தடுத்தாட் கொண்ட பெருமானே! இங்கு நமக்குத் திருமாலை தொடுத்து என்னுள்ளத்தொடை யவிழ்த்த திங்கள் வதனச் சங்கிலியைத் தந்து என் வருத்தம் தீரும். என் எண்ணமெல்லாம் தங்களுக்கேயன்றிப் பிறர்க்கில்லையென்று மனேதிடத்துடனிருந்த என் மனத்தை இம்மாது உடைத்துவிட்டாள். எனக்கு வேறு வழியொன்றுமில்லாமல் தவிக்கின்றேன். அருளவேண்டும்." எனப் பிரார்த்தித்தனர் ஈசுவரனும், "ஒருவராலும் அடையமுடியாத சங்கிலியாரை உமக்குத் தருகின்றேம்; கவலைஒழிக." எனக் கூறிச் சங்கிலியார் கனவிற்றேன்றி, "தவத்தினையுடைய சங்கிலியே! கேள். என்பால் மிக்கவன்புடையவனும், மேருமலையை விஞ்சிய தவத்தையுடையவனும், வெண்ணெய் நல்லூரில் எவருமறிய என்னாலாளப் பெற்றவனுமான ஆரூரன் உன்னை மணக்கவேண்டுமென்று என்னைப் பிரார்த்தித்தான். அதற்கு நீ இசைவாய்." என, அவர் எழுந்து அஞ்சலிசெய்து, "அயனும் மாலுமறிய வொண்ணு ஆதிதேவனே! எளியாளிடம் கொண்ட கருணைக்கு நானென்ன செய்வேன்! இவ்விஷயத்தில் அடியாள் சொல்லவேண்டியதொன்றுண்டு; தாங்கள் பேசிய ஆரூரர் ஆரூரில் வாழ்பவராயிற்றே; இதற்கென்ன செய்வது?" என்று நாணத்துடன் கூறினர். அதற்குக் கடவுள், "உன்னை நீங்காமலிருக்க அவன் ஒரு சபதம் செய்வான்." என்றருளி மறைந்தார். பின்பு அவர் வன்றெண்டரையடைந்து, "சங்கிலியாரிடம் உன் மனப்பான்மையையுரைத்தோம். நீ அவள் முன் ஒரு சபதம் இன்றிர

வே செய்து கொடுட்பாய்." எனலும் அவர், "தாம் செய்யச்சொல்லிய எதையும் நான் செய்யச் சித்தனு யிருக்கின்றேன். ஆனல் நான் அவளோடு தங்கள் திருமுன்னர் சபதஞ் செய்யவருங் காலத்தில் தாங்கள் தயவுசெய்து இவ்விடம் விட்டகன்று மகிழமரத்தடியில் இருத்தல்வேண்டும். அதுவே பல பதிகளிலும் தங்களைத் தரிசிக்கும் எனக்குச் சாலும்." எனவேண்ட, அதற்கும் ஈசன் சம்மதித்தார். பின்பு பெருமான் சங்கிலியாரிடம் சென்று, "வன்றொண்டர் சபதம் செய்ய வருங் காலத்து 'நீர் மகிழ மரத்தடியிற் சபதம் செய்வீராக' என்றுரைத்துப் பெற்றுக்கொள்க," எனக் குறித்தருளினர்.

## சுந்தரர் சபதம் செய்தல்.

சங்கிலியார் எழுந்து "ஈசன் திருவுளம் இவ்விதமிருக்க நான் செய்யத்தக்க தென்னவுளது?" என மனந் தேறிச் சேடியர்களிடம் நடந்ததையுரைத்தனர். வழக்கம்போல் விடியற்காலம் பூத்தொடுக்கச் சேடியருடன் சங்கிலியார் கோயிலுக்குச்செல்ல, அங்கு அவர் வரவை எதிர் பார்த்துச் சுந்தரர் காத்திருந்தார். ஆங்கடைந்த சேடியர்களிடம் தம்மனத்தைக்கூறி அவர்களைத் தாம் சபதம் செய்யும் பொருட்டுத் தியாகேசன் சந்நிதிக்கழைத்தனர். அதற்குச் சங்கிலியாரேவலால் அவர்கள், "தெய்வத்தின் முன் சபதம் செய்வது தகாது. ஆகலால் மகிழமரத்தடியிற் செல்லலாம்" எனவுரைத்தலும், இன்னது செய்வதென்றறியாத சுந்தரர் ஒன்றும் சொல்லத் தோன்றுதவராய் அவ்வண்ணமே செய்தனர். அன்றிரவே அந்நகரிலுள்ளார் யாவருக்கும் 'ஆரூரனுக்கும் சங்கிலிக்கும் மணம்புரி

TB 031(8). N28

86260

விக்க.' என்ற உத்தரவு தோன்ற, மறுநாளே வெகு ஆடம்பரத்துடன் மணம் முடிவு பெற்றது. அதன் பின் மிக்க ஆர்வத்துடன் இருவரும் கூடி வாழ்ந்து தினந்தோறும் ஈசனைத் தொழுது வந்தனர்.

## கண் இழந்து பெற்றமை.

இதற்குள்ளாக ஆரூரில் ஸ்ரீ தியாகேசனுக்கு வசந்தோற்சவ காலம் குறுகிற்று. நாளுக்குநாள் சுந்தரருக்கு ஆரூரின்மேல் கொண்ட காதல் பெருக, "என் ஐயன் வீதிவிடங்கனைக் காணாமல் எத்தனை நாளிருப்பேன்? அவன் திருவோலக்க தரிசனத்தைப் பாரேனோ? தெரியாமல் சபதம் செய்து விட்டேனே! என்ன செய்வேன்?" என்று மனமேங்கிக் கடைசியாய், 'என்னவாயினுமாகுக!' என்று ஒற்றியூரை விட்டுப் புறப்பட்டார். முன் செய்த சபதத்தால் அவர் கண்களிரண்டும் மறைந்தன. மறைந்தும், 'எனக்கு வேறொரு கதியுமில்லை. அவனையே பாடுவேன்.' எனத்தீர்மானித்துப் பலவிதமாகக் கடவுளை ஸ்தோத்தரித்துக் கொண்டே அடியார்களுதவியால் திருவெண்பாக்கத்தில் வந்து இறைஞ்சி, "ஐயனே! நீரும் இருக்கின்றீரோ?.' என்று பாட ஈசன், 'உளோம் போகீர்.' என்று சொல்லி ஒரு ஊன்றுகோலும் கொடுத்தருளினார்.

"மான்றிகழ் சங்கிலியைத் தந்துவரு பயன்களெலாந்
தோன்றவருள் செய்தளித்தா யென்றுரைக்க வுலகமெல்லாம்
ஈன்றவனே! வெண்கோயி லிங்கிருந்தா யேயென்ன
ஊன்றுவதோர் கோலருளி யுளோம்போ கீரென்றனே"

பின்பு தொண்டர் அடியார்கள் அழைத்துச் செல்லக் காஞ்சீபுரம் அடைந்து காமகோடிபீடத்திடை விளங்கும் உமாதேவியையும் ஏகம்பநாதனையும் வணங்கிக்

கண்களில் நீர்வார, "விண்ணுள்வார் அமுதுண்ண மிக்கப் பெருவிஷமுண்ட கண்ணுளா? கச்சி ஏகம்பனே! கடையானவனுன என் பிழையைப் பொறுத்தருளாயோ?" என விழுந்து இரங்க, ஈசன் திருவருளால் இடக்கண் தெரியலாயிற்று. அவர் 'என் ஐயனைக்காண ஒற்றைக் கண்ணுகிலும் பெற்றேன்.' என்று மகிழ்ந்து பாடிப் பின்பு பல தலங்களையும் கடந்துகொண்டு திருவாரூர் வந்தடைந்தார்.

ஆங்கு,

மீளாவடி மையுமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத்தீப் போலுள்ளே கனன்று முகத்தான் மிகவாடி
யாளாயிருக்கு மடியார்தங்க ளல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரில் வாழ்ந்து போதீரே!

என்னும் பதிகத்தை வெகு வருத்தத்துடன் பாடப் புற்றிடங்கொண்டான். திருவுளங்கொண்டு தம்தோழருக்கு மற்றொரு கண்ணையுமீந்தனர். உடனே இருகண்களாலும் புற்றிடங்கொண்டானையும் வீதிவிடங்கனையும் மனமாரத் தரிசித்துப் பதிகங்கள் பாடிப் பின் தேவாசிரிய மண்டபம் வந்து அடியார்களுடன் கூடினர். பின்பு பரவையின் மாளிகைக்குப் போகக்கருதி அடியார்களை முன்பு அனுப்பப் பரவையார், சங்கிலிநாச்சியாரை ஆரூரர் மணந்த சமாசாரங்கேட்டுக் கோபமுற்று அவர்களை உள்ளே விடாமல் கதவைத் தாளிட்டனர். அவ்விஷயத்தை அவர்கள் நாவலூராரிடம் வந்து கூற, அவர் வருந்தி, 'இதற் கென்னசெய்வது?' என ஏங்கி லௌகிகமான சில நண்பர்களைப் பரவையார் மாளிகைக்கு அனுப்பித் தமக்காகப் பேசி வரும்படியனுப்பினர். அவர்களையும் அவள் புறக்கணித்தனள்.

## கடவுள் தூது நடந்தது.

அப்பொழுது சுந்தரர் பட்ட துயரம் அளவிடப் படமுடியாது. 'எனக்குத் துணையாவர் என் ஐயனே யாவர்!' என்று துணிந்து அவரிடம் சென்று தான் பரவையால் அவமதிக்கப்பட்ட வரலாற்றைக் கூறி எவ் விதமாவது அவர் கோபத்தை மாற்றவேண்டும் என்று மன்றாடினர். தன் தொண்டரின் எவ்வகை வேண்டு கோளுக்கு மிணங்கும் சுபாவத்தையுடைய வீதிவிடங்கன் கோயிற்பூசைபுரியும் வேதியர்வேடம் பூண்டு இரு முறை யவள்பால் தூது சென்றும் அவள் கோபந்தணியாமலிருக்கப் பின்பு தன்னை உண்மையாகக் காட்டியருளினர். அதன் மேல் பரவையார் சுந்தரரை ஏற்றுக் கொண்டனர். பின்பு அவ்விருவரும் முன்போல் ஒன்று கூடிச் சிவ கைங்கரியத்தில் ஈடுபட்டவராய் தினந்தோறும் ஈசனைத் தொழுபவராயினர்.

## கலிக்காமரின் கோபம்.

இஃது இங்ஙனமாக, ஒரு தாசியின்பொருட்டுத் தியாகேசனைத் தூதனுப்பின வன்றொண்டரின் செய்கையைக் கேள்வியுற்ற பெருமங்கலத்து ஏயர்கோன் கலிக்காமநாயனார் மிக்கவருத்தமும் வெறுப்புங் கொண்டிருந்தார். "நாய்போன்ற ஓர் அடியவன் ஈசனை ஏவுங் காரியம் வெகுநன்று! இவன் தொண்டனுவனோ? இவ்விஷயத்தைக் கேட்டும் நான் உயிருடனிருக்கின்றேனே! இதுவே அநியாயம்! ஒரு தாசியைக் குறித்து என் ஐயனையோ தெருவில் இரவெல்லாம் நடக்கச்செய்வது? நான் வன்றொண்டனை இனிப் பாரேன். பார்க்க நேரின் யாதுநேருமோ?" என்று மனதில் பகைமை

கொண்டார். அவர்கொண்ட அவ்வெண்ணத்தைமாற்ற வேண்டி ஈசன் அவருக்குப் பொறுக்கவொண்ணுச் சூலை நோயை வருவித்துப் பின்னும் 'சுந்தரனுலேயே இப்பிணி தீரும்." எனவும் அவருக்குக்கருளி ஆரூரரையும் அங்கு போக ஏவினர்.

சுந்தரர் வருகின்ற செய்தியைக்கேட்டுக் கலிக்காமர் பின்னும் அதிக வருத்தமெய்தி, 'வயிற்றின் நோயைவிட ஈசனைத் தூதனுக ஏவினுன் வருகின்றுன் என்ற செய்தி அதிகத் துன்பத்தைக் கொடுக்கின்றதே! அவன் முகத்தில் விழிப்பதினும் இதற்கெல்லாம் காரணமான என் வயிற்றைக் கிழித்துக் கொள்வேன்." என்று உடைவாளால் வயிற்றைக் கிழித்து இறந்தனர். அவர் அப்படி இறந்தும் சுந்தரர் வருகையையறிந்த அவ்வூராரும் கலிக்காமரின் உறவினரும் மனமகிழ்ச்சி கொண்டு துக்கக்குறி ஒன்றையுமே காட்டாமல் ஊரை அலங்கரித்து வாயில்கள் தோறும் பூரணகும்பங்கள் வைத்து மங்கலகரமாகத் தொண்டரை எதிர்கொண்டழைக்கச் சென்றுர்கள். நம்பியும் மிக்கவன்புடன் அவர்களுக்கு மங்கல மொழிகள் கூறி முகமலர்ச்சியுடன் கலிக்கமாரில்லத்திற் சென்று ஆசனத்திலமர்ந்து, "ஏயர் கோனின் சூலைநோயைப் போக்குவதற்காக நானிங்கு வந்தேன். அவரையுடனே நான் பார்க்கவேண்டும்." என, அவர்கள் 'எங்கள் நாயனுருக்கு யாதொன்றுந் தீங்கில்லை. அவர் சுகமாக உள்ளே படுத்துறங்குகின்றுர். அவரைப்பற்றித் தாங்களொன்றும் கவலை கொள்ள வேண்டாம்,' என விண்ணப்பித்தார்கள். 'எதுவானுலும் அவரைப் பார்க்கவேண்டும்.' என வன்றெண்டர் கூற, அவர்கள் ஏயர்கோன் வீழ்ந்திறந்து

கிடக்கும் இடத்தைக் காண்பித்தனர். அக்கோலத்தைக் கண்டு அவ்வரலாற்றையுமறிந்த பரவையின் கேள்வர் 'நல்லது! அவ்வாளினாலே நானும் இறப்பேன்." என்று தன்னை மாய்த்துக்கொள்ளப் போனார். அச்சமயத்தில் எம்பெருமானருளால் ஏயர்கோன் பிழைத்தெழுந்து தம்பிரான் றோழரின் கைகளைப்பிடித்துக்கொண்டார். இருவரும் ஒருவரையொருவரணைத்துக்கொண்டு எல்லாம் வல்ல இறைவனின் கருணையைப் புகழ்ந்தார்கள்.

பின்பு அவருடன் வன்றொண்டர் சிலநாளிருந்து ஆரூரடைந்தனர்.

## சேரமான் பெருமாணயனார்.

இப்படியிருக்குங் கால் மலைகளடர்ந்த சேரநாட்டிலே கோடுங்கோளூர் என்றும் மகோதை யென்றும் பெயர்களையுடைய தலைமை நகரினில் அரசுபுரிந்துவந்த சேரமான்பெருமாணயனார் என்னும் அரசர் சிறு பிராய முதலே அரனது பக்தியிலீடுபட்டு அரசாட்சியில் ஆர்வங் கொள்ளாமல் நடந்து வந்தனர். அவரது மந்திரிகளின் பிடிவாதத்தால் அரசாட்சியை யேற்றுக்கொண்டாரேயன்றி அவர் மனம் முழுமையும் சிவனுக்குத் தொண்டு புரிவதிலேயே நின்றது. ஒருநாள் அப்புனிதர் யானை மீதேறிப் பவனிவரும்போது எதிரில் ஒரு வண்ணான் நனைந்த உவர் மண்ணைச் சுமந்துவர அவனுடலெல்லாம் அந்நீர் படிந்து வெளுத்திருந்தது. சதா சிவத்யானமே கொண்ட மன்னற்கு அம்மேனி சிவனது திருமேனியாகவே தோன்றலும், யானையினின்றும் அவர் கீழேயிறங்கி அவனிடம் சென்று வணங்க, அவன் தானின்னானென் றுணர்த்தினான். இவ்விதம் சிவனிடத்திலீடு பெற்ற நாயனார் பூஜை செய்து வருங்காலத்து

நைவேத்ய முடிவில் அம்பலத்திலாடும் நடராஜனின் பொற்சிலம்பொலி கலகலவெனக் கேட்கும்.

இவ்விதமிருக்குங்காலையில் ஓர் நாள் பாண்டி நாட்டில் மதுரையம்பதியில் பாணனர் பத்திரனரென்னும் பக்தர் திருவாலவாயிலிலெழுந்தருளியிருக்கும் ஆலால சுந்தரரிடம் தினந்தோறுஞ் சென்று தன் வறுமையையுரைத்து வந்தனர். அவருடைய கனவில் ஐயன்தோன்றி, "என்னிடம் மிக்க அன்பினையுடைய சேரனுக்கு நாம் ஓர் ஓலை தருகின்றோம். அதை நீ அவனுக்குக் காட்டினல் உனக்கு வேண்டுவன யாவையும் அவன் ஈவான்." எனவருளி ஒரு திருமுகமும் ஈந்தனர். அதனைப் பாணர் மிக்கச் சந்தோஷத்துடன் எடுத்துச் சென்று சேரனின் திருமுன் சேர்த்தனர். அதைக்கண்ட சேரனின் மனப்பான்மையை யாவரே உரைக்கவல்லார்? அவர் சந்தோஷத்தால் கண்ணீர் பெருக ஆநந்தக் கூத்தாடிப் பாணர்க்கு அளவிலாச் செல்வமளித்து வழிவிட்டனுப்பினர்.

இவ்விதம் சேரர் அரசு நடத்தி வந்த காலத்தில் ஒரு நாள் அவர் பூஜையின் முடிவில் வழக்கம்போலச் சிலம்பொலிச்சத்தம் கேட்கப்படவில்லை; அவர் சற்றுப் பொறுத்துப் பார்த்தார்; முன்போலவே நிச்சப்தமாயிருந்தது. நாயனர் எழுந்து, பின் கீழேவிழுந்து, பின்பு எழுந்து, கண்களினின்றும் நீர் பொழியக் கூப்பியகைகளுடன், "என் நாயகனே! இன்று நான் செய்த பிழையென்ன? இப்புலாலுடம்பு தன் புலன்களை வேறெங்கேனும் நாட்டினதோ? என்ன செய்வேன்? இனி உயிர் வைத்திருப்பதில் பிரயோஜனமில்லை!"

என்று தன்னுடைவாளை எடுத்து மார்பில் குத்தப் போகக் கலகலவென்று கிண்கிணிச்சத்தம் கேட்டது.

அவ்வொலியைக் கேட்டு ஆநந்தங்கொண்டு கத்தியை அப்புறப்படுத்திக் கைகளைக்குவித்துக்கொண்டு, "அயன் மால் மறை இவர்களாலும் தேடுதற்கரியோனே! திருவருள் முன் செய்யாதொழிந்தது ஏனோ?" எனப்பிரார்த்தித்தார். அப்பொழுது கடவுள் அசரீரியாக, "அம்பலத்தில் நமது ஆட்டத்தைக் கண்டு மகிழ்ந்து இனிமையாகப்பாடும் வன்றொண்டரின் பாடலைக் கேட்டிருந்தோம். அதனால் இங்கு வரத்தாமதித்தது." என்று மறுமொழி பகர்ந்தனர்.

## சேரமான் வன்றொண்டரைச் சந்தித்தது.

இம்மொழிகளைக்கேட்டலும்அரசருக்குப் பொன்னம்பலத்தையும் வன்றொண்டரையும் தரிசிக்க வேண்டுமென்ற அவா பெரிதும் உண்டாயிற்று. அதற்கேற்ற ஆயத்தங்கள் பல செய்யப்பட்டன. அரசர் சிலநண்பர்களுடன் சோழநாட்டையுன்னிப்பிரயாணப்பட்டுப்பல காடுகளையும் மலைகளையும் ஆறுகளையுந் தாண்டித் தில்லையம்பதியையடைந்து தன்னுட்டத்தால் ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் முக்கருமங்களையும் இயற்றிவரும்பெருந்தெய்வத்தைக் கண்டு பேராநந்தங் கொண்டார். பின்பு ஆரூர் வந்தடைந்து சுந்தரரைச் சந்தித்தார். அவ்விருதொண்டரும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு ஐயன் கருணையைப் பலவிதமாகப் புகழ்ந்து கோயிலுக்குச் சென்று புற்றிடங்கொண்டானையும் வீதிவிடங்கனையும் வணங்கினர். அரசருக்குப் பரவையார் மாளிகையில் பலவிதமான உபசாரங்கள் நடந்தன.

## ஆறு தடைப்பட்ட வரலாறு.

பின்பு இருவரும் உடலிரண்டெனினும் உயி ரொன்றே யென்று சொல்லத்தக்கவராய் இணைபிரியா மல் மதுரை இராமேச்சுவரம் முதலிய பாண்டிநாட்டுத் தலங்களுக்குச் சென்று வடக்கே திரும்பிப் பல பதி களிலும் சிவபெருமானைத் தரிசித்துக்கொண்டு திருவை யாற்றுக்கு வரும்போது பொன்னிநதியிற் பிரவாகம் மிக்கிருந்ததால் அப்பால் செல்ல முடியாமல் நின்றார் கள். அப்பொழுது சேரமான்றோழர் பஞ்சநதீசுவரனைப் பாட ஆறுதடைப்பட்டு மேற்புறத்தில் நீரும் கீழ்ப் புறத்தில் மணலுமாயின. இத்திருவிளையாடலைக்கண்டு அதிசயத்து நாயனார் எம்பெருமானின் கருணையைப் புகழ்ந்து அக்கரைசென்று ஈசனை வணங்கினர். பின்பு இருவரும் பலவிடங்களிலும் சென்று தரிசித்துக் கொண்டே சோழநாடு, கொங்குநாடு இவைகளைக் கடந்து மலைநாட்டை யடைந்தனர்.

சேரமான் வன்றொண்டருடன் வருகின்ற செய்தி யைக்கேட்டு அந்நாட்டு ஜனங்கள் மனக்களிப்புடன் எதிர்கொண்டழைத்து வரவேற்றனர். பின்பு சேர மான் தோழரை தன்பதிக்கழைத்துச்சென்று வெகு உபசாரங்களுடன் நடத்தினர். தம்பிரான்றோழர் தன் தோழரானமைக்கு அவருக்குண்டான மகிழ்ச்சிக்கள வேயில்லை. இப்படிப் பலநாட்கள் கடந்தன. பின்பு சுந்தரருக்கு வீதிவிடங்கனைத் தரிசிக்க வேண்டுமென்ற அவாமூள, சேரமானின் உத்திரவுபெற்றுப் புறப்பட் டார். சேரமானும் தாயைவிட்டுப் பிரியும் கன்றைப் போல வருந்திப் பின்பு விசேஷமான திரவியங்களையும்

பட்டாடைகளையும், ஆபரணங்களையும் யானைகளிலும் பல்லக்குகளிலும் ஏற்றிச் சுந்தரருடன் அனுப்பினர்.

அவைகளைப் பெற்றுக்கொண்டு வரும்போது ஓர் அடர்ந்த கானகத்தில் அஸ்தமித்துப்போயிற்று. ஈசுவரன் தம்மையன்றிப் பிறரொருவர் கையாலும் வன்றொண்டர் செல்வம் பெறலாகாதென்ற எண்ணத்தால் தம் பூதகணங்களை ஏவ, அவர்கள் திருடர்களாகவந்து தம்பிரான் றோழரின் திரவியமனைத்தினையுங் கொள்ளை கொண்டனர். வன்றொண்டர் சமீபத்திலுள்ள திருமுருகன்பூண்டி யென்னும் ஸ்தலத்தையடைந்து சிவனார்முன் விழுந்தெழுந்து, 'கொடியகானகத்தில் வேடர்கள் என் பொருள் யாவையும் பறிக்க இவ்வளவு சமீபத்தில் தாம் இருந்து என்ன செய்தீர்கள்?' என்ற கருத்துடன் பதிகம்பாட, கோயிலின்முன் அவ்வளவு பொருள்களும் குவியலாகக்கிடக்கக் கண்டனர்.

## முதலைவாய்ப்பிள்ளை அழைக்கப்பெற்றது.

அவைகளை யெடுத்துக்கொண்டு சுந்தரர் ஆரூர் வந்து சேர்ந்து பரவையார் மாளிகையில் முன்போல அமர்ந்தனர். பின்பு பலநாட்கள் கழிந்து மறுமுறையும் சேரமானைக்காண ஆவல்கொண்டு மலைநாட்டிற் கேகப் புறப்பட்டனர். வழியில் பல ஸ்தலங்களையும கடந்து கொண்டே கொங்கு நாட்டிலுள்ள திருப்புக்கொளியூர் என்ற அவிநாசி யென்னும் க்ஷேத்திரத்தை யடைந்து மறையவர் வீதியாய்ப் போய்க்கொண்டிருந்த போது ஒரு வீட்டினின்றும் மங்கலவாத்தியங்களின் ஒலியும் மற்றதினின்றும் அழுகையொலியும் கிளம்புவதைக்கேட்டு விசாரித்தார். அங்கிருந்தவர்கள்,

'ஐயனே! சில வருஷங்களுக்கு முன் இவ்விருவீட்டு இருகுழந்தைகளும் ஐந்துபிராயமுள்ளவர்களாக விருந்தனர். அவர்கள் ஒரு மடுவில் குளிக்கச்சென்றபோது ஒருமகனை முதலைவிழுங்கிற்று. பிழைத்த குழந்தைக்கு இன்று உபநயனக்கலியாணம் நடக்கின்றது. இச்சமயத்தில் தம்குழந்தை இறந்ததைக்குறித்து அதன் பெற்றோர்கள் வருந்துகின்றனர்.' என்றனர். இதைக்கேட்ட தொண்டரின் மனம் புண்ணடைந்தது. இதற்குள் சுந்தரமூர்த்தி வந்துளாரென்றறிந்த அவ்வந்தணரும் அவர் மனைவியும் குழந்தையின் நினைவையும் மறந்து ஓடிவந்து தொண்டரின் பாதங்களில் விழுந்தனர். அவர்களை நோக்கிச் சுந்தரர் "முன்பு மகனை முதலை விழுங்கப்பெற்ற மதலையின் பெற்றோர் தாங்களேயோ?" என, அவர்கள் "ஐயனே! நாங்கள் அவ்வளவு அபாக்யர்களாயினும் எங்கள் கருமத்தை மன்னித்து எங்கள் மனையில் உண்டு, கிருதார்த்தராக்கவேண்டும்" என்றனர். அவர்களின் உள்ளன்பைக்கண்டுவியந்து, சுந்தரர், 'அச்சிறுவனை அந்த முதலை வாய்நின்றும் அழைத்தே அவிநாசி எந்தைபெருமான் கழல் பணிவேன்" என்றுகூறி, அவ்வேரிக்குச்சென்று, 'உரைப்பருரை, என்னும் பதிகம்பாடக்கூற்றுவன் குழந்தையின் உயிரைக்கொணர்ந்து கழிந்த வாண்டுகளையும் நிரப்பி அம்முதலையின் வயிற்றிலிட அது வெளியேவந்து அவ்வாலிபனைக் கக்கிற்று. அதைக்கண்ட மாந்தரும் தேவர்களும் வியந்தனர், பெற்ற தாய் ஓரே ஓட்டமாயோடி அம்மைந்தனை வாரியெடுத்து உச்சிமோந்து கண்ணீர்களால் அவனைநனைப்பித்துச்சுந்தரர் கால்களில் வந்து விழுந்து, 'ஐயனே! என்மகனுக்கு உயிர்ப் பிச்சைகொடுப்பித்தபெருமானே!" என்று பலவிதமாக மொழிந்த

னள். சுந்தரர் அத்தினத்திலேயே அக்குழந்தைக்கும் உபநயன மணம் செய்வித்து அவிநாசியப்பனைப் பரவி மேற்கே சென்றனர்.

## முடிவு.

அவர் வரும் செய்தியையறிந்த சேரமான் தன் சேனைகளுடன் எதிர்சென்றழைத்துப் பலவுபசாரங்களுடன் தன்னரண்மனையில் நுழைந்தார். அவரின் விருந்தினராகச் சிலநாள் மகோதையிற்றங்கி சுந்தரர் ஓர் நாள் திருவஞ்சைக்களம் என்னும் பதியிலுள்ள புனிதனூர் கோயிலுள் நுழைந்து பிரதக்ஷணம் செய்து சந்நதியில் வீழ்ந்தெழுந்து, 'இவ்வுலகினில் பாசம்நிறைந்த இவ்வாழ்க்கையை நீக்கிவிடவேண்டும்' என்று பிரார்த்தித்தனர்.

அக்கணமே பரமபதியின் கட்டளையின்படித்தேவர்கள் வெள்ளானையுடன் வஞ்சைக்களத்திற்கு வர ஸ்வாமிகள் இறைவனின் கருணையை வியந்து யானையின்மேலேறிக்கொண்டு,'தானெனை முன்படைத்தான்' என்னும் பதிகத்தைப் பாடிக் கோயிலை வலம்வந்து ஆகாயத்தி லெழுந்தனர். அச்சமயத்தில் ஸ்வாமிகள் சேரமான் பெருமாணாயனாரை நினைக்க, அவர் உடனே பக்கத்தில்நின்ற குதிரைமீதேறி திருவஞ்சைக்களத்திற்கு வந்து வெள்ளானை ஆகாயத்திற் செல்வதைக் கண்டு, மனங்கலங்காமல் தனபரியின் காதுகளில் ஐந்தெழுத்துக்களடங்கின திவ்வியமந்திரத்தையோத அது ஒரேபாய்ச்சலாக ஆகாயத்திலெழும்பி வெள்ளானையை வலம் வந்து அதன் முன்னேசென்றது.

தேவர்களெல்லோரும் எதிர் கொண்டழைக்க

வன்றொண்டர் கைலாயமலையின் தென்றிசைவாயிலில் நுழைந்து பல கோபுரங்களையுடைய திருக்கோயிலினை யடைந்தார். அங்கே சேரர் தடைப்படுத்தப்பட சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் தனிமையாக எவர்க்கும் அறிய அரியவரான அரனார் முன் சென்று பாதங்களில் வீழ்ந்து கண்களில் நீர்வார, உடலம்புளகிப்பத் தூக்கின கையினராய், "அடியனேன் பிழைபொறுத்து ஆண்டு என் தீவினைகளைப்போக்கி முடிவிலாநெறி தரும்பெருங்கருணையே!" என்று பலவாறு புகன்று, ஆனந்தமே ஒரு வடிவெய்தி இன்பக்கடலில் மூழ்கியதோ என்னும் வண்ணம் நின்றனர். பின்பு எம்பெருமானைநோக்கித் "தங்கள் கருணைக்குப் பாத்திரனாகும் சேரன் கோயிலின் வாயிலில் நிற்கின்றான்." என, 'அவனை யழைத்துவருக.' என்று எம்பெருமான் ஆஞ்ஞாபித்தார். அக்கணமே இறைவர் அங்கு வந்தடைந்த சேரனையுங் கடாக்ஷித்து அவன் பாடிய உலாவையுங் கேட்டு மகிழ்ந்து வன்றொண்டரை முன்போல ஆலாலசுந்தரராயிருக்கச்செய்து, சேரமான் பெருமாணயனாரையும் ஒரு கணநாதராக்கினார், பரவையாரும் சங்கிலியாரும் கமலினி அநிந்திதையுமாய் முன்போல மலையன்மகள் கோயிலில் தம்தொழிலைச் செய்து வந்தனர்.

என்று மின்பம் பெருகு மியல்பினா
லொன்று காதலித் துள்ள மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்.

சுபம்!!

முற்றிற்று.

உ

ஸ்ரீத்யாகராஜாயநம:

# மனுநீதி கண்ட சோழன்

அல்லது

# 'அருமந்த அரசாட்சி அரிதோ?'

## நாட்டுவளம்,

பூவுலகினிலுள்ள பலநாடுகளிலும் சிறப்புவாய்ந்ததாய் பொன்னிநதி பாய்வதால் மிக்கச்செழுமையுள்ளதாய் விளங்குவது சோழநாடாகும். அதன் நீர் நிறைந்த ஏரிகளும் ஓடைகளும், நெல்நிறைந்த கழனிகளும், கனிகள்செறிந்த விருக்ஷங்களையுடைய தோட்டங்களும், நறுமணம் வீசும் மலர்கள் நிறைந்த பூஞ்சோலைகளும், காண்பவர் கண்களையும் மனங்களையும் கவரும். அந்நாட்டிலுள்ள சிவவைஷ்ணவ ஸ்தலங்களைக் கணக்கிட முடியாது. நெருங்கியுள்ள பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள மாளிகைகள் ஆகாயத்தை அளாவித் தெய்வலோகத்துக் கட்டிடங்களைப் பழித்து நிற்கும். அப்பதிகளிலுள்ள மாநகர்கள் தத்தம் வருணத்திற்கேற்ற செயல்களில் முயற்சியுடையவர்களாய் மிக்க ஒற்றுமையுடன் வாழ்ந்தனர்.

அத்தகைய சோழநாட்டின் மத்தியில் 'நிறைசெல்வத் திருவாரூர்' என்னும் தொல்பதி தனக்கிணையில்லாதபெருமைகளுடன் விளங்குகின்றது. அதன் வீதிகள் தோறும், வேதவோசையும், வீணையினோசையும் தெய்வபக்தர்கள் எம்பெருமானைத்தோத்திரம் செய்யும் ஓசையும், கீதவோசையும் எங்கும் நிரம்பியிருந்தன. இராஜக்கிருஹங்களில் முழங்கும் முழவொலி இந்திரனரண்மனையில் வழங்கும் முரசொலியை நிகர்த்தது. தேர்கள், யானைகள், பரிகள் இவைகளின் ஆர்ப்புக் கடலோசையை விஞ்சியது. மாடங்கள், மாளிகைகள், சூளிகைகள், மண்டபங்கள், கூடங்கள், சாலைகள், கோபுரங்கள், சாளரங்கள், அரங்கங்கள் இவைகள்தோறும் தெய்வமாதர்கள் போன்ற கன்னியர்கள் ஆடும் சிலம்பொலி விசும்பிற் பறந்தது. அந்நகரின் மத்தியிலுள்ள திருப்பெருங்கோயிலைச் சுற்றிலுமுள்ள நந்தவனங்களில் கிளிகள் பதிகங்கள் பாடிநின்றன.

கைலாயமேபோன்று விளங்கும் அத்திருக்கோயிலின் புறங்களிலெல்லாம் தவத்தை நாடின முனிவர்கள் சிவத்தியானத்திலாழ்ந்திருந்தனர். மறையவர் செய்யும் வேள்விகளினின்று எழும் புகை ஆகாயத்தை மறைத்தது. நிலமகளுக்கு முகம்போலவும் மலர்மகளுக்கு மலர்போலவும் விளங்கும் அந்நகரில் வீதிவிடங்கப்பெருமானுன ஸ்ரீ தியாகராஜன் நீலோற்பலாம்பாளுடனும் ஸ்கந்தருடனும் இரத்னசிம்மாசத்தின் மீது எழுந்தருளிப் பலவுலகங்களையும் காத்துவருகின்றனர். ஆங்கு உலோகமாதாவாகிய கமலாம்பிகை சராசரங்களாகிய பொருள்கள் யாவும் உய்யும்பொருட்டு ஈசானிய முகமாக வீற்றிருந்து அரியதோர் தவம்புரிந்து வரு

கின்றனர். கைலாய மத்தியில் வாழும் பரமேசன் இத் திருநகரில் புற்றிடங்கோண்டானென்னும் பெயருடன் விளங்கிவருகின்றனர்.

## மனுச்சோழர் அரசாட்சி.

இத்தகைய வைபவங்களுடன் விளங்கும் ஜீவன் முக்த க்ஷேத்திரமாகிய ஆரூரில் சூரியவம்சத் தோன் றலான மனுச்சோழன் என்னும் அரசர் செங்கோல் முறைமை வழுவாமல் செவ்வனே அரசாண்டு வந்தார். அவர் கல்வி கேள்விகளில் மிக்கச் சிறந்தவர். சகல சாஸ்திரங்களையும் அறிந்தவர். அரசர்க்குரிய கல்வித் தேர்ச்சியில் அவருக்கிணை யெவருமில்லை யென்ற பெயர் பெற்றவர். அவரின் மந்திரிகள் வரும்பொருளைச் செவ்வனே ஆராய்ந்தறியும் தன்மையுள்ளவர்கள். புத்தி கூர்மையுள்ள பிரகஸ்பதி போன்ற அவ்வமைச்சர்கள் அரசருக்கு ஹிதமான உபதேசங்களைச் செய்து வந்த னர். மனுவின் சேனைகள் சென்ற விடங்களிலெல் லாம் ஜயம் பெற்றுப் பகைவர்களுக்குப் பீதியையும் அன்பர்களுக்கு அமைதியையும் அளித்து வந்தன. யானைகள் நடப்பது மேகங்களின் சலனத்தை யொத் தது. குதிரைகளின் கனைப்புக் கடலின் ஒலியை நிகர்த்தது. ரதங்களின் சிகரங்கள் பல சூரியர்களைப் போலப் பிரகாசித்தன. பதாதிகளின் தொகை அள விடப் படமுடியாமலிருந்தது. மன்னரின் ஆஞ்ஞா. சக்ரம் விஷ்ணுவின் சக்ரத்தைப்போல் துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனஞ் செய்து வந்தது. அவரது வட்டக் குடை சந்திரனைப் போல வெளுத்துக் குளிர்ந்த தன்மை யுடையதாய் சோழ நாட்டுக்கு நிழலை யளித்து

வந்தது. தர்ம நெறியில் சிறிதும் பிறழாத அவருடைய செங்கோல் அவரைத் தர்ம தேவதைக்குச் சமமாகச் செய்தது.

இத்தகைய குணங்களோடு கூடிய மன்னர் காலத்தில் பிரஜைகள் யாதொரு குறைவுமில்லாமல் வாழ்ந்து வந்தனர். மறையவர்கள் தேவாராதனை செய்தல், வேள்விகள் புரிதல், வேதமோதுதல், ஓதுவித்தல் முதலிய தங்களுக்குரிய கடைமைகளிற் சிறிதும் வழுவாதிருந்தனர். போர்க்குரிய சகல அஸ்திர சஸ்திரங்களிலும் வல்லராயும் யானையேற்றம் குதிரையேற்றம் முதலிய பயிற்சிகளில் மேம்பட்டவராயும் கண்டோர் நடுங்கும்படியான தோற்ற முடையவர்களாயும் இருந்த க்ஷத்திரியப் போர்வீரர்கள் நாட்டை எதிரிகளினின்றும் காப்பாற்றி வந்தனர். வைசியர்களின் ஆதரவின் கீழ் வாணிபம் செழுமை யடைந்தது. மிக்கத் தேகபலமும் மனோபலமும் பெற்ற சூத்ரர்கள் பரிசுத்த மனமுடையவர்களாய் நாட்டின் நன்மைக்காகப் பாடுபட்டு வந்தனர். இன்னும் பற்பல தொழிலாளிகள் தம் முன்னோர்கள் செய்து வந்த தொழில்களினின்றும் சிறிதும் வழுவாமல் மனவொற்றுமையுடன் வேலைசெய்து வந்தனர்.

அவ்வரசனது காலத்தில் தேவாலயங்கள் மிக்கப் பிரகாசமடைந்திருந்தன. கிராமந்தோறும் நகரந்தோறும் கட்டப்பட்டுள்ள கோயில்களின் கோபுரங்கள் ஆகாயத்தை யளாவின. பூஜா காலங்களில் ஆங்கு நின்றெழும் மணியோசை வானத்தை நிரப்பியது. காலந்தவறாமல் பூஜைகளும் விழாக்களும் நடந்து வந்தன. ஒவ்வொரு ஆலயத்திலும் ஈசுவரன் பிரத்யக்ஷ

மாய் விளங்கி வந்தனன். மனுச்சோழர் காலத்தில் சோழ நாடு அமரர் நாட்டையே யொத்திருந்தது.

அப்பொழுது அந்நாட்டில் மாதம் மும்மாரி பொழிந்தது. பஞ்சமென்பதும் இன்மையென்பதும் அத்தேசத்திலேயே இல்லை. ஜனங்கள் அரசரது ஆஞ்ஞைக்கு அடங்கி மிக்க நேர்மையுடன் நடந்துவந்தனர். பொய், களவு, வஞ்சகம், கொலை, முதலிய பாதகங்கள் மனுவின் காலத்தில் நடந்ததேயில்லை. பிரஜைகளின் எவ்விதக் குறைவையும் கேட்க அரசர் எக்காலத்திலும் ஆயத்தமா யிருந்தார். எனினும் அவரது அரண்மனையின் முன் கட்டப்பட்டிருந்த ஆராய்ச்சி மணி ஒருநாளும் அசைபடவே இல்லை. துன்பத்தைத் தரக்கக்கூடிய கொடிய வியாதிகளும், அகாலமரணமும், அப்பொழுது கிடையா. சுருங்கச் சொல்லில் மனுச்சக்ரவர்த்தி காலத்தில் ஜனங்கள் எவ்வகையான குறைவுமில்லாமல் சுகமாகவேயிருந்தனர்.

## மகப்பேறு.

இவ்வளவு பெருமைகளுடனிருந்த மன்னருக்கு மகப்பேறின்மையால் அவர் தாம் மிக்கக் குறைவை யடைந்தவராக எண்ணினர். 'பெறுமவற்றுள் யாமறிவதில்லை மக்கட்பேறல்ல பிற;, என்றபடி மற்ற மேன்மைகளெல்லாம் அவருக்குப் பொருட்டாகவே படவில்லை. "என் வரையில் வந்த சூரிய வம்சம் இனி அற்றுப் போவதா? புத்திரனில்லாத தன்மையால் யானும் என் மூதாதைகளும் நரகில் வீழ்ந்து சோகமடைவதா?" என்று அவரெண்ணிவருந்தினர். அரசியும், "மலடியென்னும் பெயர் படைத்தோ நான் வாழ்வேன்! இவ்

வளவு செல்வங்களையளித்த அந்தக் கமலாம்பிகை இச்செல்வத்தை மாத்திரங் குறைத்தனளே! என் மகனென்று நான் ஒரு குழந்தையை யெடுத்து உச்சி மோந்து முத்தமிடுவேனோ?" என்றேங்கினாள். காமியமான எப்பொருளையும் இச்சிக்காத அவ்வரசவரசியர் ஒரு மகப்பேற்றுக்காக மனம் வருந்தினர். பல நூதனக்கோயில்களை யெழுப்பினர்; பல நீர்த்துறைகளிலாடினர். கணக்கற்ற தான தருமங்களைச் செய்தனர். பின்பு 'தீராக்குறைக்குத் தியாகேசனே கதி' யென்று தினந்தோறும் அவனது திருக்கோயிலுக்கு நடந்து சேவித்து வந்தனர். தம்மையண்டினவர்களின் குறைகளைத் தீர்ப்பதே தம் தொழிலாகக்கொண்ட அப் பெருமான் மன்னன் மனமகிழும்படிக்கும் அரசியின் அகங்குளிரும்படிக்கும் அநுக்கிறஹஞ் செய்தனன்.

பத்து மாதங்கள் சென்று ஒரு சுபதினத்தில் அரசி ஓர் அழகிய மகனை ஈன்றனள்.

இச்சமாசாரத்தைக் கேள்வியுற்ற அரசர் பேராநந்தங் கொண்டார். வெகு காலந் தவம் புரிந்த ஓர் இருடியின் முன் அவர் தியானிக்கும் பொருள் நின்றால் எவ்வித வாநந்தத்தை அவர் அடைவரோ அதை விடப் பெரிய இன்பம் மகனையடைந்த மன்னருக்கு உண்டாயிற்று. எம்பெருமானின் திருவருளை நினைத்து மகிழ்ந்தும் அவர் தம் பிரஜைகளுக்கு விசேஷமான தானங்களைச்செய்தார். அந்தணர்களுக்குப் பூதானம், கோதானம், சொர்ணதானம் முதலியவைகளை வழங்கினார். பிரஜைகள் தாம் கட்டி வந்த வரிப்பணத்தை அன்று முதல் பன்னிரண்டு வருஷங்களுக்குக் கட்ட வேண்டாமென்று உத்தரவளிக்கப்பட்டது. சிற்ற

சர்களும் அது முதல் ஏழுவருஷங்களுக்குத் திறைப் பணம் செலுத்தவேண்டுவதில்லை. அரசரது பொக்கிஷம் திறக்கப்பட்டது. வேண்டியவர்கள் வேண்டியபடி செல்வத்தைப் பெற்றுச் சென்றனர். நாட்டிலுள்ள சிறுவர்களுக்கெல்லாம் விசேஷமாகத் தின்பண்டங்கள் அளிக்கப்பட்டன. ஆலயங்கள் புதிப்பிக்கப்பெற்று விழாக்கள் கொண்டாடப்பெற்றன. எங்குச் சென்றா லும் குதூகலமும் உற்சாகமுமே மேம்பட்டிருந்தன. பிரஜைகள் யாவரும் தத்தமக்கே ஏற்பட்ட ஒரு பெரிய மங்கல காரியமென நினைத்துக் கொண்டாடினர்.

அரசர் இவ்விதம் தானங்களைச் செய்து பின் வைதிகமுறைப்படி செய்யவேண்டிய காரியங்களைச் செவ்வனே செய்து முடித்தார். பின்பு விதிப்படி திரை மறைவிலிருந்து இளஞ் சூரியனைப் போலப் பிரகாசிக்கும் அம்மகவைத் தரிசித்தனர். பிறவிக் குருடன் திடீரெனக் கண்பெற்றது போல அவர் அளவற்ற மகிழ்ச்சியையடைந்தார். அரண் மனைச் சோதிடர்களை அழைப்பித்துப் பிறந்த லக்னத் தின் பலன் கேட்க அவர்கள் ஆராய்ந்து, "தியாகேசப் பெருமானின் அருளாற் பிறந்த பெறுவதற்கரிய இம் மைந்தன் உலகத்தில் அழியாப் புகழை நிலை நாட்டும் பேரரசனுவான். அவனது செய்கையால் தங்களுடைய நாமம் சூரிய சந்திரர்கள் உள்ளவரையில் நிலைத்திருக் கும். அவனுக்கு அத்தியாகேசப் பெருமானின் பெய ராகிய 'வீதிவிடங்கன்' என்னும் பெயரே மிக்கப் பொருந்தும்." என்று கூறினர்கள். அவ்வண்ணமே மனுவின் மைந்தன் வீதிவிடங்கன் என்று நாமகரணம் செய்யப்பட்டான்.

## வீதிவிடங்கனின் பால்யப் பருவம்.

வளர் பிறைச் சந்திரன் போல வீதிவிடங்கன் வளரலானான். அவனது மேனி இளஞ்சூரியனை நிகர்த்தது. அவன் தன் வயதொத்த சிறு அரசிளங்குமரர்களோடு தோட்டங்களில் விளையாடுவது கைலையங்கிரியில் பார்வதிகுமாரரான ஷண்முகரே இவ்வண்ணம் புவியில் வந்து விளையாடுகின்றனரோ என்று சந்தேகிக்கச் செய்தது. அவன் ஒரு ஆட்டத்திலும் தோற்பதில்லை; தோற்றாலும் அதைக் கம்பீரமாய் ஒப்புக்கொண்டு பந்தயப்படி தான் செய்யவேண்டியதைச் செய்வான். சிறுகுழந்தை முதற்கொண்டே அவனுக்கு ஜீவகாருண்யம் அதிகம். ஒரு சிறிய எறும்பையும் அவன் மிதித்ததில்லை. பிறர் மனம் நோகும்படி ஒரு வார்த்தையும் அவன் பேசான். அவனது புன்முறுவலோடுகூடின முகத்தைக் கண்ட எவரும் மேகத்தைக்கண்ட மயிலைப்போல மகிழ்ச்சி பெறுவார்கள். அவனுடைய அழகிய மிருதுவான பேச்சைக் கேட்க எவரும் ஆசைகொள்வார்கள். தன்குற்றத்தைத் தான் ஒப்புக்கொண்டு அதற்குத் தக்க சிக்ஷையைப் பெறுவதற்கு அவன் அவசரப்படுவதைக் கண்டு பிரஜைகள் 'இத்தகைய இளவரசரை நாம் பெற என்ன பாக்கியம் செய்தோம்?' என்று கொண்டாடுவார்கள்.

சரியான காலத்தில் மனு அவனுக்கு அக்ஷராப்பியாசம் செய்வித்தார். அவனுக்கு ஏழு வயதில் உபநயனம்செய்விக்கப்பட்டது. க்ஷத்திரியர்களுக்குரியபல கலைகளும் அவனுக்குப் புகட்டப்பட்டன. தான் வைத்தபொருளையே திரும்பி எடுக்கும் தனிகனைப்

போல ஒரு சிரமமுமில்லாமல் சகல கலைகளையும் அவன் வெகு சுளுவில் தன் வசமாக்கிக்கொண்டான். வேத வேதாங்கங்களிலும், புராண ஆகம சாஸ்திரங்களிலும் அவனை வெல்வார் எவருமில்லை. தேச சரித்ரங்கள் இராஜ்ய தந்திர நுட்பங்கள் இவைகளிலும் அவன் நிபுணனானன். போர்க்குரிய பல பயிற்சிகளும் அவனுக்குக் கற்பிக்கப்பட்டன. இவைகளுக்கெல்லாம் மேலே அவனது குணத்தையும் பக்திப் பெருக்கத்தையும் என்னென்று சொல்வது? மலர்மகள் இவர்களின் கடாக்ஷத்தைப் பூர்ணமாகப்பெற்ற மைந்தனுக்குச் சிவானுக்ரகமும் நிரம்பியிருந்தது. அவன் வெண்மையான புண்டரந்தரித்து சிறிய உருத்திராக்ஷமாலையுமணிந்து பட்டாடைகளுடனும் இரத்னுபரணங்களுடனும் வெளிப்போதலைக்கண்ட மாந்தர்களின் மனம் காந்தத்தாலிழுக்கப்பட்ட இரும்புக் கம்பியைப்போல அவன் பால் சென்றது. இவ்விதம் சகல சம்பத்துக்களும் பொருந்தி வீதிவிடங்கன் இளவரசப் பட்டம் பெறும் பருவத்தை யடைந்தான்.

## தியாகேசனைத் தரிசிக்க ஆவல்கொள்ளல்.

இப்படியிருக்கும் நாட்களிலோர் நாள் வீதிவிடங்கன் பரிமள தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து, பட்டாடைகளுடுத்தி விபூதியணிந்து, பலவித வாபரணங்களையும் உருத்திராக்ஷமாலையுமணிந்து, பல அரசிளங்குமரர்களும் அந்தணர் சிறுவர்களும் சூழ்ந்து நிற்ப, தன் பிதாவின் முன்னிலையை யடைந்து சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து நின்றான். இளம்பரிதி போன்ற தேஜசும் மார்க்கண்டேயனைப் போன்ற கல்வியும்

பெற்ற தன் குமாரனைக் கண்ட மனு அடங்காத பெரு மகிழ்ச்சி கொண்டு ஆசனத்தை விட்டெழுந்து கைக ளால் அவனைத் தழுவிக் கட்டிக் கொண்டு தம்முடன் ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்து மற்றப் பிள்ளைகளுக் கும் மரியாதை செய்து, அவனை நோக்கி, "என்னரு மைக் குழந்தாய்! வீதிவிடங்கா! உன்னைக் காண்ட லும் என்மனமடையும் குதூகலத்துக்கு அளவில்லை. நீ க்ஷேமமா? உன் நண்பர்கள் சுகமா? நீ என்றும் க்ஷேமமாயிருக்கும்படியாய் ஸ்ரீ தியாகேசரைப் பிரார்த் திக்கின்றேன். இப்பொழுது என்னைத் தேடி வந்த கார ணம் யாது?" என்று வினவ, விடங்கன் எழுந்து நின்று கைகூப்பி, "என் ஐயனே! தங்களருளால் நாங்கள் யாவரும் சுகமே! தங்களின் குளிர்ந்த பார்வையின் கீழ் எங்களுக்கு என்ன குறையேற்படப் போகின்றது? என்மனத்தில் ஒரு சிறிய அவா எழும்பியது; அதனை இவ்விடம் விண்ணப்பித்து உத்தரவு பெறவே நான் இங்கு இப்பொழுது வந்தேன்." என்றான். உடனே அரசர், "மைந்தா! நீ விரும்பும் எதனையும் நான் மறுப் பேனோ? நீ எதைக்கேட்டாலும் அளித்தலிற்றடை யில்லை. ஆகையால் சங்கோசமில்லாமல் அதைச் சொல்க." என்று சொல்லலும், வீதிவிடங்கன் கை கூப்பி, "பெறுதற்கரிய என்னருமைப் பிதாவே! நம் மையெல்லாம் சிருஷ்டித்தவரும் சகல அண்டங் களுக்கு மிறைவரும் ஆரூரைத் தமது ராஜதானியாகக் கொண்டவருமான எம்பெருமான் தியாகேசனைத் தரி சனங்கொள்ள ஆசைகொண்டேன். இதுவே எனது விருப்பம். இதற்கு அனுக்கிரகஞ் செய்தருளவேண் டும்." எனப் பிரார்த்தித்தான்.

அம்மொழிகளைக் கேட்டதும் அரசருக்குண்டான ஆநந்தத்துக்கு அளவேயில்லை. அவர் மகனை மறுமுறையும் தழுவிக் கொண்டார்; ஐயனது கருணையைக் குறித்து ஆநந்தக் கண்ணீர் சொரிந்தார்.

மைந்தனை நோக்கி, 'என்னருமை மைந்த! சர்வதயாபரரும், எங்கும் நிறைந்தவரும் திருமாலின் பூசனையையும் இந்திரனின் சேவிப்பையும் மறந்து ஆரூர் செய்த பாக்கியத்தால் இவண் வீற்றிருப்பவருமான ஸ்ரீதியாகராஜப்பெருமானை நீ சேவிப்பதற்குத் தடையுண்டோ? அவரே எல்லோரிலும் மேம்பட்டவர்; ஆதியந்த மில்லா அருட் பெருஞ் சோதி யவரே! அவரிடமிருந்தே சகல வண்டங்களும் பிறந்தன. அங்கேயே அவை யாவும் ஒடுங்கும். இவ்வுலகம் செய்த பாக்கியத்தினாலேயே யன்றோ அவர் தேவியுடனும் குமாரனுடனும் பொற் சிங்காதனத்தின் மீது நமது நகரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளினர்? அவரை ஒருக்கால் தியானிப்பவர் தமது வினைகளினின்றும் விடுபட்டவராவர். அவரை ஒரு முறையேனும் தரிசிப்பதனால் ஒருவன் பெறுதற்கரிய பேறுகளைப் பெறுகின்றான். அத்தகைய மூர்த்தியை நீ தரிசனம் செய்ய விரும்பியது உனது நற்காலமே. இவ்விண்ணப்பத்தைத் தவிர எனக்கு அதிகச் சந்தோஷம் தரத்தக்கது வேறொன்றுமில்லை. அதனால் அதற்கு வேண்டிய காரியங்களை ஆயத்தஞ்செய்துகொண்டு ஜாக்ரதையாகச் சென்று வருவாயாக" என்று விடையளித்தனர். அம்மொழிகளைக் கேட்டு வீதிவிடங்கன் மகிழ்ந்து தந்தையை வணங்கி வெளியே போந்தான்.

பின்பு அவன் தனது அன்னையின் அரண்மனைக்

குச்சென்று அவரைச் சாஷ்டாங்கமாக வணங்கித்தன் விண்ணப்பத்தை அறிவித்துக் கொண்டான். தன் மகனைக் கண்டமாதா அளவிலாச் சந்தோஷங்கொண்டு அவனை வாரியணைத்துமடியில்வைத்துக்கொண்டு,"என்னருமைக்குழந்தாய்! உனக்கு இவ்வளவு இளம்பிராயத்தில் இவ்வபாரமான புத்தியைக் கொடுத்த பிரபுவின் கருணையை என்னென்று சொல்வேன்! உன்னைப்பெறுவதற்கு நாங்கள் நீராடாத புண்ணிய தீர்த்தங்களில்லை; தொழாத தேவாலயங்களில்லை; பின்பு ஒரே உறுதியாக அத்தியாகேசனைத் தொழ அவரது அருளாலேயே உன்னை மகனைப் பெற்றோம். குழந்தாய்! அவரை நீ சேவித்துத் தீர்க்காயுளைப் பெற்று வா" என விடையளித்தனர்.

## தரிசனத்துக்கு ஆயத்தம்.

இவ்விதம் பெற்றோர்களிடம் உத்திரவு பெற்றுக் கொண்டு வீதிவிடங்கன் தோழர்களுடன் தன்னரண்மனைக்குட் புகுந்தான். சிவதரிசனத்துக்கு வேண்டிய ஆயத்தங்கள் வெகு சீக்கிரத்தில் செய்யப்பட்டன. முன்னதாகவே ஈசுவர சந்நிதியில் சமர்ப்பிக்க வேண்டிய சாமான்கள் அனுப்பப்பட்டன, கோயில் முழுமையும் வெகு அழகாய் அலங்கரிக்கப்பட்டது. எல்லோரும் 'இன்று இந்திரன் பூஜிக்குந் தினமோ அல்லது முகுந்தன் நடத்தும் திருவிழாவோ?' வென்று ஐயங்கொண்டனர். தெருக்கள் தோறும் நீர் தெளிக்கப்பட்டுத் தோரணங்கள் கட்டப்பட்டன. மாடங்களில் கட்டப்பட்டுள்ள கொடிகள் காற்றிலசைவதால் வீதிவிடங்கனை "வா! வா!" என்று சொல்வன போலத்

தோன்றின. அரசிளங்குமரன் வீதியில் வருகின்றானெனக் கேள்வியுற்ற ஸ்திரீகள் தத்தம் வீட்டுவாயில்களை மெழுகிப் பெரிய முத்துக் கோலங்களிட்டனர். வீடுகள் தோறும் பூர்ணகும்பங்கள் வைக்கப்பட்டன. எல்லோரும் தங்கள் வேலைகளைச் சீக்கிரம் முடித்துக் கொண்டு வீதிகளிற் கூடினர்.

இதற்குள்ளாக வீதிவிடங்கன் பரிமள நீரில் மங்கள ஸ்நாநம் செய்து முடித்து வெண்பட்டுடுத்திச் சிவபெருமானைத் தியானித்துக்கொண்டே வெண்ணீறு அணிந்து, சந்தனம், கஸ்தூரி இவைகள் பூசிக் கிரீடம், குண்டலம் முதலிய பலவகையாபரணங்கள் பூண்டு, பொற் பிரம்பைக் கையிலேந்திக் கட்டியக்காரர்கள் கட்டியங்கூற, வந்தியர் பாட, வேதியர் வாழ்த்தப் பேரிகை முழங்கப் பல பரிசனங்களுடன் அரண்மனையிலிருந்து வெளியேறினன். யானைகள், குதிரைகள், ஒட்டகைகள், எருதுகள் முதலிய அரண்மனை மிருகங்கள் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டு முன்னே சென்றன. சேனுவீரர்கள் பற்பல ஆயுதங்களுடன் வரிசையாக நின்றனர். மங்கல வாத்தியங்கள் முழங்கின. நாட்டியப் பெண்கள் ஆடினர். மந்திரி முதலான உத்தியோகஸ்தர் வெகு உயர்ந்த ஆடைகளணிந்து புண்டரீகம் தரித்து முன்னின்றனர். அரண்மனைச் சேவகர்கள் கோயிலுக்குக் கொண்டு போக வேண்டிய மாலைகள், ஆடைகள், நகைகள், பழங்கள் முதலியவைகளைப் பொற்றட்டுக்களிலேந்தி நின்றனர். அரசகுமாரருடன் கோடிசூரியர்கள் ஒருங்கே உதயமாயின போன்ற ஒளி வீசும் முடிகளைத் தரித்த பல சிற்றரசர்களும் வந்து தத்தமக்குரிய வாகனங்களிலேறினர். சூரியனின்

புரவிகளோ என்றதிசயிக்கத்தக்க வேகத்தையுடைய குதிரைகளுள் பூட்டப் பெற்ற ஒரு பொற்றேரில் வீதி விடங்கன் ஆரோஹணித்துக்கொண்டான்.

பல மங்கலவாத்யங்கள் முழங்கவும், அஷ்டமங் கலங்களை யேந்திக்கொண்டு சுமங்கலிகள் சூழ்ந்து போகவும், வெண்சாமரங்கள் வீசவும், விசிறிகளாட வும், இந்திரன் ஊர்வலம் வருவது போல அரசகுமாரன் வீதியின் ஊடே சென்றான். ஜனங்கள் ஒரேகூட்ட மாகக்கூடி மிக்க ஆவலுடன் வந்து, கோடைகாலத் தில் வெகுதூரம் நடந்த பிரயாணிகள் ஒரு தெள்ளிய நீரோடையைக்கண்டு அதனிடம் சென்று பருகுவது போல, மிக்க ஆர்வத்துடன் அவனது திருமுகத்தின ழகை அருந்தினர். ஒவ்வொருவரும் "என்னே இவன் முகத்தின் பொலிவு! மனுச்சோழனே திரும்பவும் உருவெடுத்துள்ளனோ?" எனறும், 'இவனழகுக்கு மயங்கியே மன்மதன்உடலை நீக்கியிருப்பான்.' என் றும், 'இவ்வளவு வீரமும் பராக்கிரமும் எவருக்குத் தான் வரும்! இத்தகைய இளவரசனைப்பெற நாம் செய் துள்ள பாக்யந்தானென்ன?' என்றும், 'எங்கு நமது அரசவம்சம் அற்றுப்போமாவென்ற ஏக்கமுடைய நம் நாட்டிற்குச் சிங்கக் குட்டியையொத்த வீரமும், சந்திர னைப்போன்ற குளிர்ந்த பார்வையும், சூரியனை நிகர்த்த தேஜஸும், பிரகஸ்பதியைபோன்ற அறிவும் பொருந் திய இவ்விளவரசனையளித்த தியாகேசனின் கருணை தானென்னே!" என்றும் பலர் பலவாறு பேசினர்.

மாடங்களிலும் வீதியோரங்களிலும் நெருக்க மாய் ஸ்திரீகள் கூடினர். என்றும் பெறாத வைபவத் தை அன்று பெற்றதுபோல் அவர்களின் மனம் அன்

பால் கிரம்பிற்று. 'இவ்வழகிய காளையைக் காண எண்ணிலாத கண்கள் வேண்டும்!' என்றும், 'இம்மன்மதனைப்பெற நமது அரசியர் என்ன நோற்றூர்களோ?' என்றும், 'இம்மன்னனுல் ஆளப்பட நாம் செய்த பாக்யமென்னே?' என்றும், 'இவ்விளங்குமாரனுக்கு மாலை சூட்டப்போகும் வனிதையெவளோ?' என்றும், 'இவனது கடைக்கண்ணினழகொன்றே மூவுலகத்தையும் வெல்லுமே!' என்றும் பலர் பலவிதமாகப் பேசினர்; மங்கல ஹாரத்திகள் சுழற்றினர்; 'ஜய விஜயீபவ!' என்று ஆரவாரத்தனர்.

## பசுங்கன்று அரைபடல்.

அன்று ஆரூரிலெழும்பின சத்தம் விண்ணுலகத்தைப் பிளந்தது. தேவர்களும் இவ்வரிய காட்சியைக் காணக் கூடினர். அச்சமயம் தேரிற்கட்டிய குதிரைகள் தேர்ப்பாகனின் வசத்தை மீறி நடக்க ஒருவரும் அறியாவண்ணம் ஓர் ஆவின் புனிற்றிளங்கன்று கூட்டத்தில் வெருண்டு தன் பின்னே வரும் தாயைப் பிரிந்தோடித் தேர்க்காலினூடே புகுந்து அறிவழிந்து மெய்ந்நடுக்குற்று உடல்சரிந்து, அரைபட்டு, உயிரிழந்தது.

அவ்விஷயத்தைக் கேட்டவுடனே வீதிவிடங்கன் இடியோசையைக்கேட்ட நாகத்தைப்போல நடுநடுங்கி அறிவழிந்து கீழேவிழுந்தான்; பின்பு சற்றுத்தெளிந்தெழுந்தான். அவன் கண்களினின்று நீர் ஆருய்ப் பெருகிற்று; அவன் முகம் சோர்ந்தது: அவன் "சங்கரா! இந்தப்பழிக்கு நான் என்னசெய்வேன்! இப்படியா என் தலையில் இடிவிழவேண்டும்? நானென்னசெய்

வேன்! நான் என் வினையை நோவேனோ? நான் புறப்பட்டவேளையை நோவேனோ? என்றுமில்லாதபடி இன்றுநாட்பார்த்துக்கொண்டுஈசனைத்தரிசனம்பண்ணவெண்ணி வெளியே வந்த எனக்கோ இப்பழி நேர்வது? கோயிலுக்குச் செல்பவன் யாதொரு ஆடம்பரமுமின்றிக் கால்நடையாகச் செல்லவேண்டியிருக்க மந்திரிமார்களின் விருப்பத்தின்படி இவ்வாடம்பரங்களுடன் புறப்பட்டேனே! ஏ! தியாகேசா! தயாநிதே! என்னறியாமைக்கு இவ்வளவு பெரிய தண்டனையையோ விதிப்பது! பிறந்த நாள் முதல் ஒரு சிறு எறும்பிற்கும் துன்பம் விளைவித்து அறியேனே! ஜீவகாருண்யமே உருவாய் வந்த எந்தந்தை இவ்விஷயத்தையறிந்தால் என்னபாடு படுவர்! ஜீவஹிம்சை யின்னதென்பதையே யறியாத இந்நாட்டில் மன்னனின் மைந்தனே ஒரு கோஹத்திக்குப் பாத்திரமானான் என்ற அழியாப் பழியை யுண்டாக்கினேனே! எனது சூர்ய வம்சத்தில் இத்தகைய தீவினையை யிழைத்தவரெவருமில்லையே! இதற்கு நானென்னசெய்வேன்!

"மிருகங்களுக்குள் மிக்கப்புனிதமானது பசுவாயிற்றே! அதற்கு ஒரு பிடி புல்லும் ஒரு சிறுதுளி நீரும் அளிப்பதாலேயே சகல பாபங்களும் நீங்குமென்று சொல்வார்களே! அத்தகைய ஒரு பசுவின் கன்றை நான் அரைத்துவிட்டேனே! தியாகேசனே! இதோ என் முன் நாவைப் பிதுக்கிக்கொண்டு, உடல் முறிந்து, மல்லாந்து கிடக்கும் பரிதாப நிலைமையை என்னால் பார்க்க முடியவில்லையே! எதற்கென்று நான் வருந்துவேன்? தன் கன்று தேர்க்காலால் அரைபட்டுக் கிடக்கும் காட்சியைக்கண்டதும் தாய்ப்பசு எப்படிக்

கதறுமோ? பத்துமாதம் வயிற்றில் வைத்துப் பெற்ற தன்னிளங்கன்று இவ்வண்ணம் இறந்துகிடப்பதைப் பார்த்தவுடன் அத்தாயின் வயிறு எவ்விதம் எரியுமோ? ஒரு சிறிதுநேரம் தன்னைவிட்டு விலகிப் போனாலும் அதன் மனஞ்சகியாதே! பின்பு கண்டவுடன் 'அம்மா! அம்மா!' என்று அலறிக்கொண்டு அருகில் வந்து நக்கிக்கொடுக்கும் தாயின் துயரத்தை நான் எவ்விதம் ஆற்றப்போகின்றேன்?என்விதி இப்படியா இருந்தது? நான் அரசிளங் குமாரனாய்ப் பிறந்து இவ்வவலமான கதியையடைந்தேனே! பசுங்கன்றைக் கொலைபுரியும் மகாபாதகனென்ற பெயரைப்படைத்தேனே! தர்மமே உருவெடுத்து வந்த என் பிதாவின் முகத்தில் நான் இனி எவ்விதம் விழிப்பேன்! நல்லது! இதற்கு ஒரே வழிதானுண்டு. அவர் காதுகளில் இவ்விஷயம் விழு முன் என்னுயிரை மாய்த்துக்கொள்வதே துணிபு. இதைவிட எனக்கு வேறு வழியாதொன்மில்லை," என்று பிரலாபித்துத் தன்னுயிரைவிடத் தயாராயிருந்தான்.

## மந்திரிகள் வீதிவிடங்கனைத் தேற்றல்.

அப்பொழுது அருகிலிருந்த அந்தணர்களும் அமைச்சர்களும் மனங்கலங்கி வீதிவிடங்கனைப் பார்த்துத் தாங்களும் கண்ணீர் விட்டனர். பின்னர் அவனை நோக்கி, "அரசிளங்குமாரரே! இப்படி நீர் வருந்துவதால் எங்களுக்கெல்லாம் துக்கமுண்டாகிறது! நீர் ஏன் ஒன்றுமில்லாத காரியத்திற்காக வருந்துகின்றீர்! அப்பசுங்கன்று உம்மால் அறிந்து கொல்லப்பட்டதா? ஒவ்வொரு மனிதனும் தரையில் கடக்கும்

போது எவ்வளவோ கிருமிகளை அறியாமல் நசுக்கு கின்றான். அதற்காக எவனாவது உயிரை மாய்த்துக் கொண்டிருக்கின்றானா? இன்று அப்பசுங்கன்றுக்கு விதி முடிந்துபோயிற்று. அதனால் அது ஒருவருமறி யாமல் ஓடி வந்து தேர்க்காலில் அகப்பட்டுக்கொண்டி றந்தது! இதற்காகத் தாம் வீணில் வருந்தவேண்டாம். தேர் மேலேறிக் கோயிலுக்குச் செல்லலாம். அல்லது உமது மனத்தில் கிலேசம் அதிகமிருக்கின்றபடியால் அறியாமற் செய்த பாபத்திற்காகச் செய்யவேண் டிய பிராயச்சித்தங்களைச் செய்யலாம்; எழுந்திரும்.'' என்று சொன்னார்கள்.

## வீதிவிடங்கனின் மறுமொழி.

இம்மொழிகளைக் கேட்ட வீதிவிடங்கன் முன்னி லும் அதிகமாக வருந்தி அன்னவரை நோக்கி, "அறிவிற் பெரியோர்களே! நடுவு நிலைமையிலிருந்து ஒருபோதும் தவறாத தாங்கள் இன்றேன் மாற்றுமொழி கூறினீர் கள்? அரசகுமாரனுக்கென்று தருமம் வேறு விதமா கப் பேசுமோ? இதுவும் என் கால விபரீதந்தானோ? அவ்விளங்கன்றைக் கூட்டத்தில் யாரோ துரத்த, அது வெருண்டு ஓடிவர, அதனைக் காப்பாற்ற வேண் டிய நான் என் இறுமாப்பால் தேரிலிருந்த வண்ணமே அரைத்துக் கொன்றேன்! முன்பு என் வம்சத்தில் சிபி என்னும் மன்னவர் ஒருபுறாவின் உயிருக்காகத் தன்னு யிரை விடத் தயாராயினார். ஒரு புறாவினுயிரைவிட ஓராவினுயிர் எவ்வளவு மேன்மையுற்றது? அரசன் பசுக்களை ரக்ஷிக்கக் கடமைப்பட்டவன். அவனே அதைக்கொன்றால் அவனுக்கும் பிராயச்சித்தமுண்

டோ? ஆதலால் நான் கொண்ட தீர்மானத்தை நிறைவேற்ற எனக்கு அநுமதிகொடுங்கள்." என்று கண்களினின்று நீர் ஆறுகப்பாய, நாக்குழற, மெய்கலங்கக் கூறினான்.

## பிராயச்சித்தத்துக்கு இணங்கல்.

அதைக்கேட்டு அவ்வந்தணர்களும் மந்திரியார்களும் "வீதிவிடங்கரே! உமது மனம் துன்பத்திலாழ்ந்து உண்மையையறியச் சக்தியற்றுத் தயங்குகின்றது. நாங்கள் ஒருவர்க்கொன்று சொல்லி, மற்றொருவருக்கு ஒன்று சொல்பவர்களில்லை. இப்பசுங்கன்று யாரோ துரத்த உம்மிடம் அடைக்கலம் புக வரவில்லை. அதற்குச் சாநாள் இன்றென்று எழுதியிருக்க அதன் விதி அதை இங்கே கொண்டு புகுத்தியது. நீர் இதற்காக மனந்தளருவது வீண் காரியமாகும். ஆபத்துச் சமயங்களில் மனதை நிதானப்படுத்துவதன்றோ அறிவோர்களுக் கழகு? ஆதலால் வீண் சஞ்சலப்படாமல் தேர் மீதேறும். தோஷத்திற்கேற்ற பிராயச் சித்தங்களைச் செய்து பின்பு அரண்மனைக்குச் செல்வோம்." என்று வற்புறுத்தினர்.

அம்மொழிகளைக் கேட்டு இளங்குமாரன் இன்னது செய்வதென்று அறியாமல், "அறிவில் மிகுந்த பெரியோர்களே! அலையிலகப்பட்ட துரும்புபோல் அலைகின்றது என் மனம்! 'முற்றிலும் நனைந்தோர்க்கு ஈரமுண்டோ?' மகாபாபியான நான் வருந்துவதாகக் கூறுவது பாசாங்கல்லவோ? இறந்துபட்ட இக்கன்றினுக்காக வருந்துவேனோ? அதன் தாயின் துயரத்தை நினைத்துத் துக்கிப்பேனோ? என் மதி யீனத்தை

கினைந்து மாய்வேனே? அகம்பாவத்தால் தேர் மீதேறித் தேவாலயஞ் செல்லத் துணிந்த என் துணிச்சலைக் குறித்துத் துக்கிப்பேனே? தொன்று தொட்டுப் பழி பாவம் இன்னதென்றே யறியாத என் வம்சத்திற்கு வீண் பெயரைச் சம்பாதித்துக் கொடுத்ததைப் பற்றி கினைத்து அழுவேனே? மாசற்ற என் பிதாவின் அரசாட்சியில் கொடிய கொலைப் பாதகம் செய்தானென்ற பழியைச் சுமற்றினதைக் குறித்து அவலம் பிப்பேனே? நானெதற்கென்று வருந்துவேன்? இதற்கோ நான் பிள்ளை பிறந்தேன்? பெரியோர்களே! இனி உங்கள் வார்த்தையைத் தட்டினேனென்ற அபவாதம் வேண்டாம். உங்கள் உத்திரவின்படி நடக்கின்றேன். என்றாலும் என் மனம் அம்முறைக்கு இடங் கொடுக்கவில்லை." என்று கூறி அவர்கள் கைகளைக் கொடுத்தழைக்கத் தேர்மீதேறினன்.

## தாய்ப்பசுவின் பிரலாபம்.

இதற்குள்ளாக அக்கன்றைப்பெற்ற காராம்பசு தன் குழவியைக் காணுமல் வருந்தி அங்குமிங்குமலைந்து, கடைசியாக அது விழுந்து கிடந்த விடத்தினருகில் வந்தது. தூரத்திலிருந்தே அது தன்கன்று கீழே விழுந்து இறந்து கிடப்பதைக்கண்டு அலறி, மூர்ச்சித்து விழுந்தது; பின்பு எழுந்து கண்களில் நீர் ஆருய்ப்பெருக அதனருகில்வந்து, "ஐயோ! என் ராஜாவே! சற்றுமுன் என் முன்னுல் வாலை முறுக்கிக்கொண்டு துள்ளிக்குதித்தனையே! ஒரு நொடியில் என் வயிற்றில் மண்ணைப் போட்டுவிட்டு இறந்தனையோ! ஐயோ! உன்னழகைப் பார்த்துப் புல்லெடுக்கக்கூட மனமில்லாமல் கிற்பேனே! என்ன செய்வேன்! உன்னைப் பெறுவதற்காக

நான் இந்த ஆரூர்க்கோயிலை எத்தனை முறை சுற்றி னேன்! மிருக தீர்த்தத்தில் எத்தனை முறை முழுகி னேன்! ஏ! கமலாம்பிகே! என் பாலவ்வளவையும் உனக்கே யுபயோகிக்கக் கொடுத்தேனே! இப்படி உன் முன்னிலையிலேயே என்னைப் பரிதபிக்க விட்டனையே! இதற்கு நானிழைத்த பாபம் என்ன? ஐயோ? என் மகன் பெரிய விருஷபமாகித் தியாகேசரின் வாகனம் போலத் தெருவில் வருவானென்று எண்ணியிருந்த எண்ணங்களெல்லாம்பாழாயினவே!சங்கரா!சம்போ!" என்று நினைத்துக் கதறி அதனை முகர்ந்து பார்க்க, அது தேருருளையால் அரைக்கப்பட்டிருந்ததைக் கண்டு பின்னும் கீழே விழுந்து அலறி, "ஐயோ! இதென்ன அநியாயம்? ஏ குழந்தாய்! உனக்கோ இவ்விதி வருவது! மலைபோன்ற தேர் பூவினும் மெல்லிய உன் உடலில் சென்றரைத்ததோ? என்கண்ணே! நீ என்னபாடு பட்டனையோ? இக்கொடுமையைக் கண்டும் இன்னும் உயிர் வைத்திருக்கின்றேனே! என்னருமைக் குழந்தாய்! இவ்வன்னெஞ்சாளை அன்னையாய்ப் பெறுவதிலும் உயிரிழப்பது மேலென்று என்னை நீத்தனையோ? என்னருமை மகனே! இன்று நான் யார் முகத்தில் விழித்தேனோ? உன்னைப்பெற்ற பெருமையால் இவ்வுலகில் எனக்கு இணையாருமில்லை யென்று இறுமாந்தேனே! என் வயிற்றில் மண்ணை இறைத்தாயே! ஐயோ! நான் எவருக்கும் ஒரு தீங்கும் இழைத்தறியேனே! சிறு குழந்தைகளெல்லாம் என்னிடமும் உன்னிடமும் வந்து விளையாடுமாறு அன்புடன் இடங்கொடுத்தேனே! தாயில்லா கன்றுகளுக்குப் பால்கொடுத்தேனே! கோயிலைக் கண்டபோதெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டேனே!

"ஐயோ! இப்புண்ணிய நகரில் உயிர்க்கொலையே கிடையாதென்று சொன்ன நாளெல்லாம் போயிற்றோ? அரசனில்லையோ? நீதியில்லையோ? கேட்பாரில்லையோ? இக்கொடிய காரியம் செய்த மகாபாவியைத் தண்டிக்க எவருமில்லையோ? அவ்வன்னெஞ்சனைக் கண்டால் ஒரு நொடியில் என் கொம்புகளால் கிழித்தெறிவேன்! அவனும் ஓடிவிட்டானே! என்னசெய்வேன்! இத்துக்கத்தை யாரிடம் தெரிவிப்பேன்? அநாதைக்குத் தெய்வமே துணை? இன்றைக்குத் தெய்வத்துக்கும் கண்களில்லையே! பிரஜைகளுக்குத் துன்பம் வந்தால் மன்னனிடத்திலேயே தெரிவித்துக்கொள்ள வேண்டும். அவரே இதற்குப் பரிகாரந் தேடக்கடவர்." என்று தீர்மானித்துப் பசுந்தழைகளால் அக்கன்றை மூடி வைத்துத்,

தன்னுயிர்க் கன்று வீயத் தளர்ந்தவா தரியா தாகி
முன்னெருப் புயிர்த்து விம்மி முகத்தினிற் கண்ணீர் வார
மன்னுயிர் காக்குஞ் செங்கோல் மனுவின்பொற் [கோயில் வாயிற்
பொன்னணி மணியைச் சென்று கோட்டினாற் புடைத்த தன்றே.

## மன்னனின் மனப்பான்மை.

சிற்றரசர்கள், மந்திரிகள், உத்தியோகஸ்தர்கள் முதலியவர்கள் தத்தம் ஆசனங்களில் வீற்றிருப்ப, உயர்ந்த மேடையில் இரத்னமயமானதோர் சிம்மாசனத்தில் கொலு வீற்றிருந்து இராஜ்ய வியவகாரங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்த மனுச்சோழரின் காதுகளில் அம்மணியோசை கேட்டது. தான் முடிசூடின நாள் முதல் ஒரு நாளும் அசைபடாத அம்

மணியின் சத்தத்தைக் கேட்டதும் அரசர் திடுக்கிட்டெழுந்து மந்திரிகளை நோக்கி, "இதென்னவதிசயம்! எந்நாளும் கேட்டறியாத இவ்வொலி இன்றேன் கேட்டது?" என்று அவர்களுடன் வாசலில் ஓடி வந்தார். வருகிற வழியிலேயே காவலர்கள் எதிர் வந்து வணங்கி, "ஐயனே! ஈங்கு ஒரு பசு வந்து தங்களது அரண்மனை வாயிலிற் கட்டப்பட்டுள்ள பெரிய ஆராய்ச்சி மணியைத் தன் கொம்புகளால் அசக்கியது." என்றனர்.

அரசர் வேகமாகவந்து அப்பசுவினை நோக்கினர். அதன் கண்களினின்றும் நீர் பெருகுவதைக் கண்டு மனங்கலங்கி அருகில் நின்ற அமைச்சர்களை இகழ்ந்து நோக்கி, "மந்திரிகளே! இத்தலையீற்றுப் பசுவிற்கு என்ன நேர்ந்தது?" என்று வினவினர். அவர்களெல்லோரும் நடுநடுங்கி, இன்ன சொல்வ தென்றறியாமல் நிற்க, அவர்களுள் வயது முதிர்ந்த ஒருவர் மனத்தைத் தேற்றிக்கொண்டு, மன்னவரை வணங்கி, ஈன சுரத்துடன்,

'வளவ! நின் புதல்வ னுங்கோர் மணிநெடுந் தேர்மேலேறி
அளவில்தேர் தானை சூழ அரசுலாந் தெருவிற் போங்கால்
இளையவான் கன்று தேற்கா லிடைப்புகுந் திறந்ததாகத்
தளர்வுறு மித்தாய் வந்து விளைத்ததித் தன்மை' யென்றன்.

இம்மொழிகளைக் கேட்ட அரசர் விஷம் தலைக்கேறுண்டவர் போல மயக்கமடைந்து, பின்புதெளிந்து, "ஆகா! இப்படியா நடந்தது? ஏ! அரிய பசுவே! இதுவோ உன்குறை? என்னைக் கொண்டு உன் குறையைத் தீர்த்துக்கொள்ளலாமென்று என்னிடம் வந்து சேர்ந்திருக்கின்றாய்! ஆகா! நான் எவ்விதம் உன் துய

ரைத் தீர்ப்பேன்! உன்னைக்காணவும் எனக்கு மனஞ் சகிக்கவில்லையே! அடிக்கடி பெருமூச்சு விட்டுக்கொண்டு என்னை நோக்குகின்றாயே! ஏதோ உன் குறையை நிவர்த்திப்பவன் போலப் பரபரப்பாக ஓடியும் வந்தேனே! எனது முன்னோர்களிலொருவர் தம் நாட்டில் ஒரு அகால மரண மேற்பட்டு அக்குழந்தையின்பிதா வந்து முறையிட நேரில் யமலோகஞ் சென்று உயிரை மீட்டு வந்தனரே! அத்தகைய சக்திதான் வாய்க்கப் பெற்றேனல்லேனே? அல்லது உயிரை மீட்கத்தக்கச் சஞ்சீவியையேனும் பெற்றேனோ? நானெவ்விதம் உனக்குப் பரிகாரம் சொல்வது! ஐயோ! இப்பசு ஒரு சிறு பயத்திற்கும் அஞ்சித்தன் கன்றைச் சேர்த்து அணைத்துக் கொள்ளும்சுபாவமுடைய தாயிற்றே! புலி வந்தெதிர்ப்பினும் தன்னுயிரைக் கொடுத்தாலும் கன்றின் உயிரைக் காக்கும் தன்மையுடைய தாயிற்றே! ஒரு நிமிஷ நேரம் தன்குழந்தையைக் காணவிட்டால் 'அம்மா! அம்மா!' என்றலறும் இ ப்ப சு எவ்விதம் இத்துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்கின்றதோ?

"மனு என்ற பெயரையுடைய என் அரசாட்சி நன்றாயிற்று.! செங்கோல் தவறாமல் நீதிசெலுத்துவதாய் நான் நினைத்து இறுமாந்ததற்கு இதுவோ தண்டனை! ஹே! தியாகராஜா! என் மனமறிய நான் ஒரு தீங்குஞ் செய்தவனல்லனே! என்னையேன் இப்பழிக்காளாக்க வேண்டும்! இதனைச் செவியுற்றும் என் பிராணன் அசையாமல் நிற்கின்றதே! ஐயோ! 'நமக்கும் பிள்ளைபிறந்தான்; உலகத்தில் பெற வேண்டிய பேறுகள் யாவையும் பெற்று விட்டோ மென்று எண்ணினேனே! ஒருநொடியில் இவ்விடி என் தலைமேல் விழுந்ததே!

" கோயிலுக்குச் செல்பவன் நடந்தல்லவோ செல்லவேண்டும்? அப்படியே தேரூர்ந்து செல்வானுயி னும் ஆட்களைவிட்டு இருபக்கங்களிலும் தாராளமாய் வழியை விலக்கிக் கொண்டு மெல்லச் செல்லவேண் டும்! அப்படியிருக்கச் சிறுபிள்ளைத் தனமாய்ப் பரப் பரப்புடன் சென்று இத்தீராப்பழியைக் கொண்டா னே! அவன் கற்றதும் கேட்டதும் அவலமாயிற்றே! அவனைத்தான் நொந்து பயனென்ன? என் பாபம் அவனையுஞ் சூழ்ந்தது! இதற்கென்ன செய்வேன்!" என்று மன்னவன் பட்ட துயரத்துக்களவேயில்லை.

மன்னுயிற் புரந்து வையம் போதுக்கடிந் தறத்தி னீடும்
என்னெறி நன்று(ல்)!' என்னு 'மென் செய்தாற்றீநும் என்னும்
தன்னிளங் கன்று காணுத் தாய்முகங் கண்டு சோரும்,,
அந்நிலை யரச னுற்ற துயரமோ ரளவிற் றன்றால்

## மந்திரிகள் மன்னனைத் தேற்றல்.

இவ்விதம் மன்னர் வருந்துவதைக் கண்ட மந்திரி கள் முடிவு என்னவாகுமோ வெனப் பயந்து அரசரை வணங்கிச் "சகலமுமறிந்த பிரபுவே! தாங்களேன் இக்காரியத்திற்காக இவ்வளவு வருந்தவேண்டும்? அரச குமாரர் வெகு ஜாக்ரதையாகத் தான் தேரோட்டிச் சென்றூர். பல ஏவலாளர்கள் இருபுறங்களிலும் போயினர். பலவாயிரக் கணக்காகக் கூடியிருந்த ஜனங்களின் மத்தியில் அக்கன்று எவ்விதமோ ஒரு வருமறியாமல் வந்து தன்னுயிரை மாய்த்துக் கொண் டது. அதன் ஆயுள் அவ்வளவாகவேயிருக்க வீணுகத் தாங்கள் தங்களையும் மைந்தனையும் நோவதேன்? அவர் எவ்வளவு ஜீவகாருண்ய முள்ளவரென்பதை நாங்களறிவோம். நடக்கும்போதே ஏதேனும் கிருமி

கள் நசுங்கி விடுமோ வென்று அவர் கூசிநடப்பார். அத்தகைய மைந்தர்மீது வீணுகக் குறை கூறலாமோ? ஆதலால் கோஹத்திக்குச் சாஸ்திரங்களில் விதித்துள்ள பிராயச்சித்தங்களைச் செய்வித்து அவரைப் புனிதராக்க வேண்டும். இதுவே தொன்று தொட்டு வந்த வழக்கமுமாகும். வீணில் வருந்த வேண்டாம்.'' என்றனர்.

அம்மொழிகளைக் கேட்ட மன்னர் கோபத்துடனும் இகழ்ச்சியுடனும் நகைத்து, "அமைச்சர்களே! உங்கள் வார்த்தை வெகு நன்ருயிருக்கின்றது? நடுவு நிலைமையிலிருந்து மாருமல் ஸத்யத்தையே எப்பொழுதும் பேசி வந்த நீங்கள் இன்று பக்ஷபாதமாகப் பேசினது ஏனே? அரசகுமாரனுயிற்றே யென்று நீங்களும் நீதி தவறத் துணிந்தீர்களோ? உங்கள் வழக்கு வெகு நன்ருயிருக்கின்றது! பிராயச்சித்தம் செய்து கொள்வது வழக்கமென்கிறீர்கள். எமது மரபில் எந்தவரசன் கோஹத்தி செய்துப் பிராயச்சித்தஞ் செய்துகொண்டான் ? இன்னும்,

'வழக்கென்று நீர் மொழிந்தால் மற்றதுதான் வலிப்பட்டுக் குழக்கன்றை யிழந்தலறுங் கோவுறுநோய் மருந்தாமோ?
இழக்கின்றேன் மைந்தனை யென்(று)எல்லீருஞ் சொல்லியவிச் சழக்கின்று நானியைந்தால் தருமந்தான் சலியாதோ'?

"உங்கள் சொல்லுக்கு நானிசைந்து விட்டால் என்னிடம் பரிகாரந்தேடவந்த இப்பசுவின் குறை தீர்ந்து விடுமோ? இது வெகு நன்ருயிருக்கிறது! இதுகாறும் எனக்கு இதத்தையே சொல்லிவந்து மனுச்சோழன் என்ற என் பெயர் நிலைக்கும்படி செய்து வந்த உங்கள் தைரியம் இன்றேன் உங்களைவிட்டது? இது

வும் என் காலக் கொடுமையே! உங்கள் சொல்லை நான் கேட்பதனுல் மிக்கப் பதிதனுவேன், பிரஜைகளால் அவமதிக்கப்பட்டு தர்மத்தாலும் கைவிடப்பட்டவனு வேன். அரசனென்பவன் யார்?

'மானிலங்கா வலனுவர்ன் மன்னுயிர் காக்குங் காலத்
தானதனுக் கிடையூறு தன்னுற்றன் பரிசனத்தா (ல்)
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மா (ல்)
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனே?'

"இவ்வித ஐவகைப் பயங்களையும் தீர்க்காதவன் அரசனு? மற்றும் என் மகன் இன்று செய்த குற்றத் திற்குப் பிராயச்சித்தங்கள் செய்யத் துணிந்து நாளை மற்றொருவன் இவ்விதக் குற்றஞ் செய்யின் அவனைத் தண்டித்தால் தருமதேவதை சலிக்காதோ?

"என்மகன்செய்பாதகத்துக்கிருந்தவங்கள் செய விசைந்தே
அன்னியனே னுயிர்கொன்ற லவனைக் கோல் வேனுனல்
தொன்மனுநூல் தொடை மனுவாற் றுடைப்புண்டதேனும் [வார்த்தை
மன்னுலகிற் பெற மொழிந்தீர் மந்திரிகள் வழக்கே"ன்றான்

பின்னும் அவர்களைநோக்கி, "அமைச்சர்களே! தன் அகம்பாவத்தால் கீழே ஓடிவரும் கன்றைக் கவனியாமல் தேரையோட்டி அதன் உயிரை வாங்கின பாபியாகிய அவனை இலகுவில் விட்டுவிடுவதோ? இதுவோ அறம்? அத்தேரின் காலிலேயே அவனை விட்டு அரைப்பதே நீதியாகும்." என்று தீர்மானித் தனர்.

அத்தீர்மானத்தைக் கேட்ட மந்திரிகள் நடுங்கி னர். அரசனுக்கு எதிராகப் பதிலுரைக்கவும் அவர் நா எழவில்லை. அவர்களுள் வயது முதிர்ந்த ஒருவர்

சற்றுப்பொறுத்து மன்னனை வணங்கி, "ஆண்டவரே! தாங்கள் தயவுசெய்து நாங்கள் சொல்வதைக் கேட்டருளவேண்டும். ஆன்மாக்களின் அறிவு முதிர்ச்சிக்குத் தக்கவாறு புண்ய பாபங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒரு மனிதனை மற்றொருவன் காமக் குரோதம் முதலிய காரணங்களை முன்னிட்டுக் கொலை புரிந்தால் அவனுக்குக் கொலை விதிப்பது ஞாயமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதுவன்றி நாம் அறியாமலே ஐயறிவுள்ள மிருகத்தைக் கொல்வோமானால் அதற்குத் தண்டனை சாதாரணமான பிராயச்சித்தமேயொழிய உயிர்க்கொலையன்று. இன்னும் உமது முன்னோராகிய மனுவால் ஏற்படுத்தப்பட்ட தண்டனையைத் தாங்களேன் கைக்கொள்ளக்கூடாது? அதில் 'ஒரு பசுவைக்கொன்றவன் குடுமியையும் முகரோமத்தையும் க்ஷவரம் செய்து, அப்பசுவின் தோலைக் கட்டிக்கொண்டு, மூன்று மாதம் கோசாலத்தில் ஸ்நானம்பண்ணி, அவிசை யுண்டுகொண்டு பசுமந்தையுடனிருக்க வேண்டும்' என்று விதிக்கப்பட்டிருக்கின்றதே! அச்சாஸ்திரங்களெல்லாம் பொய்யோ? தங்கள் முன்னோர்களெல்லாம் அவைகளை அநுஷ்டிக்கவில்லையோ? மற்ற மன்னர்களெல்லாம் அதன்படி நடக்கவில்லையோ? வழக்கமும் சாஸ்திரமும் அப்படியிருக்கத் தாங்கள்மாத்திரம் ஒருவழியாக நடப்பானேன்?" என்றனர்.

அவ்வார்த்தைகளைக் கேட்டு மனுவேந்தர் நகைத்து, "அமைச்சரே! நீர் சொன்ன வார்த்தைகள் வெகு அழகாயிருக்கின்றன; ஆன்மாக்களின் அறிவு முதிர்ச்சிக்குத் தக்கபடித் தண்டனைகள் விதிக்கப்பட வேண்டும் என்றீர்! மனிதனைக் கொன்றால் கொலைத்தண்டனை

விதிக்கலாமென்றும் மற்ற மிருகங்களைக் கொன்றால் சாதாரணமான பிராயச்சித்தம் போதும் என்றீர். இது நன்றாயிருக்கின்றது! ஒவ்வொரு பிராணியினிடமும் சர்வேசுவரன் சிறிதும் வித்யாசமில்லாமல் வசித்து வருகின்றானென்பதை நீரறியீரோ? அவ்வவ்வான்மாவின் கர்ம விசேஷத்தின்படி ஜன்மங்களேற்படினும் அவ்வாத்மாக்கள் யாவும் அவ்வொரு பொருளினின்றே உண்டாயின வென்பது உமக்குத் தெரியாதா? அப்படியிருக்க அறிவின் முதிர்ச்சியை நாம் குறிப்பது எவ்வண்ணம்? மற்ற எவ்விஷயத்திலும் நாம் ஜீவராசிகளின் ஜன்மங்களை யுத்தேசித்து நடந்து கொண்டாலும் கொலை என்னும் விஷயத்தில் சகல உயிர்களையும் ஒன்றாகவே பார்க்கவேண்டும்.

"இன்னும் கோஹத்திக்கு மனு நூலில் ஒருவாறு சொல்லப்பட்டிருக்கிறதென்று சொன்னீர். மனுவின் அம்மொழிகள் சாதாரணமாக உடலில் அபிமானத்தை வைத்த மானிடர்களுக்குச் சொல்லப்பட்டவை யென்பது எனது மூதாதைகளின் துணிபு. அநித்யமான இப்பிரபஞ்சத்தில் மனதை வைக்காமல் நித்யமான பேரானந்தத்தைக் குறியாகக்கொண்ட அறிஞர்களுக்கு அப்பிராயச்சித்தம் விதிக்கப்படவில்லை. என் முன்னோர்களிளொருவரும் இத்தகைய பிராயச்சித்தத்திற்கு உடன்பட்டதாக நானறியேன். இன்னும் வேறு தேசத்து மன்னர்கள் அவ்வண்ணம் செய்துள்ளார்களென நீங்கள் சொல்லுவீர்களாகில், அம்முறை எனக்கேற்காது. பலர் கால தேசங்களுக்குத் தகுந்தபடியும் தம் சௌகரியத்தை யொட்டியும் தர்ம சாஸ்திரகளை யனுஷ்டிக்கின்றனர். அப்படிச் செய்வது

தெய்வ சம்மதமுமல்ல. என் வம்சத்தின் பெருமைக்கு ஒத்தது மில்லை.

"மேலும் இன்றிறந்த அப்பசுங்கன்றை ஐயறிவுள்ள ஓர் அற்பப்பிராணியென்றீர்கள்! இஃதொன்றே உங்கள் புத்தி பேதித்திருக்கின்றதென்பதற்குப் போதுமான அத்தாக்ஷியல்லவா? தன் குழந்தையிறந்த சோகத்தையும் தணித்துக் கொண்டு நியாயம் பெற வேண்டி இவண் வந்து மணியடித்து நிற்கும் காமதேனுவைப் போன்ற இப்பசுவையா ஐயறிவுள்ள மிருகம் என்கிறீர்கள்?'எவ்வுலகில் எப்பெற்றம் இதனைப்போல் வெவ்வுயிர்த்துச் கதறி மணி யெறிந்து விழுந்தது விளம்பீர்?' இது ஏதோ கர்மவிசேஷத்தால் பசு வாயிற்றேயன்றி மற்று அறிவு விஷயத்தில் மனிதனை விட எவ்விதத்தில் குறைந்தது?.

## பசுக்களின் மேன்மை

"இன்னும் பசுவின் மேன்மையை நீங்களறியீர்களோ? அதன் கொம்புகளினடியில் பிரும்ம விஷ்ணுக்களிருக்கின்றனர். அதன் சிரசில் சிவபெருமானும், நெற்றியில் சிவசக்தியும் வசிக்கின்றனர். அதன் மூக்கில் முருகனும், கண்களில் சந்திர சூரியர்களும், காதுகளில் அசுவனி தேவர்களும் வாசம் பண்ணுகின்றனர். வாயு பல்லிலும், வருணன் நாவிலும், இயமன் ஹிருதயத்திலும், யக்ஷர்கள் கொண்டைத்தலத்திலும், உதயாஸ்தமனமான சந்திகள் உதட்டிலும், இந்திரன் கழுத்திலும், சாத்தியர் மார்பிலும், வாயு நான்கு கால்களிலும், இலக்ஷ்மி பின்புறத்திலும், நாகேசர் அடி வயிற்றிலும் இருக்கின்றனர். கங்காதேவி அதன் ஜலத்

திலும் யமுனை சாணத்திலும் வாசம் பண்ணுகின்றனர். பூமாதேவி உதரத்திலிருக்கின்றாள். சமுத்திரம் பாற் காம்புகளிலிருக்கின்றன. கற்புடை மாதர் எல்லா அவயவங்களிலும் வசிக்கின்றனர். இவ்விதம் ஒரு பசுவின் தேகம் எவ்வளவு புனிதமான தென்பதை நீங்கள் யறியீர்களோ?.

பசுக்களுக்குச் சிச்ருஷை செய்து வலம் வந்து வணங்கிப் புல் கொடுத்துப் பரகதி யடைந்தோர் பலருண்டு. அதன் பால் தயிர் முதலிய ஐவகைப் பொருள்களாலாகும் பஞ்சகவ்வியங்கள் சிவனுக்கு அபிஷேகச் சாமான்களாக உபயோகப்படுகின்றன. அதன் சாணமே உயர்ந்த விபூதியாகின்றது. அதன் காளை ஈசுவரன் ஏறக்கூடிய இருஷபமாகின்றது. இதனையோ ஐயறிவுள்ள அற்ப மிருகமென்றீர்கள்? இன்னும் பிறந்தவர் பிறவாப்பதியான இவ்வாரூரின் மகிமையை நீங்களறிந்ததில்லையோ?

'போற்றிசைத்துப் புரந்தரன்மாலயன்முதலோர்
[புகழ்ந்திறைஞ்சி
வீற்றிருந்த பெருமானூர் மேவியுறைத் திருவாரூர்த்
தோற்ற முடை யுயிர் கோன்ற (ன்) ஆதலினற் றுணி
[பேர்நடா
னற்றவுமற் றவற்கொல்லு மதுவேயற மென நினை
[மின்!'

இப்புண்ணிய நகரில் தோன்றின எவ்வுயிரும் சிவகணமேயாகும்; இதனை இன்று அவன் கொன்றபடியால் அதற்குத் தண்டனையாக அவனைக் கொல்வேன்; இதுவே முடிவு." என்று கூறினர்.

இக்கொடுஞ் சொல்லைக்கேட்டு மந்திரிகள் அஞ்சி, யாதும் பேசமாட்டாமல் மனம் வருந்தி நின்றனர்.

## கொலைத் தண்டனை.

உடனே அரசர் கலாவல்லபன் என்ற மந்திரியை யழைத்து "இன்று பசுவின் கன்றைக்கொன்று மாபாதகத்தை கருவித்துக்கொண்ட வீதிவிடங்கன் என்ற பெயருள்ள குற்றவாளியைத் தேர்ச் சக்கரத்தி லிட்டு சீக்கிரத்திலரைத்து வாரும். என்றுகட்டளையிட் டார். அம்மொழிகளைக் கேட்டு அம்மந்திரி திடுக்கிட்டு, "இப்பாபம் எனக்கா நேர்ந்தது! அவன் பச்சைப் பால னாயிற்றே!ஒரு குற்றமுமறியாதவனாயிற்றே! என்ன ருமை மாணுக்கனாயிற்றே!என்னுயிர் போன்ற அவ்வீர சிகாமணியை நானுகொல்லச்செல்லவேண்டும்!சங்கரா! சம்போ! இது ஒரு விளையாட்டா? இவ்வினைக்கு நா னென்னசெய்வேன்? 'மாட்டேன்' என்று சொன்னால் அரசரதுகோபம் வரும். சென்று அவரது கட்டளையை நிறைவேற்றுவோமென்றால் இதனினும் கொடிய தென்னவிருக்கின்றது! இருதலைக்கொள்ளியலகப்பட்ட எறும்பானேனே!........நல்லது! இருவர்க்கும் நடுவில் நான் என்னுயிரைவிட்டு விடுகின்றேன். அரசன் பிர ஜைகளுக்குப் பிதாவல்லவோ? அவனுடைய மைந்த னின்பொருட்டு என்னுயிரை நான் விடத்தக்கவனே;" என்று சொல்லிக்கொண்டு பசுங்கன்று கிடக்குமிடத் திற்குச் சென்று தன்னுடைவாளை யெடுத்துத் தன் கழுத்தையரிந்து கொண்டு உயிரை யிழந்தார்.

இவ்விஷயத்தையறிந்த மன்னர் மனம் என்ன பாடுபட்டிருக்கும்? "ஐயோ! ஆரூரமர்ந்த ஐயனே! கருணைக்கடலே! அடியேனை இப்படியும் வருத்தலாமா! என் மனமாா நேர்வழியில் நடக்க வெண்ணும் எனக் கோ இவ்விடை யூறுகள் வரவேண்டும்? கலாவல்லபன்

இப்படிச்செய்வானென்று கனவிலும் நான் நினைக்கவில் லையே! இனிச் சென்றதைக் குறித்து வருந்திப் பய னென்ன? முன் யோசனையற்ற எனக்கு எதுவும் வரும். சரி! கன்றின் உயிருக்கு மைந்தனையும் மந்திரியின் உயிருக்கு என்னையும் மாய்ப்பேன்." என்று சொல்லி அருகிலிருந்த ஏவலாளர்களைக் குறித்து, அக்குற்ற வாளியைக் கட்டி இங்கே கொண்டுவாருங்கள்,. என்று ஏவினர்.

## மாந்தரின் வருத்தம்.

இதற்குள்ளாகப் பசு அரண்மனைக்குச் சென்று மணியை யசைத்த விஷயம் வீதிவிடங்கனுக்கு எட்டி யது. அவனும் 'சரி. இனி நமது பிதா நமக்கு இடும் கட்டளையே மேலானது.' என்று பிராயச்சித்த மொன்றும் செய்துகொள்ள இஷ்டப்படாமல் அரச ரது ஆஞ்ஞையை எதிர்பார்த்துத் தன்னரண்மனைக்குச் சென்று அங்கே காத்திருந்தான். அங்கு ஏவலாளர் கள் மிக்கத் தளர்வுடன் கண்ணீர் வடிய விட்டுக் கொண்டும் கைகளைக் கட்டிக் கொண்டும் போய் நின்று விம்ம, அவர்களைக் கண்டு ராஜகுமாரன், 'நண்பர்களே! ஏன் இப்படி வருந்தவேண்டும்? வரும் வினையை எவரே தடுக்க முடியும்? மனந்தளராமல் வந்த காரியத் தைச் சொல்க' என்று கூறினன். அவர்கள் மிகுந்த துன்பத்துடன் 'ஐயனே! மனுக்குலத்திற்கே யமன் போன்று ஒரு பசு வந்து இன்று அரண்மனை யில் ஆராய்ச்சி மணியையசைக்கத் தன் குலம் தன் னுடன் அற்றுப் போகும் வண்ணம் தீர்மானஞ் செய்து அரசர் தங்களை அழைத்துவரக் கட்டளையிட் டனர்.' என்று கூறினர்.

இச்சமாசாரம் அரண்மனை முழுவதும் பரவிற்று. எல்லோரும் 'ஹா' வென்றலறினார்கள். 'ஐயோ! மனுக்குலம் வேரறுந்ததே! கடவுளைத் தரிசிக்கப் போனவனுக்கு இதுவோகதி! இவ்வளவு பேரழகும் யௌவனமும் பெற்ற அரசகுமாரனைக் கொல்ல அரசர் துணிவரோ? இதுவோ தர்மம்!' என்று எவரும் கதறினர். இளவரசனின் தாய் ஓடி வந்து அவனைத் தழுவிக்கொண்டு, "ஐயோ! என்குறை தீர்ந்த தென்று இறுமாப்படைந்திருந்தேனே! அருமையாய் வளர்த்த பசுங்கிளியைக் கண்ணுக்கெதிரில் கொள்ளை கொடுப்பேனோ! என் வயிறு பற்றுகிறதே! ஏ! தியாக ராஜா! இதுவோ உன் கருணை! ஏ! வீதிவிடங்கா! உன்னைத்தரிசிக்க வந்த என் குழந்தையை இப்படியோ வாட்டுவது?" என்று தவித்தனள். அவர்களெல்லோ ரையும் வீதிவிடங்கன் வணங்கி, "நீங்கள் வருந்த வேண்டாம். நாம் பிறந்த அன்றே சாவது நிச்சய மாயிற்று. அச்சாவை எப்பொழுது பெற்றாலென்ன? என் பிதா என்னைத் தண்டிப்பது என் நன்மையின் பொருட்டல்லவா? அல்லாவிடில் நான் செய்த குற்றத்திற்கு எத்தகைய நரகங்களில் கிடந்து உழல வேண்டி வரும்? நமக்குள் ஒருவர்க்கொருவர் என்ன சம்மந்தமிருக்கிறது! ஏதோ மாயையின் தோற்றத்தால் இந்த உடலில் அபிமானம் வைத்து வருந்துகிறோம். இவ்வுடலுக்கும் நமக்கும் ஒரு சம்மந்தமுமில்லை. ஆத லால் நீங்கள் வருந்தவேண்டாம். மன்னரின் கட்டளைக் குக் கீழ்ப்படிய இதோ செல்கின்றேன்." என்று அவர் களை வணங்கிப் புறப்பட்டனன்.

யமதூதர்கள் போன்று பயங்கரமுள்ள ஏவலாளர்



'அருமந்த அரசாட்சி அரிதோ மற்றெளிதோ ?'

கள் சூழ்ந்து செல்ல நடுமத்தியில் துக்கத்துடன் செல்லும் வீதிவிடங்கனைப் பார்த்த மாந்தர்களெல்லோரும் "சற்று முன் சகல ராஜ வைபவங்களுடன் தேரூர்ந்து சென்ற இவ்வரசகுமாரனுக்கு நேர்ந்த இக்கதியையும் பார்க்க நேர்ந்ததே! ஆகா! விதியின் வலியை யாரே யறிவர்! ஈசுவரரின் திருவுளத்தை யாரேதெரிவர்!" என்றும், "இனித் தமக்குப்பின் சந்ததியில்லையே யென்று கூடப் பாராமல் தம்மைந்தனைக் கொல்லத் துணியும் அரசனின் மனமென்ன கல்லோ? இரும்போ?" என்றும், 'ஆகா! இத்தகைய நேர்மையுள்ள அரசனைப் பெற நாமென்ன பாக்கியம் செய்தோம்?' என்றும், 'இனி நமது இராஜகுமாரனை எப்பொழுது காண்போம்?' என்றும், பலர் பலவாறு பேசிச் சிந்திய மூக்கும் வடிந்த கண்களு முடையவராய் ஒதுங்கி அவன் பின் சென்றனர். ஆகாயத்தில் தேவர்களும் இத்துக்க சம்பவத்தைப் பார்த்து 'ஆ! என்ன நீதி! என்ன தர்மம்!' என்று சொலலிக் கொண்டு கூடினர். வீதிவிடங்கன் அரசரது முன்னிலையில் போய் நின்றான்.

## வீதிவிடங்கன் உயிர் துறத்தல்.

தம் முன் ஒதுங்கி நிற்கும் மைந்தனை நேரிற் பாராமல் மன்னர் வேறு புறம் பார்த்துக் கொண்டே, "இன்று அஜாக்ரதையாகத் தேரோட்டி இவ்வாரூரிற் பிறந்த ஓர் இளம் பசுங்கன்றைக் கொன்றதனால் இவன் கொலைப்பாதகஞ் செய்தகுற்றவாளியாகின்றான். இது நம்முன் ருசிப்பிக்கபட்டது. தர்மசாஸ்திரங்களிற் சொல்லிய வண்ணமும் தொன்றுதொட்டு எமது மரபில் ஏற்பட்ட வழக்கப்படிக்கும் இவன் அவ்வண்

ணமே ஓர்தேரினாலரைக்கப்பட வேண்டியவனாகின்றான்." என்றனர். அதைக்கேட்டு வீதிவிடங்கன் பிதாவின் கால்களில் விழுந்து, "பிரபுவே! இக்கொலைக் குற்றத்தை யான் செய்தது உண்மையே! அங்கேயே நான் என்னுயிரை விட்டுப்பழிக்குப் பழி வாங்கியிருப்பேன். தேவரீர் கட்டளையை எதிர்பார்த்தே இதுகாறும் காத்திருந்தேன்." என்று கூறினான். உடனே அரசர் காவலாளர்களை நோக்கி, 'இவனைக் கைது செய்து அப்பசுங்கன்று கிடக்குமிடத்தில் கிடத்துங்கள்.' என்று உத்தரவிட்டார். அவ்வுத்தரவைக் கேட்ட காவலாளிகள் நடுங்கினர். அரசராஞ்ஞையை யாரே மறுப்பர்!

வீதிவிடங்கன் அரண்மனையினின்று புறப்பட்டுக் காவலாளிகளுடன் வீதியினுட் புகுந்தான். அவன் சிறிதும் மனக்கலக்கமில்லாமல் ஸ்ரீதியாகேசரின் சந்நதியில் நின்று கொண்டு கைகளைக்கூப்பி, "பிரபுவே! ஆதியுமு மந்தமுமற்றுத் தேஜோமயமாய் விளங்கும் தியாகேசா! அகண்ட சச்சிதானந்தப் பொருளே! அன்பே யுருவாயமைந்த அருட்பெருஞ் சோதி! சம்போ! என்று நான் தங்களுடையவனானேனோ அன்றே எனக்கு இன்பமும் துன்பமும் ஒழிந்தனவன்றோ? இந்த ஜன்மத்தில் இதுவே நான் தங்களை மனப்பூர்வமாக ஸ்தோத்திரிக்கத்தக்க கடைசி நாள்! தங்களைத் தரிசிக்கக் கொடுத்து வைக்காத பாபியின் பாபகர்மங்களைத் தாங்களே மன்னிக்கவேண்டும். இன்னும் அஞ்ஞானத்தில் மூழ்கியிருக்கும் பேதையின் மீது கருணை புரிய வேண்டும். தங்களது திருநகரில் பிறந்துள்ள ஓர் அழகிய பசுங்கன்றைக் கொன்ற மகாபாபி யான். இன்னும் எனக்குக் குருவும் என் பிதாவின் அமைச்

சருமான கலாவல்லவரின்கொலைக்கும் நானே காரணமானேன்! இத்தகைய கொடும்பாபிக்கு என்பிதா செய்யப்போகும் தண்டனை போதியதோ! தயாநிதே! தாங்களே என்னை க்ஷமித்தருளவேண்டும்.

"தங்களையல்லாமல் வேறெத்துணையையும் நானறியேன்! தங்களுடைய பாதார விந்தத்தில் அடியேனைச்சேர்த்துக் கொள்ளவேண்டும். என்பிறவி தீரவேண்டும்.

ஐயனே! நான் தங்களைப் பிரிந்திரேன். தங்களது பாதாரவிந்தம் எனக்குக் கிடைக்கவேண்டும். பிரபுவே! என்னால் என்பிதாவுக்கும் என் வம்சத்துக்கும் ஏற்பட்டுள்ள வசையை மாற்றித் தரல்வேண்டும்! பிரபோ! இதோ! இதோ! இப் புலாலுடம்பைப் போட்டு விட்டு வருகின்றேன். தாமே எனக்கு எல்லாமும்..."

என்று பிரார்த்தித்துத் தன் அன்னை, பிதா, குரு, முதலானோர்களுக்கு மனதாலேயே நமஸ்காரஞ் செய்து ஐந்தெழுத்தை உச்சரித்துக்கொண்டே போய் வீதியில் வடக்கே தலையும் தெற்கே காலுமாக வைத்துப் படுத்துக்கொண்டான்.

காவலாளிகள் இறந்து கிடந்த பசுங்கன்றை அப்புறப்படுத்தினர்கள். மனிதர்களும் தேவர்களும் இமைகொட்டாமல் கண்களினின்று நீர் தாரை தாரையாய்ப் பொழியப் பார்த்துக் கொண்டே நின்றனர். கதிரவனும் துக்கததிலாழ்ந்தவன் போல்பிரகாசத்தில் குறைந்தவனானன். மனுச்சோழர் பெரியதோர் தேர் மீது ஏறிக்கொண்டு வீதியில் வந்து தியாகேசர் சந்நதியில் கீழே இறங்கி, "சகல புவனங்களையும் படைத்

துக் காத்தழிக்கும் பிரபுவே! உலகமுய்யுமாறு இந்நகரை ராஜதானியாகக் கொண்ட கண்ணுதலே! கோஹத்தி செய்த பாதகனை நீதி நூற்களிற் சொல்லிய வண்ணம் கொலை செய்யப் போகின்றேன். என் திரிகரணங்களுமறியும்படியாக இவ்விஷயத்தில் ஒரு குற்றத்தையும் நான் செய்யவில்லை. அபிமானமென்பதைச் சிறுதும் பார்க்காமல் தர்ம வழியே நான் செல்ல முயல்கிறேன். அப்படியும் ஏதாவது என் மீது குற்றமிருக்குமானால் தாம் தான் க்ஷமித்தருள வேண்டும். இன்னும் கோஹத்தி செய்தவனாகிய அவனையும் கடாக்ஷித்தருள வேண்டும். அவன் இஜ்ஜன்மத்தினிறுதியில் தங்கள் பாதாரவிந்தத்தைச் சேர அருகனல்லாவிடின் அடுத்த ஜன்மத்தையாவது நல்லதாகக் கொடுத்தருளவேண்டும்." என்று பிரார்த்தித்துத் தேர்மீதேறி அதனை வேகமாகச் செலுத்தி நடத்த அதன் உருளைகள் குழந்தையான வீதிவிடங்கன் மீது கறகறவென்றேறி அரைத்தன.

"ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளானேன் பதுமுணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் றேராழி யுறவூர்ந்தான் மனுவேந்த (ன்)
அருமந்த வரசாட்சி யரிதோ? மற்றெளிதோ தான்?

இக் கொடிய காட்சியைக்கண்ட மாந்தர்களின் கண்களினின்று நீர் மழையாகச் சொரிந்தது! தேவர்கள், 'அரசனே! உனக்கு மங்களமுண்டாகுக!' என்று கூறிப் பூமாரிபொழிந்தனர். மன்னவர் தன் மகன் அரைபட்டு நசுக்குண்டு இறந்தொழிந்தானென வறிந்து பின் கலாவல்லவனின் உயிர்க் கொலைக்காகத் தன்னை மாய்த்துக் கொள்ளும் வண்ணம் தேரினின்றும் இறங்கினர்.

## தியாகராஜரின் திவ்வியக்காட்சி.

அச்சமயம் ஆகாயத்தில் வீதிவிடங்கப்பெருமான்,

'சடைமருங்கி லிளம்பிறையுந் தனிவிழிக்குந் திருநுதலும்
இடைமருங்கி லுமையாளு (ம்) எம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும் பெருமையுங்'.............

கொண்டு காட்சி கொடுத்தருளினர். ஆகாயம் முழுமையும் யக்ஷர், கந்தர்வர், கின்னரர் கிம்புருஷர் ஸித்தர், பூதர், பைசாசர் முதலிய சிவகணங்களும், நந்தி, பிருங்கி, முதலிய பிரமதகணங்களும், இந்திரன் முதலிய தேவர்களும், அகஸ்தியர் முதலிய ரிஷிகளும், விக்னேசுவரர் முதலிய பல மூர்த்திகளும் வானத்தில் நிறைந்தனர். பல வாத்தியங்கள் முழங்கின. எல்லோரும் 'ஹர!ஹர! சம்போ!' என்று கூவினார்கள்.

இவ்வைபவத்தைக் கண்ட மனுச்சோழன் புளகாங்கிதமடைந்து, உடம்பில் உரோமஞ்சிலிர்ப்பக் கண்களினின்று ஆனந்தக் கண்ணீர்பொழிய பல தடவைகள் கீழே விழுந்தெழுந்து கைகளைக் கூப்பிக் கொண்டு "என் கண் முன் தோன்றும் கருணாகரா! ஐயனே! மாலயனுக்கும் அரியவனே! நாயினுங் கடையவனான என்னிடம் நீ கொண்டகருணையை என்னென்று சொல்வேன்! சம்போ! உன்னைத் தேடுபவர் பிரமனும் திருமாலும்; உன்னை நாடுபவர் சனகாதி முனிவர்கள்; உன்னைத் தீண்டுபவர் கங்கையும் உமையாளும்; உன்னைப்பாவுபவர் வேதமும் சாஸ்திரங்களும்; அத்தகைய நின் தரிசனம் கிடைத்த என் பாக்கியமே பாக்கியம்! ஹே! தியாகேசா! இப்பூவுலகம்செய்த புண்ணிய வசத்தால் கமலைமாநகரங் காவல்கொண்ட கண்ணுதலே!

"சங்குசக்கரங்களையுடைய மாலும், கற்பகநிழலி லிருந்துகொண்டு பொன்னாட்டைப் புரக்கும் புரந்தரனும விரும்பிச்செய்யும் பூசனையை விரும்பாது இவ்வுலகம் செய்த புண்ணியத்தால் ஆரூரில் ஆலய மேற்படுத்திக்கொண்ட தயாநிதியே! சரணம்! அநித்யமான இவ்வுடலிலேயே அபிமானம் வைத்துக் கொண்டு திரியும் அற்பனிடம் இவ்வளவு கருணைபிறந்ததோ? அன்பனே! பல தேவர்களும் முனிவர்களும் பலவாயிரவாண்டு கடுந்தவம் புரியினுங்கண்ணிற்படாத நீ என்பொருட்டெளிதில் வெளிவந்தனையே! ஐயனே! சங்கரா! இப்பிறவியெடுத்த பயனைப்பெற்றேன்! உய்ந்தேன்! பிரபுவே!..."

என்று பலவிதமாக ஸ்தோத்தரித்து ஆனந்தக்கூத்தாடி நின்றார்.

அச்சமயம் ஈசனது அருளால் இறந்துபட்ட பசுங்கன்றும், கலாவல்லபனென்னும் மந்திரியும, வீதிவிடங்கனும் உயிர்பெற்றெழுந்தனர். இவ்வதிசயத்தைக் கண்ட மாந்தர்கள் யாவரும், 'ஹர! ஹர! சம்போ! மகாதேவ! என்ன உன் கருணை? என்ன உன் பெருமை!' என்று சங்கரனைப் புகழ்ந்தனர். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தனர். ஆகாயத்தில் மங்கலவாத்யங்களொலித்தன.

கருணைக்கடலான தியாகேசன் அரசனை நோக்கி, "அரசனே! உன்செங்கோலின் மேன்மையை எல்லோரும் அறியும் வண்ணம் நாமே இன்று உன்னைப் பரிசோதித்தோம். அறநெறியில் உன்னை விஞ்சிபவர் எவருமில்லை. நீயும் வீதிவிடங்கனும் தீர்க்காயுளடைந்து சகல போகங்களையுமனுபவித்து மெய்யறிவு பெற்றுப்

பின்பு நமது பாதங்களைச் சேர்வீர்களாக!' என்று அனுக்கிரகித்து மறைந்தனர்.

இறந்து பட்ட கன்றும் மந்திரியும் மகனும் உயிர் பெற்றெழுந்ததைக் கண்டு மனுவேந்தர் அடங்கா மகிழ்ச்சி கொண்டு மறுபடியும் இறைவனை ஸ்தோத்தரித்தனர்.

பின்பு தம்மைமந்தனை மார்புடனணைத்து,' 'ஈசனுடைய சேவை செய்து வைத்த மகானுபாவா! உன்னாலன்றோ நான் பெற முடியாதபேற்றை இன்று பெற்றேன்?'' என அவர் புகன்றார். அப்பசுங்கன்று தாயுடன் கூடிற்று. அவைகளை மன்னர் பல முறை வலம் வந்து 'அடைய முடியாத பெரும் பதவியை யளித்த பசுக்களே! உமக்கு யான் செய்யும் கைம்மாறு ஏதோ?' என்று அவைகளுக்குப் புல் நீர் முதலிய உபசாரங்கள் செய்தனர். பின் தன் மந்திரி யருகிற் சென்று அவரை மார்புறத்தழுவி 'என் மகன் உயிருக்குத் தன்னுயிரைத் தந்தருளிய தயாபர! எனக்கு உன்னிலும் இனியார் யாரிருக்கின்றனர்?' என்று கூறினார்.

மாந்தர்களனைவரும் வீதிவிடங்கனருகில் வந்து அவனைப் பல விதமாகக் கொண்டாடினார்கள். அவன் தாய் நடந்த விஷயங்களையெல்லாம கேள்வியுற்று மிக்கவாநந்தத்துடனோடோடியும் வந்து அவனை இறுக வணைத்துக்கொண்டு ஆநந்தபாஷ்பம் சொரிந்தனர். பின்பு அனைவரும் நேராகக் கோயிலுக்குச் சென்று மிக்கப் பக்தியுடன் பூசனைகள் புரிந்து சகல மங்கலங்களுடன் அரண்மனை போய்ச் சேர்ந்தனர்! பொங்கும் மங்களம் எங்கும் தங்கிற்று. சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றிற்று.

# செய்யுள்களுக்கு

## அரும்பதவுரை.

| | | |
|---|---|---|
| அடிகள் | ... | கடவுள் |
| அடு | ... | சமை |
| அயன் | ... | பிரமன் |
| அல்லல் | ... | துன்பம் |
| ஆக | ... | சுற்றம் |
| ஆர் | ... | நிறைவு |
| இடர் | ... | துன்பம் |
| இழை | ... | ஆபரணம் |
| இறைஞ்சு | ... | வணங்கு |
| இறைவன் | ... | கடவுள் |
| ஈறு | ... | முடிவு |
| உய்ய | ... | ஈடேற |
| உள்க | ... | நினைக்க |
| ஊன் | ... | மாமிசம் |
| ஏத்து | ... | துதிசெய் |
| கடிந்து | ... | கோபித்து |
| கண் | ... | இடம் |
| கயல் | ... | மீன் |
| கழல் | ... | பாதம் |
| கறை | ... | நஞ்சு |
| கனகம் | ... | பொன் |
| கூறை | ... | வஸ்திரம் |
| கோடு | ... | கொம்பு |
| கோதை | ... | பூமாலை |
| கைம்மான் | ... | யானை |
| சரோருகம் | ... | தாமரை |
| சழக்கு | ... | அநீதி |
| செம்மல் | ... | புதல்வன் |
| சேய் | ... | மகன் |
| தம்மான் | ... | சுற்றத்தார் |
| திகழ் | ... | பிரகாசி |
| துரியம் | ... | வாத்தியம் |
| தெற்றி | ... | திண்ணை |
| தேசு | ... | ஒளி |
| தொடை | ... | மாலை |
| நிரை | ... | கூட்டம் |
| நுதல் | ... | நெற்றி |

| | | |
|---|---|---|
| படிவம் | ... | உருவம் |
| பண் | ... | இசை |
| பரி | ... | குதிரை |
| பழனம் | ... | நீர்வயல் |
| பிறை | ... | சந்திரன் |
| புண்டரிகம் | | தாமரை |
| புரந்து | ... | காத்து |
| புரந்தரன் | ... | இந்திரன் |
| புரை | ... | உயர்ச்சி |
| புரவலன் | ... | அரசன் |
| புவனம் | ... | பூமி |
| புனை | ... | அழகு |
| பிறை | ... | சந்திரன் |
| பொடித்தல் | | சிலிர்த்தல் |
| பொழில் | ... | சோலை |
| மருங்கு | ... | இடை |
| மருமம் | ... | மார்பு |
| மல்லல் | ... | வலி, வளமை |
| மறுகு | ... | தெரு |
| மறை | ... | வேதம் |
| மன்று | ... | சபை |
| மாயன் | ... | திருமால் |
| மால் | ... | விஷ்ணு |
| மாற்றம் | ... | சொல் |
| வளவன் | ... | அரசன் |
| வாசவன் | ... | இந்திரன் |
| வாளா | ... | சும்மா |
| விகிர்தன் | ... | பரிசுத்தன் |
| விச்சை | ... | அறிவு |
| விடை | ... | இருடபம் |
| வித்தகம் | ... | ஞானம் |
| விமலன் | ... | அழுக்கில்லா [தவன் |
| வீய | ... | சாக |
| வெறி | ... | மணம் |
| வேணி | ... | சடை |
| வையம் | ... | பூமி |

TB 031(6) N28

# பிழையும் திருத்தமும்.

| பக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| iv | wonder | wonderful |
| | Divintty | Devotion |
| 1 | பொழிலாருரிற் | பொழிலாரூரிற் |
| 3 | தலைசிமிர்ந்கி | தலைசிமிர்ந்து |
| | உயர்ந்திருக்கிஷ | உயர்ந்திருக்கின் |
| 8 | பரந்து | பரந்த |
| 15 | பத்மனுபன் | பத்மநாபன் |
| 31 | பிள்ளன | பிள்ளை |
| 42 | பசடாதே | பாடாதே |
| 43 | பார்வித்து | பாவித்து |
| 44 | திருநாலூவரர் | திருநாவலூரர் |
| 48 | கொள்ள | கொள்ளை |
| 53 | அவன் | அவள் |
| 60 | அகன் | அதன் |
| 77 | ஆரவா ரத்தனர் | ஆரவாரித்தனர் |
| | உரைப்பருரை | உரைப்பாருரை |
| 79 | கடக்கும் | கிடக்கும் |
| 85 | தேற்கால் | தேர்க்கால் |
| 87 | மன்னுயிற் | மன்னுயிர் |
| 91 | விதிக்கலாடு மன்றும் | விதிக்கலாகு மென்[றும் |
| | என்றீா | என்றும் புகன்றீர் |
| 104 | ஆக=சுற்றம் | ஆசு=குற்றம். |

86260

# அபிப்பிராயங்கள்.

சேது சமஸ்தானப் புலவரும், சிதம்பரம் மீனாக்ஷி காலேஜ் பிரதமத்தமிழ்ப் பண்டிதருமான

ஸ்ரீமான்

சர்க்கரை இராமசாமிப் புலவரவர்கள்

இயற்றியது.

மன்னர்புக ழாங்கிலந்தேர் வார்கண்மநு நீதிகண்ட
வளவன் முன்னாத்
தன்னிகர்செங் கோல் வேந்தர் சரிதாதி யிதிகாச
சார மெல்லாம்
பன்னுமகங் கைக்கனிபோற் படித்தறிந்து மெய்ஞ்
பரவை மூழ்க [ஞானப்
வுன்னிமறை யோர்திலகன் விசுவநா தன்னெழுதி
யுதவினானே.

VELLORE,
21—8—18

I had a delightful half hour with you[r] CHOLA KING. It is the sort of booklet th[at] appeals to young minds and the booklet shoul[d] be read by every school-going child. Hop[e] your other booklets would be equally useful.

Yours sincerely,

V. R. Duraiswami Sastri, M. A., L. T.,

*Assistant Inspector of Schools,*

**NORTH ARCOT**